

# நீட்சி பெறும் சொற்கள்

லறீனா அப்துல் ஹக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீட்சி பெறும் சொற்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீட்சி பெறும் சொற்கள்

லறீனா அப்துல் ஹக்

மணற்கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீட்சி பெறும் சொற்கள் ◆ கட்டுரைகள் ◆ லறீனா அப்துல் ஹக் ◆ © லறீனா அப்துல் ஹக் ◆ முதல் பதிப்பு: செப்டம்பர் 2015 ◆ பக்கங்கள்: 112 ◆ வெளியீடு: மணற்கேணி பதிப்பகம், முதல் தளம், புதிய எண்: 10, பழைய எண்: 288, டாக்டர் நடேசன் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை – 600005, பேசி: 9443033305, மின்னஞ்சல்: manarkeni@gmail.com ◆ அட்டை ஓவியம்: அர்பிதா பாசு ◆ வடிவமைப்பு: ஆதி ◆ அச்சாக்கம்: அகரம், தஞ்சாவூர்.

**விலை: ரூ. 80**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


என்னுரை ........................................ 9

அணிந்துரை ........................................ 11

1. குமாரி ஜயவர்தனவின் ஆய்வுலகம்:
சில அறிமுகக் குறிப்புகள் ........................................ 15

2. அழகுத் தமிழில் அரபுக் கதைகள் ........................................ 27

3. ஊடறு.கொம்: விழுமிய வாழ்தலை நோக்கி... ........................................ 37

4. மொழியின் விடியலை முழங்கும் குரல்கள் ........................................ 43

5. 'ஊருக்கு நாலு ஆளுமைப் பெண்கள்' ........................................ 54

6. மழைமரத் தவத்தில் திளைத்தபடி ........................................ 62

7. ஈழத்துக் கவிதை இதழ்கள் வரிசையில்
'கவிஞன்' இதழ்: சில குறிப்புகள் ........................................ 76

8. யாதுமாகி நிற்கும் ஓர் 'இளைய பாரதி' ........................................ 86

9. இலங்கையின் இக்பால், புலவர் அப்துல் காதர்
லெப்பை (1913-1984) ........................................ 91

10. நீட்சி பெறும் சொற்கள் ........................................ 104



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2014 ஆகஸ்ட் 15ஆம் திகதி*
இறையடி சேர்ந்த
"மாத்தளை ஃபர்வீன்" என்ற புனைப்பெயரில்
எழுதிவந்தவரும், ஃபௌசுல் ஹினாயா என்ற
இயற்பெயர் கொண்டவருமான
என் அன்னையின் நினைவுகளுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

கவிதை, சிறுகதை, நாவல், ஆய்வு என நாம் வாசிக்கும் நூல்கள் பலதரப்பட்டவை. அவற்றில் எல்லாமே நம் மனதை ஆட்கொண்டு விடுவதில்லை. சில நூல்கள் நம்மை மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும். நம் உள்ளத்தில் பல்வேறுபட்ட எண்ண அலைகளை, உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்து விடும். அத்தகைய நூல்கள் நம் மனதுக்குள் சுற்றிச் சுழன்றபடியே இருக்கும், தமக்கான சொற்கள் வாய்க்கும் வரை. அவ்வாறு நான் வாசித்த, என்னைப் பாதித்த சில நூல்கள் பற்றி உள்ளுக்குள் உழன்றபடி இருந்த எண்ணங்கள், சொற்களாய் நீட்சிபெற்றதன் விளைவே இந்தத் தொகுதியாகும்.

இதில் எல்லாமாக 10 கட்டுரைகள் உள்ளன. இவை வெவ்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்டவை. எந்த மாற்றமும் இன்றி பிரசுரமான சில கட்டுரைகள் எந்த நூலில் இடம்பெற்றன என்பதைக் கட்டுரைகளின் அடியிலேயே குறிப்பிட்டுள்ளேன். அந்தவகையில், “குமாரி ஜயவர்தனவின் ஆய்வுலகம்: சில அறிமுகக் குறிப்புகள்”, “அழகுத் தமிழில் அறபுக் கதைகள்”, “மழைமரத் தவத்தில் திளைத்தபடிஞ்”, “ஈழத்துக் கவிதை இதழ்கள் வரிசையில் ‘கவிஞன்’ இதழ்: சில குறிப்புகள்” என்பன உள்ளடங்கும்.

“இலங்கையின் இக்பால், புலவர் அப்துல் காதர் லெப்பை” எனும் கட்டுரை 2013ஆம் ஆண்டு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற “பூரணவாழ்வு” நூல்வெளியீட்டின் போது நான் நிகழ்த்திய மதிப்புரையின் விரிவாக்கமாக இந்நூலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறுகின்றது. ஏனைய கட்டுரைகள் பிரசுரமான வடிவத்தில் இருந்து முற்றிலும் திருத்தப்பட்டு இந்நூலில் இடம்பெறுகின்றன. அக்கட்டுரைகளுக்குக் களம் தந்த மல்லிகை, மணற்கேணி, பெண், ஊடறு டொட் கொம், நிலாப்பெண் டொட் கொம், முதலான இதழ்கள் மற்றும் இணைய தளங்களுக்கு மனமார்ந்த நன்றி.

மேலும், இந்நூலுக்கு மிகக் குறுகிய கால அவகாசத்தில் பல்வேறு வேலைப் பளுவுக்கும் நடுவில் ஓர் அருமையான அணிந்துரையினை எழுதித்தந்துள்ள பேராசிரியர் யோகராசா அவர்களுக்கும், இந்நூலை மனமுவந்து பதிப்பித்துத்தந்த மணற்கேணி பதிப்பக உரிமையாளர் சகோதரர் ரவிக்குமார் அவர்களுக்கும் என் மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவர்களைத் தவிர என் எழுத்து முயற்சிகளுக்கு எப்போதும் ஆக்கமும் ஊக்கமும் தந்துவரும் சகோதர உள்ளங்கள் அனைத்துக்கும் என் அன்பு.

மிக்க அன்புடன்,

**லறீனா**

*15.08.2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

ஒரு பல்கலைக்கழக ஆசிரியன் என்ற வகையில் இந்த நூலின் வரவினை முக்கியத்துவமான தொன்றாகக் கருதுகின்றேன். ஈழத்தில் தமிழை விசேட கற்கைநெறியாகப் பயிலும் பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் தமது தேர்வுத் தேவைக்காக ஆய்வுக் கட்டுரையொன்றைச் சமர்ப்பிப்பது வழக்கமாகும். தேர்வு முடிந்தபின் ஒரு சிலரே அதனை நூலுருவில் கொண்டுவருகின்றனர். இந்நூலாசிரியையும் "செ. கணேசலிங்கனின் அண்மைக்கால நாவல்களில் பெண் பாத்திரங்கள்: ஒரு பெண் நிலை நோக்கு" எனும் தனது இளங்கலை மாணிப்பட்ட ஆய்வினை நூலாகக் கொண்டுவந்து, பலரது பாராட்டையும் பெற்றுக்கொண்டார். இவ்வாறு தமது கன்னி ஆய்வினை நூலுருவில் வெளிக்கொணர்ந்தோர்கூட தொடர்ந்தும் வாசிப்பிலோ எழுத்து முயற்சியிலோ ஈடுபடுவது அரிதானதாகவே காணப்படுகின்றது. இந்நிலையில், இந்நூலாசிரியை தொடர்ந்து ஆய்வு முயற்சிகளில் ஈடுபடுவது முதல், மொழிபெயர்ப்பு முயற்சிகள், படைப்பிலக்கிய முயற்சிகள் எனப் பல்துறை எழுத்து முயற்சிகளிலும் ஈடுபட்டு வருபவர். இவர் இதுவரை எட்டு நூல்களை வெளியிட்டிருப்பது இதற்கான சான்றாகும்.

அதுமட்டுமின்றி, இன்றைய ஈழத்துப் பல்கலைக் கழக மாணவர்கள் தாய்மொழி — தமிழ்மொழிப் புலமையைக்கூட போதியளவு வளர்த்துக்கொள்ளாத இன்றைய சூழலிலே இந்நூலாசிரியை தமிழில் மட்டுமின்றி ஆங்கிலப் புலமையும் சிங்களப் புலமையும் மிகுந்தவர் என்பதற்கும் அவரது எழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகள் சான்று பகர்கின்றன. மேற்கூறிய ஆரோக்கியமான சூழலில் இந்நூலின் வரவினால் எனக்கு மனமகிழ்ச்சியும் மனத்திருப்தியும் ஏற்படுவது இயல்புதான், அல்லவா?

இந்நூலில் இடம்பெற்றுள்ள பத்துக் கட்டுரைகளும் ஆளுமை சார்ந்தும் கவிதை, நாவல், சஞ்சிகை, மொழிபெயர்ப்பு எனப் பல்துறை சார்ந்தவையாகவும் உள்ளன. இக்கட்டுரைகள் "தேர்வு" அடிப்படையிலும், "முக்கியத்துவம்" என்ற அடிப்படையிலும் கவனத்திற்குரியனவாகி நூலிற்குக் கனதி சேர்ப்பனவாகவுள்ளன.

ஆளுமை என்ற விதத்தில் இந்நூலில் உள்ள முதற் கட்டுரை யானது, ஈழத்தின் முக்கிய ஆய்வாளர் என்ற விதத்திலும், பெண் ஆய்வாளர்களுள் மிக முக்கியமானவர் என்ற விதத்திலும் கவனிக்கப்படவேண்டிய குமாரி ஜயவர்தன பற்றியது. இவர் பற்றித் தமிழில் அறிந்திருப்போர் சிலரே. அவர்கள்கூட அவர் பற்றிச் சரியாக அறிந்திருக்க மாட்டார்கள். இந்நிலையில், அவரது ஆய்வுலகு பற்றி இந்நூலாசிரியை முழுமையாக அறிமுகப்படுத்தி இருப்பது குறிப்பிடப்பட வேண்டியதாகின்றது.

தமிழிலே ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க இலக்கியங்கள் பற்றி அறியப்பட்ட அளவுக்கு அரபு இலக்கியங்கள் பற்றி அறியப்பட்டிருப்பது அரிது. இந்நிலையில், அவை பற்றிய இரு கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றிருப்பது பாராட்டிற்குரியதே!

அஷ்ரஃப் ஷிஹாப்தீன் மொழிபெயர்த்துள்ள அரபுச் சிறுகதைகள் அடங்கிய நூல் பற்றிய கட்டுரையின் ஆரம்பத்தில் இந்நூலாசிரியை அரபு இலக்கியம் பற்றி மிக விரிவாகக் குறிப்பிட்டி ருப்பது பயன்மிகுந்தது. ஈராக், எகிப்து, சூடான், சிரியா, பலஸ்தீன், யேமன், மொரோக்கோ முதலான அரபு நாடுகளில் வெவ்வேறு காலகட்ட மக்களது வாழ்க்கைக் கோலங்களை மொழிபெயர்ப்பாளர் 'தான் கலந்து' தமிழில் தந்திருப்பதன் சிறப்புகளை இவர் தனது கட்டுரையில் மிகச்சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார். அத்துடன், நமது மண்ணுக்குப் பொருத்தமான கூறுகளையும் அதில் எடுத்துக்காட்டி இருக்கிறார்.

அரபுக் கவிதைகள் ஏற்கெனவே தமிழில், குறிப்பாக ஈழத்தில் எம். ஏ. நுஃமான், சி. சிவசேகரம் முதலானோர் மூலம் அறிமுகமாகி இருப்பினும், அவர்கள் கவனத்துக்குட்படாத அரபுக் கவிஞர்கள் சிலர் உட்பட பல அரபுக் கவிஞர்களைத் தமிழிற்கு அறிமுகப்படுத்தியுள்ள ரவிக்குமாரின் "குரல் என்பது மொழியின் விடியல் — அரபுக் கவிதைகள்" நூல் பற்றிய அறிமுகமும் இந்நூலிற்குப் பொலிவு தருகின்றது. ரவிக்குமார் மொழிபெயர்த்துள்ள பிரபலக் கவிஞர் நிஸார் கஃப்பானி, தமிழில் புதிதாய் அறிமுகப்படுத்தியுள்ள கவிஞர் லேனா கலாஃப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுஃப்பாஹா என்ற கவிஞர்கள் பற்றி பெண்நிலை நோக்கில் அவர்களது கவிதைகள் பெறும் முக்கியத்துவம் பற்றி விரிவாக இந்நூலாசிரியை விளக்குவதும் விதந்துரைக்கத்தக்கதே!

மேலும், அரபுக் கவிதைகளின் உலகளாவிய பொதுமை பற்றியும் அவை ஈழத்திற்கும் பொருந்துவது பற்றியும் நூலாசிரியை பொருத்தமான உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுவதும் சிறப்பாக அமைந்துள்ளது. ஓரிரு கவிதைகளின் கவிதா அனுபவத்தை யாழ். முஸ்லிம்களின் வெளியேற்றத்துடனும் முள்ளிவாய்க்கால் தமிழ் மக்களது பேரவலத்துடனும் நினைவுகூர்வதன் கனகச்சிதமான பொருத்தப்பாடு ஒருபுறமிருக்க, அது நூலாசிரியையின் நேர்மையான, நடுநிலைமையான பார்வைச் சிறப்பையும் வாசகருக்குணர்த்தி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழில் சில காலங்களுக்கு முன்னர் வந்த இரு கவிதை நூல்களை அறிமுகம் செய்கின்ற இரு கட்டுரைகளும் இத்தொகுப் பிலே உள்ளன. இவற்றுள் ஒன்று ரவிக்குமாரின் "மழைமரம்" பற்றியது. கவிஞரது உணர்ச்சி வெளிப்பாட்டுச் சிறப்புகளையும் தேர்ந்த சொற்களைத் தேர்வதில் கவிஞருக்குள்ள தனித்துவத்தையும் பற்றி விரிவாக இக்கட்டுரையில் எடுத்துரைக்கின்றார், நூலாசிரியை. மற்றுமொரு கட்டுரை கவி இளவல் தமிழ் (இரா. அரவிந்தன்) எழுதிய "யாதுமாகி நின்றேன்" என்ற நூல் பற்றிய அறிமுகம். கூடுதலாக பாரதியார் கவிதைகளுடன் தொடர்புபடுத்தி இக்கவிதைகளை அணுகி இக்கட்டுரையை எழுதியுள்ளார், நூலாசிரியை.

ஈழத்தின் முக்கியமான நாவலாசிரியரான திக்குவல்லைக் கமாலின் அண்மைக்கால நாவலாகிய "ஊருக்கு நாலு பேர்" பற்றிய அறிமுகம் சார்ந்தும் இத்தொகுப்பிலே ஒரு கட்டுரை இடம்பெற்றுள்ளது. இலங்கை முஸ்லிம் பெண்களது சமூகநிலை நின்று இந்நூலினை இந்நூலாசிரியை அணுகியிருப்பது பொருத்தமானதொன்றே.

ஈழத்தின் முக்கியமான படைப்பாளருள் ஒருவரான புலவர் அப்துல் காதர் லெப்பை (1913—1984) ஒரு சிறந்த சிந்தனையாளர் என்பது பலராலும் அறியப்படாத செய்தியாகும். இந்நிலையில் அவரெழுதி, அண்மையில் வெளிவந்த பூரணவாழ்வு (2013), போராட்டச் சிந்தனைகள் (2011) எனும் நூல்களை அறிமுகம் செய்வதனூடாக, நூலாசிரியை அவரது ஆளுமையைச் சிறப்பாக எடுத்துக்காட்ட முற்படுகின்றார். "இலங்கையின் இக்பால்: புலவர் அப்துல் காதர் லெப்பை (1913—1984)" என்ற கட்டுரை அது பற்றியதே! மேற்கூறிய இரண்டாவது நூல் புலவர் அப்துல் காதர் லெப்பை அவர்களை ஈழத்தின் முக்கியமான ஆரம்பகால


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்நிலைவாதச் சிந்தனையாளராகவும் இனங்காட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது; விரிவான ஆய்வுக்குரியது.

இந்நூலிலுள்ள வேறிரு கட்டுரைகள் ஈழத்துச் சஞ்சிகைகள் தொடர்பானவை. ஒன்று இணையதளச் சஞ்சிகையான "ஊடறு"வின் சமூக இலக்கியப் பங்களிப்புப் பற்றிய விரிவான ஆய்வாகவுள்ளது. இணையதளச் சஞ்சிகைகளை எல்லோரும் பார்க்க முடியாத சூழலில் இதுபற்றிய அறிமுகம் அவசியமானது; பயன் மிகுந்தது. மற்றொரு கட்டுரை ஈழத்தில் வெளிவந்த மூன்றாவது கவிதைச் சஞ்சிகையான "கவிஞன்" பற்றியது. பலரும் மறந்துவிட்ட அச்சஞ்சிகையின் சிறப்புகளை முன்னைய சஞ்சிகைகளுடன் (தேன்மொழி, நோக்கு) ஒப்பிட்டு விரிவாக ஆராய்கின்றார், நூலாசிரியை..

அடுத்து, நாடக ஆய்வாளராகவும் பல்கலைத் தமிழ்ப் புலமையாளராகவுமே பலராலும் அறியப்பட்ட ஈழத்துப் பேராசிரியர் சி. மௌனகுரு ஒரு சிறந்த எழுத்தாளர் என்பதனையும் எடுத்துக்காட்டுகிறது அவரெழுதிய சார்வாகன் எனும் குறுநாவல் பற்றிய அறிமுகம். அந்நூலானது பொதுமக்கள் சார்பாக கலகக்குரல் எழுப்பியவனாக, நீதிக்காக சாத்வீகக் குரலை எழுப்பியவனான சார்வாகனை இனங்காட்டுவது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக, இந்நூலிலுள்ள பத்துக் கட்டுரைகளையும் மேலோட்டமாக வாசிக்கும் ஒருவருக்கு அவை வெவ்வேறு சுவைதரும், ரசனை நோக்கிலான கட்டுரைகளாகவே காட்சிதரும். எனினும், அவற்றை ஆழ்ந்து வாசிக்கும் போதுதான் அவற்றினூடே ஆய்வுப் பார்வையும் விமர்சனப் பார்வையும் ஒப்பியல் பார்வையும் அடிச்சரடுகளாக இழையோடுகின்றமை புலப்படுமென்பதையும் கூறியாக வேண்டும்.

இந்நூலாசிரியை தொடர்ந்தும் தாம் ஈடுபடும் துறைகளிலே ஆர்வத்துடன் பயணித்து வலுவான — வளமான தடங்களை ஈழத்து இலக்கிய உலகில் ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். அதற்கான ஆற்றலும் ஆளுமையும் அவரிடம் நிறைவாகவே உள்ளன.

வாழ்த்துக்களுடன்,

பேராசிரியர் **செ. யோகராசா**
சிரேஷ்ட விரிவுரையாளர்
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1. குமாரி ஜயவர்தனவின் ஆய்வுலகம்: சில அறிமுகக் குறிப்புகள்

## அறிமுகம்

*1931ஆம் ஆண்டு பிறந்த குமாரி ஜயவர்தன தன்னுடைய இடைநிலைக் கல்வியை இலங்கையில் பூர்த்திசெய்துவிட்டு 1952ஆம் ஆண்டு லண்டன் பொருளியல் கல்லூரியில் இணைந்தார். 1955ஆம் ஆண்டு பொருளியலில் இளங்கலைமாணிப்பட்டம் பெற்ற அவர் 1958 ஆண்டு பாரிஸ்டர் பட்டமும் பெற்றார். 1956ஆம் ஆண்டு பாரிஸில் அமைந்துள்ள அரசறிவியல் துறைக் கல்லூரியில் பட்டப்பின் படிப்பை மேற்கொண்ட குமாரி, 1964ஆம் ஆண்டு லண்டனில் தனது கலாநிதிப் பட்டக் கற்கையைப் பூர்த்திசெய்தார்.*

*1969 முதல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல்துறை மற்றும் பெண்கள் தொடர்பான கற்கைகளில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய குமாரி ஜயவர்தன, 1985இல் ஓய்வுபெறும்போது இணைப் பேராசிரியராக ஆகியிருந்தார். 1980—82 காலப்பகுதியில் நெதர்லாந்தின் ஹேய்க் நகரில் அமைந்துள்ள சமூகக் கற்கைகளுக்கான கல்விநிறுவனத்தில் பெண்கள் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கு வருகைநிலை விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பெண்கள் ஆய்வு நிறுவனங்கள் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் பலவற்றுடன் இணைந்து பணியாற்றியுள்ள இவர், இனத்துவ, பால், சாதி முதலான அம்சங்கள் தொடர்பில் இயங்கிவரும் புத்திஜீவிகளால் உருவாக்கப்பட்டு இயங்கிவரும் இலங்கையின் சமூக அறிவியல் அமையத்தின் செயலாளராகவும் கடமையாற்றி வந்துள்ளார்.

## குமாரி ஜயவர்தனவின் ஆய்வுலகம்

கலாநிதி குமாரி ஜயவர்தன 6 முக்கியமான நூல்களை எழுதியுள்ளதோடு, *Embodied Violence - Communalising Women's Sexuality in South Asia. (Co-edited with Malathi de Alwis)*எனும் நூலில் இணைப் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்துள்ளார். அவரது நூல்கள் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவர் எழுதிய நூல்களின் விபரம் வருமாறு:

1) *Feminism and Nationalism in the Third World. London: Zed Books, 1986.*
2) *The White Woman's Other Burden - Western Women and South Asia During British RuleNew York: Routledge, 1995.*
3) *Erasure of the Euro-Asian: Recovering Early Radicalism and Feminism in South Asia, Colombo: Social Sciences Association <http://opac.lib.seu.ac.lk/cgi-bin/koha/opac-search.pl?q=pb:Social%20Sciences%20 Association> 2007*
4) *From Nobodies to Somebodies - The Rise of the Bourgeoisie in Sri Lanka. Colombo: Social Scientists' Association, 1998.*
5) *The Rise of the Labor Movement in Ceylon. North Carolina: Duke University Pres, 1972.*
6) *Ethnic and Class Conflicts in Sri Lanka. Colombo: Centre for Social Analysis, 1985.*

தென்னாசிய நாடுகளில் அல்லது மூன்றாம் உலக நாடுகளில் பெண்ணிய மற்றும் ஜனநாயகச் செல்நெறியினை மட்டிடுவதிலும் அவை குறித்த வரலாற்றுக் கண்ணோட்டத்துடனான தெளிவினை வழங்குவதிலும் குமாரி ஜெயவர்தனவின் நூல்கள் மிகப்பெரும் பங்காற்றுகின்றன என்றால் அது மிகையல்ல. இனம், வர்க்கம், பால்நிலை சார்ந்த அம்சங்கள் எவ்வாறு ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து தொழிற்படுகின்றன என்பதைத் தெளிவுறுத்தி, மூன்றாம் உலக நாடுகளின் தேசியவாத அரசியல் எழுச்சிப் போக்கினை அவர் முன்வைக்கும் விதம் அலாதியானது. இந்தப் பின்னணியில் அவர் எழுதிய நூல்கள் குறித்துத் தனித்தனியே சுருக்கமாக நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமாரி ஜயவர்தனவின் பெண்ணிய நூல்கள்

பெண்ணியம் சார்ந்து குமாரி ஜயவர்தன எழுதியுள்ள நூல்களில் மூன்று நூல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவற்றுள், *Feminism and Nationalism in the Third World* மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நூலாகும். 1986ஆம் ஆண்டு சிறந்த பெண்ணிய நூலுக்கான பிரித்தானிய விருதினை இந்நூல் பெற்றுக்கொண்டது. மேலும், 1970—90களில் வெளியான மிகச் சிறப்புவாய்ந்த 20 பெண்ணிய நூல்களுள் ஒன்றாக இந்நூலை 1992ஆம் ஆண்டு அமெரிக்காவின் “மிஸ் மெகஸின்” இதழ் அடையாளப்படுத்தி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பெண்ணியம் என்றதும் அது ஒரு மேலைத்தேயக் கருத்தியல் என்பதே காலங்காலமாக நமது பொதுப்புத்தியில் உறைந்து போயுள்ள நம்பிக்கையாகும். எனினும், இந்த எண்ணத்தைக் குமாரி ஜயவர்தன தனது நூலில் கட்டுடைப்புச் செய்கின்றார். 19ஆம் நூற்றாண்டின் 80கள் வரையான காலகட்டத்தில் ஆசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைத் தமது ஆய்வுக்கு உட்படுத்தி, அங்கு நிலவிய பெண்ணியச் சிந்தனை தொடர்பில் விரிவாக வரலாற்றுத் தகவல்களைப் பதிவுசெய்கின்றார்.

அந்த வகையில் இலங்கை, இந்தியா, சீனா, இந்தோனேசியா, ஈரான், எகிப்து, துருக்கி, வியட்நாம், ஜப்பான், கொரியா, பிலிப்பைன் முதலான நாடுகளில் பெண்ணுரிமை இயக்கங்கள் தோன்றிய வரலாறு பற்றி இந்நூல் ஆய்வு செய்கின்றது. அதனடியாக, பெண்ணியம் என்ற கருத்தியல் பெரும்பாலானோர் கருதிக்கொண்டு இருப்பதுபோல், மேலைத்தேயத்தில் இருந்து உள்வாங்கப்பட்ட ஒன்றல்ல; மாறாக, சமூகத்திலும் குடும்ப அமைப்பிலும் பெண்ணடிமைத்தனத்துக்கு எதிராகவும் சம உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவுமான பொதுவான போராட்டம் ஆசிய, மத்தியகிழக்கு நாடுகளில் ஏலவே நிலைகொண்டுவந்துள்ளது என்பதை இவர் தனது ஆய்வுகளினூடே நிரூபித்துக் காட்டியுள்ளமை விதந்துரைக்கத்தக்கது.

இவ்வாறாக, ஆசிய நாடுகளில் நிலவிவந்த பெண்ணியக் கருத்தியலை வரலாற்று ரீதியில் பதிவுசெய்துள்ள இந்நூல், பெண்ணியக் கற்கைகள் தொடர்பில் உலகெங்கிலும் உள்ள கல்விபீடங்களில் உசாத்துணையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை அதன் காத்திரத்தன்மைக்கு எடுத்துக்காட்டாகும்.

அவரது *The White Woman's Other Burden,* பெண்ணியம் சார்ந்து எழுந்த மற்றொரு முக்கிய நூலாகும். இந்நூல், பிரித்தானியக் காலத்துவ ஆட்சிக் காலத்தில் தென்னாசிய நாடுகளில் வாழ்ந்த,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றிய ஆங்கிலேயப் பெண்மணிகளின் வாழ்நிலையின் குறுக்குவெட்டுமுகத் தோற்றத்தை ஆராய்கின்றது. அந்த வகையில், மிர்ரா ரிச்சர்ட், அன்னி பெசன்ட், ஹெலனா ப்ளாவட்ஸ்கி. கதரினா மாயோ, மெடலீன் ஸ்லேட் முதலானோரின் வாழ்க்கை வரலாற்றினை முன்வைத்து காலனித்துவ ஆட்சிக்காலத்தில் நிலவிய இனம், வர்க்கம், பால் சார்ந்த அம்சங்கள் தொடர்பில் விரிவான ஆய்வினை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது.

அக்காலத்தே இந்தியாவில் வாழ்ந்த, தமது சமகாலத்தவரான அனைத்துப் பெண்களினதும் நலவுரிமைகளின் பொருட்டுக் குரல் எழுப்பிய, உள்ளூர் மக்களின் சமயப் பண்பாட்டு விழுமியங்களைப் போற்றிய ஆங்கிலேயப் பெண்கள், உள்ளூர் மக்களின் மரபுகள் மத நம்பிக்கைகளை எள்ளிநகையாடும் இயல்புடைய, கடும்போக்குடைய ஆங்கிலேயப் பெண்கள் என இருவகையான போக்குடைய பெண்களைப் பற்றியும் இந்நூலில் இவர் அடையாளப்படுத்துகின்றார்.

ஐந்து அத்தியாயங்களை உள்ளடக்கியுள்ள இந்நூலின் முதலாவது அத்தியாயம், கல்வி மற்றும் மதமாற்றத்தினூடே தென்னாசிய சமூகங்களைக் கிறிஸ்தவ மயப்படுத்தவும் நவீன மயப்படுத்தவும் முனைந்த கிறிஸ்தவ் மிஷனரிகளின் பணிகளைப் பற்றியும், இரண்டாவது அத்தியாயம், மதசார்பற்றோரான தீவிரப் பெண்ணிலைவாதிகள், பெண் வைத்தியர்கள் முதலான தென்னாசியாவின் பெண் சமூகப் புனரமைப்பாளர்களின் பணிகள் குறித்தும் பதிவுசெய்கின்றது. அவற்றுள், பால்ய விவாகம், பெண்கள் சுகாதாரம் தொடர்பான துறைகளில் அவர்கள் மேற்கொண்ட விழிப்புணர்வூட்டும் பணிகள் முக்கியமானவை. கிறிஸ்தவ மதமே உண்மையான ஒரே மதம் என்ற கொள்கையை மறுதலித்து, கீழைத்தேய மரபுகளினடியாய் ஆன்மீக தேடலை மேற்கொண்ட இறையியலாளர்கள் மற்றும் கீழைத்தேயவாதிகளான பெண்களைப் பற்றி மூன்றாம் அத்தியாயம் அலசுகின்றது. “கறுப்புக் கடவுளரைத் தேடும் வெள்ளைப் பெண்கள்” குறித்து நான்காம் அத்தியாயம் பேசுகின்றது. இந்தியாவைத் தமது வாழ்நாள் உறைவிடமாய் வரித்துக்கொண்ட பெண்கள் இந்த அத்தியாயத்தில் இடம்பெறுகின்றனர். நிவேதிதா தேவி, மீரா பென், மிர்ரா ஆரோபின்டோ ஆகியோர் இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். இந்நூலின் இறுதி அத்தியாயம், எவ்லின் ரோய், டொரீன் விக்ரமசிங்ஹே, எக்னஸ் ஸ்மெட்லி உள்ளிட்டு, இலங்கையிலும் இந்தியாவிலும் இடதுசாரிப் புரட்சிகர அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றிய பல பெண் சமூகச் செயற்பாட்டாளர்களைப் பற்றி ஆராய்கின்றது.

இந்நூலில் இவர் எடுத்தாண்டுள்ள பெண்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தவரையில், வெறுமனே நல்ல — தீய என்ற இரு வகைமைக்குள் அடக்கிய ஒற்றைப் பரிணாமப் பார்வையோடு அமையாமல், அவர்களின் பன்முகப்பட்ட பண்புசார் நடத்தைகளையும் செயற்பாடுகளையும் ஆழமாக ஆராய்ந்து செல்கின்றமை இந்நூலின் தனிச் சிறப்பம்சமாகும். அந்தவகையில், இப்பெண்களின் செயற்பாடுகளில் உள்ள குறைநிறைகளைப் பற்றிக் காய்தல் உவத்தல் இன்றி மிக விரிவாகப் பதிவுசெய்துள்ளார். இதன்போது சமய, சமூக, கலாசார ரீதியாகவும் தாராண்மைவாத, புரட்சிகர, பெண்ணியக் கொள்கை சார்ந்தும் அப்பெண்களில் செல்வாக்குச் செலுத்திய பின்புலங்களையும் மிக நுணுக்கமாகக் கவனப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், வித்தியாசமான குணாம்சங்களுடைய இப்பெண்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் பொதுப்புள்ளி "கல்வி" ஆகும் எனக் காட்டியுள்ள குமாரி ஜயவர்தன, ஆணாதிக்கத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான போராட்டம், பெண்ணடக்குமுறை, பெண்கள் சுரண்டப்படுதல் மற்றும் பிற சமூகச் சீர்கேடுகளுக்கு எதிராகக் குரல் எழுப்புதல் என்பன தொடர்பிலும் தேசிய சுதந்திரப் போராட்டச் செயற்பாடுகளிலும் இந்த ஆங்கிலேயப் பெண்மணிகளின் வகிபாகம் எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது என்பதையும் வரலாற்றின் பக்கங்களில் திறன்படப் பொறித்துள்ளார் எனலாம்.

பெண்ணியம் தொடர்பில் இவர் எழுதிய மற்றொரு சிறந்த படைப்பு என *Erasure of the Euro-Asian: Recovering Early Radicalism and Feminism in South Asia* நூலினை அடையாளப்படுத்தலாம். இந்த நூலில் இடம்பெற்றுள்ள *Euro-Asian* (ஐரோ—ஆசிய) எனும் சொல்லாடலை முதன்முதல் அறிமுகப்படுத்தியவரும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

அடையாள உருவாக்கம், ஆணாதிக்கம், இனத்துவம் முதலானவற்றுக்கு இடையிலான நுணுக்கமான தொடர்பினை ஆராயும் இந்நூல், மூன்று முக்கிய பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. இந்நூலின் முதலாவது பிரிவு தென்னாசிய நாடுகளைக் குடியேற்ற நாடுகளாகக் கொண்ட போர்த்துக்கேய, ஒல்லாந்து, பிரித்தானிய ஆட்சிக் காலப்பிரிவுகளில் தோன்றிய கலப்பின சமூகங்களின் தோற்ற வரலாறு பற்றியும், இரண்டாவது பிரிவு, ஐரோ—ஆசியத் தீவிர மற்றும் முற்போக்கு இயக்கங்கள் குறித்தும், மூன்றாவது பிரிவு பால்நிலை மற்றும் பெண்களின் வகிபாகம் தொடர்பாகவும் ஆராய்கின்றது. பிரித்தானிய காலனித்துவத்துக்கு முன்பே கலப்பினச் சமூகங்கள் வாழ்ந்த இலங்கைத் தீவு எவ்வாறு பௌத்த, இந்து, இஸ்லாமிய சமயங்களின் வளர்ச்சியில் பன்மைத்துவக் கலாசாரக் கூறுகளை உள்வாங்கியதாகவும், சமூகங்களுக்கிடையில் வர்க்க மற்றும் சாதிய அடிப்படையிலான வேறுபாடுகளைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதாகவும் அமைந்திருந்தது என்பதையும் இந்நூல் ஆற்றொழுக்காக விபரித்துச் செல்கிறது.

மேலும், ஜோன் ரிச்சர்ட் மோர்கன், ஹென்றி லூயிஸ் விவியன் டெரோஸியோ, சார்ளஸ் எம்ப்ரோஸ் லோரென்ஸ், ஃப்ரெட்ரிக் நீல், ஏ.ஈ.பூல்ஜென்ஸ், எலேனர் லோரென்ஸ், வினிஃப்ரெட் நீல், எக்னஸ் டி சில்வா முதலான ஐரோ— ஆசியர்கள், தென்னாசிய நாடுகளின் தொழிலாளர் உரிமைகள், பெண்கள் உரிமைகள், ஜனநாயகம், மதசார்பின்மை முதலான விடயங்கள் தொடர்பிலான போராட்டங்களில் எவ்வாறு பிரதான பங்கேற்பாளர்களாகத் தொழிற்பட்டுள்ளனர் என்பதை இந்நூலில் வாயிலாகக் குமாரி ஜெயவர்தன விரிவாக ஆராய்ந்துள்ளார். குறிப்பாக, மன்னராட்சி வழிவந்த இந்திய இலங்கை நாடுகளில், தேசியவாதக் கருத்தியலை அடியொட்டிய ஜனநாயக நீரோட்டத்தை நோக்கிய பாதையை வகுப்பதில் இந்த ஐரோ — ஆசியர்களின் பங்கு எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது என்பது தொடர்பிலான அழுத்தமான பார்வையை இவர் முன்வைத்துள்ளமை கவனத்திற்குரியது.

அதுமட்டுமின்றி, மேற்படி ஐரோ— ஆசியர்கள் எவ்வாறு ஆரம்பகால தொழிற்சங்க ஆரம்பகால தொழிலாளர் இயக்கங்களின் உயிர்நாடியாக நின்றுத் தொழிற்பட்டார்கள் என்பது குறித்தும், பல்வேறு துறைகள் சார்ந்துப் பெண்கள் உள்ளீர்க்கப்படும்போது, அப்பெண்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதில் அவர்களின் வகிபாகம் முக்கியத்துவம் பெறுவதையும் பல்வேறு சான்றாதாரங்களின் அடிப்படையில் அவர் ஆவணப்படுத்தியுள்ளார்.

மேலும், அக்காலத்தே வாழ்ந்த ஐரோ — ஆசியப் பெண்களில் மருத்துவம் கல்வி ஆகிய துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த முன்னோடிப் பெண்கள் பலர் பெண்ணிய மற்றும் பிற தளங் களில் செய்த காத்திரமான பங்களிப்புகள் குறித்து இந்த நூல் அலசி ஆராய்ந்துள்ளதோடு, வரலாற்றுப் பக்கங்களில் இப்பெண்களின் பணிகள் மங்காது ஒளிவீசும் வகையில் பதிவுசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாகப் பெண்கள் விவகாரத்தில் நிபுணத்துவம் வாய்ந்த எலீனர் லோரென்ஸ், மருத்துவத்துறை சார்ந்து வின்ஃப்ரெட் நீல், அரசியல் துறை சார்ந்து எக்னஸ் டி சில்வா, ஊடகவியல், கலை மற்றும் அரசியல் துறைகள் சார்ந்து அனில் டி சில்வா, கட்டிடக்கலை மற்றும் அரசியல் துறைகள் சார்ந்து மின்னெட் டி சில்வா ஆகியோர் செய்த பணிகள் விதந்துரைக்கத் தக்கவை என்பதையும், உள்நாட்டுப் பெண்களுக்கு பிற்காலத்தே அரசியல், சமூகக் கலைத்துறைகளில் பங்குகொண்டு செயற்படுவதில் வழிகாட்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோடிகளாய் அமைந்துள்ளமையையும் இவர் தனது நூலில் மிகச் சிறப்பாகப் பதிவுசெய்துள்ளார்.

### குமாரி ஜயவர்தனவின் பிற நூல்கள்

குமாரி ஜயவர்தன பெண்ணியத்துக்கு அப்பால், இன, வர்க்க முரண்பாடுகள், முதலாளித்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், தொழிற்சங்க இயக்கங்களின் தோற்றமும் வளர்ச்சியும் முதலான இன்னோரன்ன விடயப்பரப்புகள் குறித்தும் பல்வேறு ஆய்வுகளை முன்னெடுத்துள்ளார். அவை தொடர்பில் அவர் எழுதியுள்ள நூல்கள் குறித்துத் தனித்தனியே சுருக்கமாக நோக்குவோம்.

*The Rise of the Labor Movement in Ceylon* இலங்கையில் தொழிற்சங்க இயக்கங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றி ஆராயும் முக்கியமான ஒரு நூலாகும். இது 1931இல் இடம்பெற்ற முதலாவது தேசியக் கவுன்ஸில் தேர்தல் முதல் அரைநூற்றாண்டுகால இலங்கையின் அரசியல் முன்னேற்றம் தொடர்பில் எழுதப்பட்ட முதலாவது ஆய்வுநூலாகும். இந்நூல் வெறுமனே தொழிலாளர் இயக்கங்களின் தோற்றம் பற்றி மட்டுமின்றி, காலனித்துவக் காலத்து இலங்கை அரசியல் வரலாற்றில் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்கும் முனைப்பில் இயங்கிய இவ்வியக்கங்கள் காலப்போக்கில் தமது உழைப்பாளி வர்க்க உணர்வைப் புறந்தள்ளி எவ்வாறு படிப்படியாக சிங்கள பௌத்தத் தேசியவாதமாகப் பரிணாமம் பெற்றன என்பது தொடர்பில் நம்பகமானதும் நுணுக்கமானதுமான தரவுகளின் அடிப்படையில் எழுதப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வுநூலாகும்.

இந்நூலில், பெருந்தோட்டப் பொருளாதாரம் மற்றும் யாப்புச் சீர்திருத்தங்கள் உருவாக்கிய சமூக அரசியல் பின்புலங்களின் இடையே தொழிலாளர்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செயற்பட்ட மத்தியதர வர்க்கத் தலைமைகளின் மனோநிலை, தொழிலாளர், சமயம், அரசியல் எனும் அம்சங்களுக்கு இடையிலான நுண்ணிய இடைத்தொடர்புகள் என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

*1880—1915* ஆகிய காலப்பகுதியில் தொழிலாளர், சமயம், தேசியவாதத்தின் தோற்றம், *1915—33* காலப்பகுதியில் தொழிலாளர் மற்றும் தேசியவாத அரசியல் எனும் இரண்டு பிரதான பகுதிகளைக் கொண்டதாக இந்நூல் அமைந்துள்ளது. அந்தவகையில், ஆரம்ப காலகட்டத்திலே நகர்ப்புறத் தொழிலாளர் இடையே தோற்றம்பெற்ற தொழிற்சங்க இயக்கங்களின் தேசியவாத உணர்வெழுச்சியில் மத உணர்வு ஒன்றுகலக்கும் விதத்தினையும், இக்காலத்தே தோன்றிய ஏகாதிபத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பு மதநிறுவனங்களினடியாக மேலெழுவதையும் முதல் பகுதி பேசுகின்றது. இரண்டாம் பகுதி, தொழிற்சங்க மற்றும் அரசியல் இயக்கங்கள் நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்டு இயங்கிய காலகட்டத்தையும் எவ்வாறு மதமும் அரசியலும் பின்னிப்பிணைந்து தேசியவாதச் சிந்தனையில் தீவிர சிங்கள பௌத்த மேலாண்மைவாதமாக வெளிப்படலாயிற்று என்பதை அலசி ஆராய்கின்றது. இந்தப் பிரிப்பினூடே, 1915ஆம் ஆண்டு இனக் கலவரத்தினை நூலாசிரியர் இலங்கையின் நவீன வரலாற்றின் மிகமுக்கியமான பிரிகோடாகக் கருதியுள்ளார் என்பது தெளிவு.

மேலும், குமாரி ஜெயவர்தன தனது நூலில், அக்கால மத்தியதர வர்க்கத்தின் எழுச்சியையும் அவர்களிடையே காணப் பட்ட பண்புசார் நடத்தைக் கோலங்களையும் மிக விரிவாக ஆராய்கின்றார். அந்தவகையில், மத்தியதரவர்க்கத்தினரை இரு பிரிவினராகப் பிரித்து நோக்கியுள்ளார். நகர்ப்புறங்களுக்கு வெளியே நாடெங்கிலும் செல்வாக்கு மிக்க பதவிகள் வகித்த பாரம்பரிய மத்தியதர வர்க்கத்தினர் முதல் வகையினர். தமது பெயர், நடை, உடை, பாவனைகளில் மட்டுமின்றி மனப்பாங்கி லும்கூட வெள்ளை இனத்தவரைப் பிரதி பண்ணும் போக்கினைக் கைக்கொண்ட நகர்ப்புற மத்தியதர வர்க்கத்தினர் இரண்டாம் வகையினர். இந்த இரண்டாம் வகையினரை அவர்தம் சமூக அரசியல் கருத்துநிலைகளை அடிப்படையாகக் கொண்டு, மரபுவாதிகள், முற்போக்குவாதிகள், தீவிரவாதிகள் எனும் மூன்று உப பிரிவினராக வகுத்தும் நோக்குகின்றார்.

அந்தவகையில், மரபுவாதிகள், காலனித்துவ ஆட்சியாளரின் உள்ளூர்ப் பிரதிநிதிகளாகவும், மற்ற இரு பிரிவினரும் காலனித்துவ எதிர்ப்பு மனநிலையும் தேசியவாதச் சிந்தனைப் போக்கும் கொண்டவர்களாகவும் நூலாசிரியரால் அடையாளப் படுத்தப்படுகின்றனர். இவர்களுள் தொழிலாளர் இயக்கங்களின் தலைமை பெரிதும் தீவிரநிலைப்பாட்டினரான மத்தியதர வர்க்கத்தின் கரங்களிலேயே தங்கியிருந்ததையும் அத்தலைவர்கள் தொழிலாளர்கள் பொருளாதார ரீதியில் மேம்பாடான நிலையினை அடைந்துகொள்ளும் பொறிமுறையாக எவ்வாறு தொழிற்சங்கங்களைப் பயன்படுத்தினர் என்பதையும் இவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இன்னொருவகையில் சொல்வதானால், அக்காலத்தே பிரித்தானியாவில் நிலவிவந்த தாராண்மைவாத மற்றும் சோஷலிஸக் கருத்துநிலைகளால் ஆகர்ஷிக்கப்பட்டு, அதனடியாகத் தமது மண்ணில் வலுவான தொழிற்சங்க இயக்கங்களைத் தோற்றுவித்து வழிநடத்திய ஏ. ஈ. பூல்ஜென்ஸ், பி.எம்.எல்.பின்ட்டோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. கொத்தலாவல, ஈ. ஜயவர்தன, ஏ. ஜே.ஆர். டி, ஸொய்ஸா, ஏ. தர்மபால, எச். ஹரிச்சந்திர, ஏ. ஈ. குணசிங்க முதலான பல தலைவர்களினதும் அவர்கள் வழிநடத்திய அத்தொழிற்சங்க இயக்கங்களினதும் முக்கியத்துவத்தை ஆராய்வது இந்நூலின் பிரதான பணியாக இருக்கின்றது என்றும் குறிப்பிடலாம்.

விசேடமாக, இந்நூலின் இரண்டாம் பாகத்தை "ஏ. ஈ. குணசிங்க யுகம்" என குமாரி ஜயவர்தன அடையாளப்படுத்துகின்றார். இனக்கலவரத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் தொழிற்சங்க இயக்கத் தலைவராய் இருந்து, பொதுவான தொழிலாளர் வர்க்க உணர்வுநிலைக்கு அப்பால், தொழிலாளர் போராட்டங்களில் அரசியலையும் மதத்தையும் ஒன்றிணைத்து, தீவிர சிங்கள பௌத்தத் தேசியவாத எழுச்சிப் போக்கினை மேலெழச்செய்த பிதாமகனாக இவர் திகழ்கின்றமையே இதன் காரணமாகும்.

குமாரி ஜயவர்தன எழுதிய மற்றொரு முக்கியத்துவம் வாய்ந்த நூல் *Nobodies to Somebodies: The Rise of the Colonial Bourgeoisie in Sri Lank* ஆகும். இந்நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இலங்கையில் தோற்றம் பெற்ற முதலாளித்துவத்தின் கதையைக் கூறுகின்றது. இது, முக்கியத்துவம் பெறுவதற்குக் காரணம் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையின் சமூகப் பொருளாதாரம் தொடர்பான அம்சங்களுக்கு அப்பால், இலங்கையின் அரசியல் வரலாற்றைக் குவிமையப்படுத்தியதாக இலங்கை வரலாறு எழுதப்பட்டு இருப்பதாகும். அதாவது, இலங்கையில் ஏற்பட்ட முதலாளித்துவ எழுச்சியினடியாய் ஏற்பட்ட சமூக அரசியல் மாற்றங்கள் குறித்து இந்நூல் விரிவாய் ஆராய்கின்றது. அந்த வகையில், சிங்கள பௌத்த மேலாண்மைத் தேசியவாதத்தின் எழுச்சி, அதனை முன்னெடுத்த அமைப்புகள், யாப்புச் சீர்திருத்தம் முதலான அம்சங்கள் பற்றிப் பேசும் இந்த நூல், காலனித்துவப் பின்புலத்தில் 'அநாமதேயர்களாக' இருந்தோர், பிற்காலத்தே 'அறியப்பட்டோ'ராக மாறியோர் எனும் தலைப்புகளின்கீழ், இரண்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டப் பொருளாதாரம் தோற்றம் பெறுவதற்கு முன்னர் நிலவிய வர்த்தகம், சாராயக் குத்தகை, பெருந்தோட்ட விவசாயம், நிலக்கொள்வனவு என்பவற்றினடியாய் ஏற்பட்ட முதலாளித்துவ மூலதனத் திரட்சி, முதலாளித்துவத்தின் தோற்றம், ஆரம்பகால முதலாளித்துவச் சூழலில் சாதி முதலான இன்னோரன்ன அம்சங்களை நூலின் முதலாவது பகுதி ஆராய்கின்றது. அவ்வாறே, பெருந்தோட்டப் பொருளாதார வளர்ச்சி, சாராய விற்பனை விருத்தியினால் மதுவுக்கு அடிமையாகும் உழைப்பாளர் வர்க்கம், சாராய வர்த்தகத்தின் இலாபம், வர்த்தக முதலாளித்துவம் பெருந்தோட்டப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத்தினூடே ஆழ அகலம் பெற்றவிதம், அதன் விளைவான சமூக உட்கட்டமைப்பு மாற்றங்கள் எனும் பல்வேறு அம்சங்கள் குறித்து இரண்டாம் பகுதி அலசுகின்றது.

இந்நூலின் முன்னுரையில் நூலாசிரியர் கூறியிருப்பதுபோல, இலங்கை முதலாளித்துவத்தின் வணிகவாதக் கட்டம், வர்த்தக வாதத்தில் இருந்து பெருந்தோட்ட முதலாளித்துவமாக மறுமலர்ச்சி யடைதல், வர்க்கம், சாதி என்பவற்றின் பங்கும் காலனித்துவமும் முதலாளித்துவமும் ஏற்படுத்திய தாக்கத்தினால் சாதிக்கட்டமைப்பு மாற்றம், பல்வேறு இனக்குழுமங்களிடையே முதலாளித்துவ வகுப்பினரின் தோற்றமும் வளர்ச்சியும், இலங்கையில் கிறிஸ்தவ சமயப் பரம்பலும், அதையொட்டிய தேசிய சமய மறுமலர்ச்சி இயக்கங்கள், முதலாளித்துவ வகுப்பில் பெண்களின் நிலையும் சமூகப் பண்பாட்டு மாற்றங்களும், முதலாளித்துவம் — வர்க்கம் — அரசியல் மாற்றம் எனும் அம்சங்களுக்கு இடையிலான இடைத்தொடர்பு முதலான இன்னோரன்ன விடயங்களை அலசி ஆராய்வதாக இந்நூல் அமைந்துள்ளது.

இறுதியாக, *Ethnic and Class Conflicts in Sri Lanka* எனும் நூல் குறித்து நோக்குவோம். இலங்கையின் இன, வர்க்க முரண்பாடு குறித்தும் சிங்கள பௌத்த மேலாண்மை உணர்வின் எழுச்சி பற்றியும் இந்நூல் மிக விரிவாக ஆய்வுக்குட்படுத்துகின்றது. சுமார் 100 ஆண்டுகால காலனித்துவ, பின்காலனித்துவப் பின்புலத்தில் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் ஏனைய இனத்தவர்களுக்கும் இடையில் தோன்றிய முரண்பாடுகளையும் அவற்றுக்கான காரணங்களையும் ஆராயும் இந்நூல், உழைப்பாளர் நலனை முன்னிறுத்தும் வர்க்க உணர்வு படிப்படியாக மங்கி, சிங்கள பௌத்த மேலாண்மை உணர்வு எவ்வாறு ஆரம்ப காலகட்டத்தில் காலனித்துவ எதிர்ப்புக்கு உந்துசக்தியாக அமைந்து பிற்காலத்தே சிங்கள இனவெறியாகப் பரிணமித்து ஏனைய இனங்களின் இருப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்து, சிறுபான்மையின அழிப்புக்கு வழிகோலியது என்பது குறித்து மிகவும் நுணுக்கமாகப் பேசிச் செல்கின்றது.

இன முரண்பாட்டிலிருந்து விடுதலை பெற்று ஒன்றிணைந்து வாழும் சமுதாயம் ஒன்றினைக் கட்டியெழுப்புவதையும் அதற்கான தடைகளை இனமறிந்து நீக்குவதற்கும் பங்காற்றும் வகையில் இந்த ஆய்வினை முன்னெடுத்திருப்பதாகக் குறிப்பிடும் இந்நூலாசிரியரின் முயற்சி பல்வேறு வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். காரணம், இந்த நூல் எடுத்துக்காட்டும் இனங்களுக்கு இடையிலான முரண்பாடு உக்கிரமடைவதற்கும், அது பெரும்பான்மை இனவெறியாகத் தீவிரமடைந்து மற்ற இனக்குழுமங்களை அழித்தொழிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் செயற்படுவதற்கும் பின்புலமாக இருந்த காரணங்கள், இந்நூல் ஆக்கப்பட்ட காலத்துக்கு அப்பால் இன்றுவரை நிலவிவருகின்றமை கண்கூடு.

அன்று அவர் தன் ஆய்வினில் முன்வைத்த அதே சமூக, பொருளாதார, அரசியல் காரணங்கள் இன்றும் சமூகப் பொருத்தப் பாடு உடையதாகக் காலத்துக்குக் காலம் இனமுறுகலாகவும் இனக்கலவரமாகவும் மேலெழுவதை நாம் காணக்கூடியதாக உள்ளமை, அவரது ஆய்வின் கனதிக்கும் காத்திரத்தன்மைக்கும் சான்று எனலாம்.

இலங்கையில் மத்தியதர வர்க்கத்தின் எழுச்சியின் விளைவாய் எழுந்த சமூக மாற்றங்களைச் சித்திரித்துச் செல்லும் இந்நூல், சிங்கள பௌத்த மேலாதிக்க உணர்வின் எழுச்சிக்குப் பின்புலமாக அமைந்த காரணங்களை, 1) சிங்கள இனத்தூய்மைவாதக் கருத்தியலின் தோற்றம் 2) உலக அரங்கில் சிங்களச் சிறுபான்மையினத்தின் இருப்பு குறித்த அச்ச உணர்வு 3) தீவிர பௌத்த மதப்பற்றும் அதனோடு இயைந்த சிங்கள பௌத்தக் கலாசார அம்சங்கள் குறித்த விழிப்புணர்வும் அவற்றைப் பாதுகாக்கும் தன்முனைப்பும் என மூன்று வகையாக அடையாளப்படுத்துகின்றது. இம்மூன்று கருத்துநிலைகளின் அடியாகவே சிங்கள பௌத்தரல்லாத ஏனைய இனத்தோர் இந்நாட்டினைச் சுரண்டிவாழும் “அந்நியர்” என்ற நிலையில் வைத்துப் பார்க்கப்படும் போக்கு பரவலடைகின்றது. ஊடகங்களும் கலை இலக்கியங்களும் அப்பிரசாரத்தைத் தீவிரமாக முன்னெடுத்துப் பெரும்பான்மைச் சமூக உளவியலில் ஏனைய இனத்தவர் தொடர்பிலான எதிர்மனோபாவம் ஆழமாகக் கட்டமைக்கப்படுவதற்கும் வழியமைத்துக் கொடுத்தன.

உண்மையில், இந்த பிற இன எதிர்ப்பு மனோபாவத்தின் பின்னணியில் இருப்பது வர்த்தகப் பொருளாதார மேலாண்மை உணர்வும், கல்வி மற்றும் நிர்வாகத்துறைகளில் முன்னுரிமை பெறுவதில் உள்ள போட்டி மனோபாவமுமே என்பதை இந்நூல் மிக ஆணித்தரமாக முன்வைக்கின்றது. ஏகாதிபத்திய எதிர்ப்பினைக் குவிமையப்படுத்தி எல்லா இனங்களையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் தோல்வியுறுவதற்கு கிறிஸ்தவ எதிர்ப்பியக்கம் தொடங்கி படிப்படியாக ஏனைய சமய எதிர்ப்பியக்கங்களாகப் பரிணாமம் பெற்ற சிங்கள பௌத்த மேலாண்மைவாதம் எவ்வாறு காரணமானது என்பதை நூலாசிரியர் தமது நூலில் மிக ஆழமாகத் தெளிவுபடுத்துகின்றார். பிற்காலத்தில் சுமார் மூன்று தசாப்தகால இனப்போருக்கு வித்திடவும் நாட்டில் அண்மைய காலம்வரை இனக் கலவரங்கள் தோற்றம் பெறவும் அடிப்படையில் பொருளாதார நலன்களை உயிர்நாடியாகக் கொண்டு பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் ஊட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கப்பட்ட சிங்கள பௌத்த மேலாண்மை உணர்வு காலமெல்லாம் நீறுபூத்த நெருப்பாக நின்று நிலவிவருவதையே எடுத்துக்காட்டுகின்றது.

இன்னொருவகையில், ஹிட்லரின் காலத்தில் யூதர்கள் மீதான இனவன்முறைகளையும், பர்மா, இந்தியா ஆகிய நாடுகளில் நிலவிவரும் சிறுபான்மை மக்கள் மீதான வெறுப்புணர்வுப் பிரசாரங்களையும் சிறுபான்மையினருக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது, இலங்கையில் நிலவிவரும் சிங்கள பௌத்த மேலாண்மை உணர்வின் பின்புலங்களாக உள்ள அதே பின்னணிக் காரணங்கள் அந்நாடுகளிலும் பெருமளவு ஒத்ததன்மை கொண்டனவாய் அமைந்திருப்பதை இனமறியலாம். அந்த வகையிலும், குமாரி ஜயவர்தனவின் இந்நூல் மிகுந்த முக்கியத்துவம் உடையதாகின்றது எனலாம்.

**முடிவுரை**

இவ்வாறாக, மூன்றாம் உலக நாடுகளில் பெண்ணியம், இன, வர்க்க முரண்பாடுகள், முதலாளித்துவ மற்றும் தொழிலாளர் இயக்கத் தோற்றமும் வளர்ச்சியும் பல்வேறு தளங்களில் வரலாற்று ரீதியான சமூகவியல் ஆய்வுகளாய் அமைந்த குமாரி ஜெயவர்தனவின் 'ஆய்வுவெளி' மிகவும் பரந்துபட்டதாகக் காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி, அவர் எழுதிய நூல்கள் காலத்தை வென்று நிற்கும் தனித்துவமான சிறப்பம்சங்களை உள்ளடக்கியதாகவும் திகழ்கின்றமை அவரது எழுத்துக்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணைகள்:**

*<https://www.academia.edu/6627686/Reclaiming_Third_World_Feminism_Or_Why_Transnational_Feminism_Needs_Third_World_Feminism>*

*<https://www.academia.edu/6254505/Celebrating_the_Work_of_Kumari_Jayawardena>*

*<http://www.cddc.vt.edu/feminism/Jayawardena.html>*

*<http://www.sundaytimes.lk/071118/Plus/plus00021.html>*

*Wilson-Moore: Book Review: "The White Woman's Other Burden: Western Women and South Asia during British Rule"*

நன்றி: *மணற்கேணி, மே—ஜூன் இதழ் (2015)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 2. அழகுத் தமிழில் அரபுக் கதைகள்

*I*

அஷ்ரஃப் சிஹாப்தீன் ஓட்டமாவடியைச் சேர்ந்தவர். 2000ஆம் ஆண்டு முதல் வெளிவரும் 'யாத்ரா' என்ற பிரசித்தி பெற்ற கவிதை இதழின் ஆசிரியர். கவிதை, சிறுகதை, வானொலி நாடகம், பத்தியெழுத்து, சிறுவர் இலக்கியம், பயண இலக்கியம் என்று பல்வேறு துறைகளிலும் தடம் பதித்த இவர், தம்மை ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்ற வரிசையிலும் பெயர் பதித்துள்ளார் என்பதை, ஈராக்கியக் கவிஞர் ஜமால் ஜுமாவின் "உன்னை வாசிக்கும் எழுத்து" (2007) எனும் நெடுங் கவிதையை மொழிபெயர்த்து அளித்ததன் மூலம் நிரூபித்துள்ளார்.

இது தவிர, "காணாமல் போனவர்கள்" (1999), "என்னைத் தீயில் எறிந்தவள்" (2008) என்பன இவரது கவிதைத் தொகுதிகள். "புள்ளி" (2007), "கறுக்கு— மொறுக்கு — முறுக்கு" (2009), "புல்லுக்கு அலைந்த மில்லா" (2009) என்பன இவர் படைத்த சிறுவர் கதைகள். பல்சுவைப் பத்திகளின் தொகுப்பான "தீர்க்க வர்ணம்" (2009), பயண அனுபவங்களைச் சுவைபடக் கூறும் "ஸ்ரீலங்காவிலிருந்து ஸ்ரீரங்கப் பட்டணம் வரை" (2009) என்பன இவரது குறிப்பிடத்தக்க பிற படைப்புக்களாகும்.

அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாளராக இணைந்து தமிழ்ச் சேவை, முஸ்லிம் சேவை, கல்விச் சேவை போன்றவற்றில் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரித்தும், தொகுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியும் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றிருந்தார். முஸ்லிம் சேவையில் இவர் நடத்திய "அறிவுக் களஞ்சியம்" நிகழ்ச்சி மக்கள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றிருந்தது. அத்துடன், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தில் சுமார் 10 வருட காலத்துக்கும் மேலாகச் செய்தி அறிவிப்பாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார். "நாட்டவிழி நெய்தல்" *(<http://ashroffshihabdeen.blogspot.com/2012/06/blog-post_16.html>)* என்ற வலைப்பூவுக்குச் சொந்தக்காரரான இவர், அதில் சுவாரசியமான பல பதிவுகளைத் தொடர்ச்சியாகத் தருவதன் மூலம் இணைய உலகிலும் உற்சாகமாக வலம் வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகத் தமிழ்ச் சிற்றிதழ்ச் சங்க இலங்கைக் கிளையின் உபதலைவராகப் பணியாற்றி வரும் இவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா ஃபோரத்திலும் உப தலைவராகச் செயற்பட்டுள்ளார். அஷ்ரஃப் சிஹாப் தீன், 2002ஆம் ஆண்டு இலங்கையில் இடம் பெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டின் பொதுச் செயலாளராகப் பணியாற்றியதோடு, 2011ஆம் ஆண்டில் கொழும் பில் இடம்பெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக் குழுச் செயலாளராகவும் இருந்து காத்திரமான பங்காற்றியுள்ளார். இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தினதும் சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினதும் செயலாளராக இயங்கி வருகின்றார்.

ஓர் ஆசிரியராகப் பணிதொடங்கி இலங்கை குடிவரவுத் திணைக்கள அதிகாரியாய் முன்னேறிய அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள், எத்தனையோ ஆற்றல்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு மூத்த படைப்பாளியாகத் தமிழ்கூறும் நல்லுலகில் தனக்கெனத் தனியானதோர் இடத்தைப் பெற்றிருந்தும் பழகுதற்கு எளியவராய், இளந் தலைமுறையினரின் திறமைகளுக்கு எப்போதும் ஊக்கமும் உற்சாகமும் அளிப்பவராய் இருப்பது விதந்துரைக்கத் தக்கதாகும்.

இவருடைய படைப்புக்கள் பல்வேறு தரப்பட்டவர்களையும் உள்வாங்கி, தமக்கெனத் தனியானதொரு வாசகர் வட்டத்தை இன்றுவரை தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது. இவரது படைப்புக்களில் "ஸைத்தூன்" என்ற கவிதை 1985 ஆம் ஆண்டுகளில் நாட்டில் நிலைகொண்டிருந்த நெருக்கடியான அரசியல் சூழலை அடியொட்டியதாய் அமைந்திருந்தது. இலங்கையிலும் இந்தியாவிலும் பல்வேறு பத்திரிகை, சஞ்சிகைகளில் பலமுறை மீள்பதிப்புச் செய்யப்பட்டுத் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் பெரும் புகழை ஈட்டித்தந்த இந்தக் கவிதையும், "என்னைத் தீயில் எறிந்தவள்" என்ற அற்புதமான கவிதையும் "மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்" (2002)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் அந்த நூலின் பிரதான தொகுப்பாளரும்கூட.

அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களின் "என்னைத் தீயில் எறிந்தவள்" கவிதைத் தொகுதிக்கு 2009ஆம் ஆண்டு அரச சாகித்திய விருது கிடைத்தது. அண்மையில் காயல்பட்டினத்தில் இடம்பெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் இவர், 'தமிழ்மாமணி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவரது படைப்புக்களில் என்னை மிகவும் கவர்ந்தது, கலாநிதி எம். எஸ்.எம். அனஸ் அவர்களின் கனதியான அணிந்துரையோடு உண்மைக் கதைகளின் தொகுப்பாக வெளிவந்த "ஒரு குடம் கண்ணீர்" (2010) நூல்தான். அதிகார மமதையாலும் அரச யந்திரத்தின் எதேச்சதிகாரச் செயற்பாடுகளாலும், பகைமையின் குரோதத்தாலும் ஆறறிவு படைத்த மனிதர்கள் மிருகங்களைவிட நிலை தாழ்ந்து போன மானுட அவலங்களை நெஞ்சை உலுக்கும் அதியற்புதமான நடையில் இந்த நூல் பேசி இருக்கிறது. எடுத்ததும் படித்து முடிக்காமல் கீழே வைக்க விடாமல் கட்டிப் போடும் அப்படியோர் ஆற்றொழுக்கான தமிழ்நடை. பொதுவாக இஸ்லாமிய மார்க்க நூல்களையே படிக்கும் வழக்கமுடைய 60 வயதான என்னுடைய மாமியார் தற்செயலாகத் தான் இந்த நூலைக் கையில் எடுத்தார். படிக்கத் தொடங்கியவர் இரண்டு நாட்களுக்குள் படித்து முடித்துவிட்டுச் சொன்னார், "இப்படியான கொடுமைகளும் உலகத்துல நடக்குதா மகளே? மனசெல்லாம் பாரமாப் போச்சு." வயது வித்தியாசமின்றிப் படிப்பவரை ஈர்த்துக் கொள்ளும் அருமையான எழுத்துக்குச் சொந்தக்காரர் இவர் என்பதை உணர்த்தும் ஒரு சின்னச் சம்பவம் இது.

இவருடைய "ஒரு குடம் கண்ணீர்" நூலுக்குச் சாகித்திய விருது கிடைக்கும் என்ற பரவலான எதிர்பார்ப்புக்கு மாற்றமாக தேசிய சாகித்திய விழாவில் (2011) வெறுமனே ஒரு சான்றிதழ் மட்டுமே வழங்கப்பட்டமையானது இலக்கிய உலகில், குறிப்பாக இணையத்தில் பலத்த சர்ச்சையைக் கிளப்பிவிட்டிருப்பதை நாமறிவோம். இந்த நூலைப் பற்றி 2011 ஆகஸ்ட் 17ஆம் திகதி 'இந்தியா டுடே' சஞ்சிகையில் வெளிவந்த குறிப்பில், "ஒரு மரத்தையும்கூட மனித உரிமைப் போராளியாக ஆக்கி விடும் எழுத்து அஷ்ரஃபுடையது" என்று இடம் பெற்றிருந்தமை இங்கு நினைவு கூறத்தக்கது.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லும் சொல் இன்மை அறிந்து"என்றார், வள்ளுவர் பெருந்தகை. அத்தகையதோர் வெல்லும் சொல் நடைக்குச் சொந்தக்காரராக அஷ்ரஃப் சிஹாப்தீன் திகழ்கின்றார் என்பதையே மேற்படி குறிப்பு நமக்கு உணர்த்தி நிற்கின்றது எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II

“சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!” என்றும்,
“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்”

என்றும் கட்டளையிட்டான் மகாகவி பாரதி.

ஒரு மொழி அபரிமிதமாக வளம் பெற்று என்றென்றும் வாழும் மொழியாகப் பரிணமிப்பதற்கான அடிப்படையை அவன் நமக்குச் சொல்லிச் சென்றான். அந்த வகையில், ஏனைய மொழிகளில் எழுந்த கலைச் செல்வங்கள் மொழிபெயர்ப்பு வழியே தமிழுக்குள் பிரவேசித்தன. பிரான்ஸிய, ரஷ்ய, அமெரிக்க இலக்கியங்கள் உட்பட உலகின் பல்வேறு நாடுகளில், வெவ்வேறு மொழிகளில் படைக்கப்பட்ட இலக்கியங்கள், இலக்கியக் கோட்பாடுகள் என்பன தமிழ் வாசகர்களாலும் சுவைஞர்களாலும் பெரிதும் வரவேற்கப்பட்டன. விடுதலைப் போராட்ட கால முதல் மாப்பசான், விக்டர் ஹியூகோ போன்றோரின் பிரான்சிய இலக்கிய நூல்கள் பல தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டன.

ரஷ்யப் புரட்சி, சீனப் புரட்சி என்பன ஏற்படுத்திய அலைகளால் இடதுசாரி இயக்கங்கள் வலுவடைந்தன. நவகாலனிய எதிர்ப்பு தன்முனைப்புப் பெற்றது. இலக்கியங்கள் இந்த மக்கள் போராட்டங்களைக் கூர்மைப்படுத்தின. அவை ஆயுதங்களுக்கு நிகராகக் களத்தில் குதித்து ஆதிக்கச் சக்திகளுக்கெதிரான போராட்டத்துக்குப் புத்துயிரூட்டின.

சேகுவாரா படுகொலை செய்யப்பட்ட 1967ஆம் ஆண்டு அஸ்தூரியாஸ் எழுதிய “சைக்ளோன்” எனும் நூலுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டதையடுத்து இலத்தீன் அமெரிக்க இலக்கியங்களும் ஆபிரிக்க இலக்கியங்களும் பரவலடைய ஆரம்பித்தன. தமிழிலும் அவை வலம் வரத் தொடங்கின. சினுவா அச்செபே, அலெக்ஸ் ஹீலி, கூகி வா தியாங்கோ, லத்தீன் அமெரிக்கப் பெண் எழுத்தாளர் இஸபெல் அலன்டே, ஆபிரிக்கப் பெண் எழுத்தாளர் மாயா ஆஞ்சலூ, பாப்லோ நெருடா போன்றோரின் எழுத்துக்கள் இப்படித்தான் தமிழ் வாசகரிடையேயும் பரிச்சயமாயின.

தமிழிலும் புதிய பரிசோதனை முயற்சிகள் பல மேற்கொள்ளப் பட்டன. நவீன தொழினுட்பம் என்ற சவாலைத் தமிழ்மொழி மிக இலாகவமாக எதிர்கொண்டது. “மெல்லத் தமிழ் இனிச் சாகும்” என்ற கூற்றைப் பொய்ப்பித்துக் கணினி யுகத்திலும் தமிழ் கோலோச்சத் தொடங்கியது. இணையம் வரை தமிழுக்கு இறக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முளைத்தது. உலகம் ஒரு பூகோளக் கிராமம் என்ற அளவில் சுருங்கச் சுருங்க தமிழ் உள்ளிட்ட உலக மொழிகளில் எல்லாம் பரஸ்பரம் வெவ்வேறு நாடுகளின் இலக்கியப் பரிவர்த்தனைகள் நிகழ, இலக்கியம் மிகப்பரந்த தளத்தை எட்டிப் பிடித்தது.

இந்தப் பின்புலத்தில் நாம் அரபு இலக்கிய உலகு குறித்தும் சற்று நோக்கவேண்டியுள்ளது. அரபு இலக்கியத்துக்கு மிக நீண்டதொரு பாரம்பரியம் இருந்து வந்த போதிலும், பல நூற்றாண்டுகளாக அரபுலகுக்கு வெளியே அதன்பால் கவனம் ஈர்க்கப்படவில்லை. எனினும், 1988 ஆம் ஆண்டு எகிப்தின் நகூப் மஹ்ஃபோஸ் *(Naguib Mahfouz)* எனும் பிரபல நாவலாசிரியர் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றபின் இந்நிலைமை மாறியது. மொரோக்கோவின் முஹம்மது பெர்ராதா *(Mohamed Berrada)*, பலஸ்தீனரான கஸ்ஸான் கனாஃபானி *(Ghassan Kanafani)*, எமில் ஹபீபி *(Emile Habiby)*, அண்மைக் காலமாய் எழுதி வரும் பாஹா தாஹிர் *(Bahaa Taher)*, யூசுஃப் ஸெய்தான் *(Yusuf Zeydan)*, இப்ராஹிம் அல்கோனி *(Ibrahim Al- Koni)*, அப்துல் றஹ்மான் முனீஃப் *(Abdel Rahman Munif)*, நஜீப் கைலானி *(Najib Kailani)* போன்ற பலரது எழுத்துக்கள், குறிப்பாகப் புனைகதைகள் உலக அளவில் பேசப்படலாயின.

இவ்வாறாக, மேலைத்தேய நாடுகளில் லத்தீன் அமெரிக்க இலக்கியம், ஆபிரிக்க இலக்கியம் என்பவற்றுக்கு நிகரான மிக உன்னதமான ஓர் இடம் அரபு இலக்கியத்துக்கும் அளிக்கப்பட்டு வருகின்றமை கண்கூடு. என்றாலும், தமிழ் மொழியைப் பொறுத்தளவில் ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க எழுத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டதற்கு இணையான முக்கியத்துவம் அரபு இலக்கியத்துக்கு வழங்கப்படவில்லை என்பதே நிதர்சனம். தமிழிலே, எட்வர்ட் சயீட், இப்றாஹீம் துக்கான், அபூ சல்மா, சமீஹ் அல் காசிம், சுலஃபா ஹிஜாவி, மஹ்மூத் தர்வீஷ், சல்மா கத்றா ஜய்யூசி, அமினா கஸக் முதலானவர்களின் எழுத்துக்கள், பெரும்பாலும் கவிதைகள் ஆங்காங்கே தனியாகவும் தொகுதியாக வும் வெளிவந்துள்ளன என்பது இங்கே நினைவு கூறத்தக்கதே.

இந்தப் பின்னணியில், அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களின் "ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள்" என்ற இம் மொழியாக்க நூல், தமிழில் வெளிவரும் முதலாவது அரபுச் சிறுகதைகளின் தொகுப்பாகும் என எண்ணுகின்றேன். அந்த வகையில், இந்த நூல் மிகுந்த முக்கியத்துவம் உடையதாகின்றது. மஹ்மூத் சயீத், தௌஃபீக் அல் ஹக்கீம், தையிப் ஸாலிஹ், ஸகரிய்யா தாமிர், கஸ்ஸான் பாயிஸ் கனஃபானி, யாஸர் அப்தல் பாக்கி, ராபியா ரைஹான், ஜூக்ஹா அல் ஹார்த்தி, ஓமர் அல் கித்தி முதலான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தனக்கே வாலாயமான அழகுத் தமிழ் நடையில் தந்திருக்கின்றார், அஷ்ரஃப் சிஹாப்தீன்.

இத்தொகுதியில் உள்ள சிறுகதைகள் யாவும் ஈராக், எகிப்து, சூடான், சிரியா, பலஸ்தீன், யெமன், மொரோக்கோ, ஓமான், லிபியா முதலான அரபு நாடுகளின் வெவ்வேறு காலகட்டத்து மக்கள் வாழ் வியலைக் கதைக்களமாகக் கொண்டு பின்னப்பட்டுள்ளன. சர்வாதிகார ஆட்சியின் இரும்புக்கரங்களில் எந்த நிமிடமும் எதுவும் நேரலாம் என்ற அச்சுறுத்தலான வாழ்க்கை, யுத்த நெருக்கடியில் எதிர்காலத்தைத் தொலைத்து நிற்கும் அவலம், மதத்தின் பெயரால் சமூகத்தில் புரை யோடிப்போயுள்ள சடங்கு சம்பிரதாயங்கள், போலிப் பித்தலாட்டங்கள், நிலப்பிரபுத்துவச் சுரண்டல்கள், காலாகாலமாக மக்கள் மத்தியில் வேரூன் றியுள்ள மூடநம்பிக்கைகள், அடக்குமுறை ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தின் குரல், கலாசாரம் என்ற புனைவுகளின் பெயரில் நிலவும் பெண்களுக்கெதிரான அடக்குமுறைகள் என்று இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள சிறுகதைகளின் பேசுபொருள் பலதரப்பட்டதாக அமைந்துள்ளது.

இவற்றுள் அனேகமான கதைகள் நம்முடைய மண்ணுக்கும் பொதுவான சில பண்புக்கூறுகளைத் தன்வயப்படுத்தியனவாக இருக்கின்றமை நோக்கத்தக்கது. கற்பு, கன்னிமை போன்ற பெண்கள் சார்ந்த சமூக மதிப்பீடுகள் குறித்த கேள்வியை எழுப்பும் "சிவப்புப் புள்ளி", கிராமிய மக்களிடையே நிலவும் மூடநம்பிக் கைகளைப் பிரதிபலிக்கும் "சின்னச் சூரியன்", "கறுப்புப் பூனை", "திருமணம்" முதலான கதைகள், ஆட்சியாளரின் எதேச்சதிகாரப் போக்கை, அடக்குமுறைகளை, சித்திரவதைகளைப் பதிவுசெய்யும் "விசர்நாய்க்கடி", "நெடுநாள் சிறைவாசி", போரின் அவலங்களைச் சித்தரிக்கும் "புகையிரதம்", "காஸாவிலிருந்து ஒரு கடிதம்" என்பன இதற்கான எடுத்துக்காட்டுகளாகும்.

இந்தத் தொகுதியில் ஆசிரியர் நமக்குத் தந்துள்ள அரபுச் சிறு கதைகளில் விதந்துரைக்கத்தக்க எத்தனையோ சிறப்பம்சங்கள் இருப்பதை அவதானிக்கலாம். அரபுலக மக்கள் வாழ்வியலின் ஒரு பகுதியை, ஒரு நிகழ்வை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள இக்கதைகளின் வாயிலாகப் புலப்படுத்தப்படும் கலாசார அம்சங்கள் குறித்த புதிய தரிசனம் தமிழ்மொழி வாசகருக்குக் கிடைத்துள்ளது. அரபு மக்களைப் பொறுத்தவரை மறுமணம் என்பது சர்வசாதாரணமானது. அழகு, உயர் குடும்பம் முதலான காரணங்களுக்காய் ஒரு பெண் விதவையானதன் பின்னர் மீண்டும் மீண்டும் மணமுடிக்கப்படுவதுண்டு. இங்கு, "திருமணம்" கதையில் வரும் நாயகி ஸலாமா பத்துமுறை திருமணம் முடித்தவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தமிழ் வாசகருக்கு முற்றிலும் விந்தையான செய்தியாய் அமையும் என்பது உறுதி. அவ்வாறே, ஓமானிய திருமணச் சடங்கு சம்பிரதாயங்கள் மனதை ஈர்க்கும் வகையில் இக்கதையில் இடம் பெற்றிருப்பது தனிச் சிறப்பாகும்.

தமிழ் வாசகர்கள் அரபு மக்களின் சமய அனுட்டானங்கள், நம்பிக்கைகள் பற்றிய அம்சங்களை எந்த இடையூறுமின்றிப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் இக்கதைகள் அழகுற மொழியாக்கம் செய்யப்பட்டிருப்பதும், தேவையான இடங்களில் உரிய அடிக்குறிப்புக்கள் வழங்கப்பட்டிருப்பதும் பயனுடைத்தாகும். ஜின்கள், பேய்கள், கெட்ட ஆவிகள் பற்றிய நம்பிக்கை, லைலத்துல் கத்ர் இரவு வணக்கம், கியாமுல் லைல் தொழுகை, அந்தந்த அரபுப் பிரதேசத்துக்குரிய உணவு வகைகள், ஆடையலங்கார முறைகள் என்பன இத்தொகுதியில் அமைந்துள்ள பல கதைகளில் சுவைபட இடம்பெற்றுள்ளன.

இக்கதைகளில் வரும் மாந்தர்கள் பலதிறப்பட்ட குணாதிசயங்கள், அவர்களின் உணர்ச்சிப் போராட்டங்கள் என்பன மிக அற்புதமாகப் படைக்கப்பட்டிருக்கின்றமையைப் பார்க்கும்போது இவை தமிழிலேயே எழுதப்பட்ட கதைகள்தாமோ என்ற எண்ணத்தையும் இடையிடையே ஏற்படுத்தத் தவறவில்லை.

மிகுந்த நகைச்சுவையாகவம் வித்தியாசமாகவும் படைக்கப்பட்டு நல்லதொரு படிப்பினையையும் தரும் "விற்பனைக்கான அற்புதங்கள்" சிறுகதை இறுதி வரை சுவாரஷ்யமாகவும் விறுவிறுப்பாகவும் நகர்த்திச் செல்லப்பட்டுள்ள விதம் அருமை. அவ்வாறே, இத்தொகுதியில் அமைந்துள்ள முதலாவது கதையான "விசர் நாய்க்கடி" இலும், இறுதிக் கதையான "நெடுநாட் சிறைவாசி" இலும் அதிகார வர்க்கத்தின் எதேச்சதிகாரப் போக்குக்கு எதிராக மிக நுண்மையாக இழையோடிச் செல்லும் எள்ளல் தொனியை அப்படியே தமிழுக்குக் கொண்டுவருவதில் மொழிபெயர்ப்பாளர் வெற்றி கண்டுள்ளார் எனலாம்.

அரபு மக்கள் இயல்பாகவே கவித்துவமாகவும் உணர்ச்சிப் பெருக்குடனும் பேசக்கூடியவர்கள் என்று கேள்வியுற்றுள்ளேன். இத்தொகுதியின் வாயிலாக அதனைத் தரிசிக்க முடிந்தது. இத்தொகுதியின் மணி மகுடமாய் இடம்பெற்ற "ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள்" கதையிலே, 'பெரிய பேரீச்சங் குலை உயரத்திலிருந்து கீழே விழும் சத்தத்தில் மட்டும் அவனது கவனம் ஈர்க்கப்பட்டது. மரத்திலிருந்து பேரீச்சங் குலைகளைத் தனது நீண்ட கூரிய கத்தியால் அறுக்கும் பையனை நோக்கி ஒரேயொரு முறை அவன் சத்தமிட்டுச் சொன்னான்: "கவனம்... மரத்தின் இதயத்தை அறுத்து விடாதே!"' என்ற வரிகளும், 'திருமணம்' என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதையில், "ஓஹ்.. ஆண்டவனே... உன்னுடன் இருந்ததைப் போல் நான் வேறு எந்தப் பெண்ணுடனும் சந்தோசமாக இருந்ததில்லை ஸலாமா... நீ பெரும் இன்பம்... நீ ஒரு நன்கொடை... எடுத்துக் கொள்... எனது மண்டூஸ்களை எடுத்துக் கொள்.... கழுதையை எடுத்துக் கொள்... பேரீச்ச மரங்களையும் எடுத்துக் கொள்... இவ்வளவு காலமும் நீ எங்கிருந்தாய் பெண்ணே..!" எனும் கூற்றும், 'சிவப்புப் புள்ளி' என்ற கதையின் நாயகி, "யார் கன்னிமையுள்ளவள், யார் கன்னிமையிழந்தவள் என்றெல்லாம் பேசும் அருவருக்கத்தக்க, பைத்தியக்காரத்தனமான செயலைத் தாங்கிக் கொள்ளும் அவலத்தை நினைத்துப் பாருங்கள்!" என்று குமுறியெழுவதும் ஒரு பானைச் சோற்றின் சில பருக்கைகள்தாம்.

அடுத்து, இக்கதைகளின் தலைப்புக்கள் வாசகரின் ஆவலைத் தூண்டும் வண்ணம் அமைந்துள்ளன என்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். அதுமட்டுமன்றி, இக்கதைகளில் இடம்பெறும் மனதை நெகிழச் செய்யும் அழகான வர்ணனைகள் படிப்போரின் சிந்தையை நிச்சயம் ஈர்க்க வல்லன. போரின் அவலத்தைச் சித்திரிக்கும் வகையில் அமைந்த, "அறுவைத் தொழுவத்துக்கு அருகில் உள்ள, அலைகளால் கொண்டுவரப்பட்ட, துருப்பிடித்த நத்தைக் கோதுகளால் நிறைந்த இறுகிய மணல் மேடாக காஸா எனக்குத் தோற்றமளித்தது. நோயுற்றிருக்கும் ஒருவனின் உறக்கத்தில் உள்ள மனக்கிலியை விட நோவினை தரக் கூடியதாக ஒடுக்கமான வீதிகளும் நீட்டிக் கொண்டிருக்கும் பல்கனிகளும் கொண்ட காஸா இருந்தது. இந்த காஸா... செம்மறியாட்டுச் சிறு மந்தையை தனது திசை நோக்கித் திருப்பும் ஊற்றுப் போல ஒரு மனிதனைத் தனது குடும்பம், வீடு மற்றும் நினைவுகளை நோக்கி நகர வைக்கும் மறைமுகமான காரணிகள் யாவை...?" (காஸாவிலிருந்து ஒரு கடிதம்) என்ற வரிகளாகட்டும், ஒரு சிறுவனின் பார்வையில் சொல்லப்பட்டிருக்கும் "காலையில் குர்ஆன் ஓதி முடிந்ததும் எனது ஓதற் பலகையைச் சட்டெனப் போட்டுவிட்டு ஒரு ஜின்னைப் போல் வேகமாகத் தாயாரிடம் சென்று விடுவேன். மளமளவென்று எனது காலையுணவைச் சாப்பிட்டு விட்டு நேராகச் சென்று ஆற்றில் பாய்ந்து விடுவேன். நீந்திக் களைத்ததும் ஆற்றங்கரையில் அமர்ந்து ஆற்றின் சிற்றலைகள் கிழக்குப் பக்கமாக நகர்வதையும் அவை தடித்த அடிப்பகுதிகளைக் கொண்ட அக்கேசியா மரங்களின் பின்னால் மறைவதையும் உற்றுப் பார்த்தபடி அமர்ந்திருப்பேன். இராட்சத அக்கேசியா மரங்களுக்கப்பால் அரக்கர்கள் கூட்டம் வாழ்வதாக நான் கற்பனை செய்வேன். அவர்கள் எனது பாட்டனாரைப் போல, மிக உயரமானவர்களாகவும் ஒல்லியானவர்களாகவும் வெள்ளைத் தாடியுடன் நீண்ட கூர்மையான மூக்கும் கொண்டவர்களாகவும் என் கற்பனையில் படமாக வருவார்கள்" (ஒரு சுறங்கைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரீச்சம் பழங்கள்) என்னும் வரிகளாகட்டும் இக்கதைகளைக் கவித்துவத்தோடு நகர்த்திச் செல்கின்றன என்பதற்கான வெகுசில உதாரணங்களாகும். இவ்வாறான இனிய அழகிய கவிதைப் பாங்கான தமிழ் நடையழகை இத்தொகுதி முழுவதும் நாம் கண்டு அனுபவிக்கலாம்.

எந்த ஓர் இலக்கியப் படைப்பும் அது சார்ந்த மண்ணின் மணத்தை, மக்களின் பண்பாட்டை, அதன் அழகைத் தனக்கே இயல்பான முறையில் பதிவுசெய்திருக்கும். இப்பண்பாட்டுக் கூறுகளையும் அப்படியே சுவை குன்றாமல், மூலத்தின் இயல்புத் தன்மை திரிபடைந்து விடாமல் இன்னொரு மொழிக்குக் கொண்டு செல்லுதல் என்பது கத்தி மேல் நடப்பதான மிகப்பெரும் சவாலாகும். இதனைத்தான் “மூல மொழியில் உள்ள பிரதிகள் முற்றிலும் அவ்வாறே மொழிபெயர்க்கப்பட முடியாதவை என்று கூறுவதை விட, கூடுதலாகவோ குறைவாகவோ மொழி பெயர்க்கப்படக் கூடியவை” என்று கற்ஃபோர்ட் குறிப்பிடுகின்றார். மொழிபெயர்ப்பின் போது மூலமொழியின் பண்பாட்டம்சங்கள், அப்பிரதி சொல்லவரும் செய்தி முதலானவற்றுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்துக்குச் சற்றும் குறைவுபடாமல் இலக்கு மொழியின் வாக்கியவியல், நடையியல் அம்சங்களும் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். பேராசிரியர் எம். ஏ. நுஃமான் குறிப்பிடுவது போல, “ஒரு நல்ல மொழிபெயர்ப்பு என்பது இலக்கு மொழியில் சுயமாக எழுதப்பட்டது போன்ற தற்புதுமையுடன் காட்சி தர வேண்டும்.”

எனவே, ஒரு மொழிபெயர்ப்பாளர் தான் தேர்ந்தெடுத்த பிரதியை மொழிபெயர்க்கும் போது மிக நுண்ணிய ஒரு சமநிலைப் போக்கைக் கடைப் பிடிப்பவராக இருக்கும் நிலையிலேயே அவரால் ஒரு நல்ல மொழி பெயர்ப்பைத் தருவது சாத்தியமாகின்றது எனலாம். அந்த இலக்கை அடைவதில் அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் வெற்றி பெற்றுள்ளார் என்பதையே இத்தொகுதியில் அமைந்துள்ள அவருடைய மொழியாக்கச் சிறுகதைகள் நமக்கு உணர்த்துகின்றன. ஆக மொத்தத்தில், இத்தொகுதியில் அமைந்துள்ள பத்துக் கதைகளும் முத்துக்கள்தாம் என்றால் மிகையன்று.

“ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் அனுபவத்தினைச் சான்று பகரும் ஆய்வறிவாளரைப் போன்று எழுத்தாளருக்கும் ஒரு சிறப்பான, குறியீட்டுப் பாங்கான பாத்திரம் உண்டு. இவ்வாறு சாட்சி பகர்வதன் மூலம் அந்த அனுபவத்திற்கு ஒரு பொது அடையாளம் இடப்படுவதுடன் பூகோள ரீதியாக மேற்கொள்ளப்படும் சொல்லாடலில் அது என்றென்றும் பொறிக்கப்படும்” என்று எட்வர்ட் சயீட் குறிப்பிடுவார். அந்த வகையில், பல்வேறு நாடுகளின், அவற்றின் மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களை மற்றொரு மொழிக்குக் கொண்டு செல்லும் மொழி பெயர்ப்பாளருக்கும் அந்தச் சிறப்பு உண்டு என்பதில் ஐயமில்லை.

எனவே, அரபுச் சிறுகதைகளைத் தமிழுக்குத் தந்து, அரபு நாட்டு மக்களின் கனவுகளை, எதிர்பார்ப்புக்களை, ஆதங்கக் குமுறல்களை, சமுதாய விமர்சனங்களை, அவர்களின் அன்றாட வாழ்வியலில் இரண்டறக் கலந்துள்ள பண்பாட்டம்சங்களைத் தனக்கே உரித்தான ஆற்றொழுக்கான தமிழ்நடையில் உணர்வுபூர்வமாகப் பதிவுசெய்துள்ள அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களின் இந்த முன்முயற்சி தமிழ் இலக்கிய வரலாற்றில் முத்திரை பதிக்கும் என எதிர்பார்க்கலாம்.

(2011 ஆம் ஆண்டு தேசிய சாஹித்திய விருது பெற்ற
"ஒரு சுறங்கைச் பேரீச்சம்பழங்கள்" மொழிபெயர்ப்புச் சிறுகதைத்
தொகுதிக்கு எழுதிய அணிந்துரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3. ஊடறு.கொம்: விழுமிய வாழ்தலை நோக்கி...

என்னுடைய பாடசாலைப் பருவத்தில் கையில் அகப்படும் வெற்றுக் காகிதத் துண்டுகளில் எல்லாம் படம் வரையும் பழக்கம் எனக்கு இருந்தது. பெரும்பாலும் பக்கவாட்டுத் தோற்றம் கொண்ட பெண்முகமாகவே அது இருக்கும். விசேடம் என்னவென்றால், சொல்லி வைத்தது போல, எல்லாப் படத்திலும் அழகிய நீண்ட விழியின் அடியில் ஒரு கண்ணீர்த் துளியும் கட்டாயம் இருக்கும். அந்தச் சிறு வயதிலேயே பெண்ணையும் கண்ணீரையும் இணைத்துப் பார்க்கும் மனப்பாங்கு எனக்கு ஏன் வந்தது என்று தெரியவில்லை. ஒருவேளை, என்னைச் சுற்றியிருந்த சூழலில் அன்றாடம் நான் கண்ட, சந்தித்த பெண்களின் நெருக்கடியான, துன்பகரமான வாழ்வு என் சின்னஞ்சிறு மனதை வெகுவாகப் பாதித்திருக்கக்கூடும் என நினைக்கின்றேன்.

உண்மைதான். இனம், மதம், மொழி, பிரதேசம் என எல்லா எல்லைகளையுமே கடந்து பார்த்தாலும், அங்கே உலகப் பொதுமையாய் ஒரே ஒரு விடயம் மட்டும் மேலோங்கி நிற்கின்றது. அதுதான் "பெண்"ணின் துயரம். அவளின் வலி. அவளுக்கு எதிரான இரக்கமற்ற அடக்குமுறைகள். அவள் அனுபவிக்கும் கொடுமையான அவமானம். அவளின் இருப்பையே மனித இருப்பாக அங்கீகரிக்க மறுக்கும் அவலமான சூழலில் எப்படியேனும் வாழ்ந்துதொலைக்க வேண்டிய நிர்ப்பந்தம். இப்படியாக, அவளின் ஆதித்துயர் (ஃபஹீமாவுக்கு நன்றி) நீண்டு தொடர்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெண்" என்ற உடனேயே அவளின் "உடல்" மட்டுமே முன்னிலைப்படுத்தப்படும் அசிங்கமான அவலச் சூழலை இன்று சர்வசாதாரணமாக ஏற்றுக்கொள்ளும் ஒரு நிலை தோன்றியுள்ளமை கசப்பான நிஜம். அதனை நிலைநிறுத்திய "பெருமை(!?)" முதலாளித்துவ பன்னாட்டு நிறுவனங்களையும் கனவுத் தொழிற்சாலை எனப்படும் சினிமாவையும், அதற்கு சற்றும் சளைக்காத சின்னத்திரையையும் பெரிதும் சாரும். அதேவேளை, பெண்ணுக்கான பத்திரிகைப் பக்கங்களிலும், மின்னியல் ஊடக நிகழ்ச்சிகளிலும், இணையதளப் பக்கங்களிலும் சமையல், சிகையலங்காரம், தையல், பூவேலைப்பாடு, வீட்டு அலங்காரம் சார்ந்த குறிப்புக்களே பெரும்பாலும் இடம்பெற்று, அவற்றைத் தவிர வேறு எதற்குமே "பெண்" லாயக்கில்லை என்பதான பிரமையைத் தோற்றுவிக்கும் வேதனை மறுபுறம்!

இந்நிலையில், "பெண்"ணின் தனித்துவமான இருப்பையும் அவளின் தொய்வுறாத ஆளுமையையும் தொடர்ந்து நிலைநிறுத்தும் தொடர் போராட்டத்தில் கடந்த பத்து வருடகாலமாக அயராது உழைத்துவரும் "ஊடறு"வை, அதிகார வெளியினை ஊடறுத்து உரத்து ஒலிக்கும் அதன் கம்பீரமான குரலை மிக முக்கியமானதாகக் கருதுகின்றேன்.

காரணம், ஒரு காலத்தில் பெண்களுக்கென்றொரு தனித்துவமான குரல் இருக்கவில்லை. அவர்கள் குரல்கள் அற்றோராய் அல்லது யாருடையதோ குரலைப் பிரதி பண்ணும் நிர்ப்பந்தத்துக்கு ஆளானவர்களாய், மௌனப் பெருவெளியின் பாத்தியக்காரிகளாய் வார்க்கப்பட்டிருந்தார்கள். அதிகம் பேசாத, குரலை உயர்த்தாத பெண்களே குலப் பெண்களாய், போற்றுதலுக்கு உரியவர்களாய் சமூக மனநிலையில் பதிக்கப்பட்டிருந்தார்கள். தமது பிரச்சினைகளை, பெண்ணினத்தின் பிரச்சினைகளை, அவர்களுக்கான உரிமைகளைப் பற்றியெல்லாம் உரத்துப் பேசும் பெண்கள் அடக்கமற்றவர்களாக, வெட்கமற்றவர்களாக நோக்கப்படும் அவலமான நிலை இருந்தது. இப்போதும்கூட, பெண்களின் பிரச்சினைகள், பெண்ணுக்கான சமத்துவம் பற்றியெல்லாம் பேசும் பெண்களை, "பெண்ணியவாதி" என்று முத்திரை குத்தி, ஒரு தினுசான 'உயிரி'யாய்ப் பார்க்கும்/ ஓரங்கட்டும் பொது மனநிலை இருக்கவே செய்கின்றது. இது கசப்பான கள யதார்த்தமாகும்.

பொதுவாகக் குடும்பத்திலும் சமூகத்திலும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவர்களுக்கெதிரான வன்முறைகள் என்பன பற்றியெல்லாம் வெகுஜன ஊடகங்களில் வெறுமனே ஒரு செய்தித் துணுக்காக மட்டுமே பேசப்படுகின்றன. இணைய வெளிகளிலோ என்றால்,பெண்களுக்கு எதிரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வன்முறைகள் இடம்பெற்ற முறை பற்றிய கற்பனார்த்தமான வக்கிர வர்ணிப்புகள், தத்தமது தளங்களின் "ரேட்டிங்"கை உயர்த்திக்கொள்வதற்கான கீழ்த்தரமான உத்தியாய்க் கைக் கொள்ளப்படுகின்றன. இதனிலும் ஒருபடி மேலே போய் பொதுவெளியிலும், சமூக வலைதளங்களிலும் பாலியல் சார்ந்த வன்முறைகளுக்குப் பெண்ணையே குற்றவாளிகளாக முன்னிறுத்தி, பெண்களுக்கு உபதேச வகுப்பெடுக்கும் பண்பாடற்ற நடைமுறைகள் விசனத்துக்கு உரியவகையில் சர்வ சாதாரணமாக மாறிவிட்ட அவலம் தொடர்கிறது.

இந்நிலையில், பெண்கள் பற்றிய அனைத்துக் கோணங்களை யும் அலசி ஆராயவும், அவை குறித்துத் தொடர்ந்து விழிப்புணர்வூட் டவும் பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்கி ஆற்றுப்படுத்தவுமான ஓர் அகன்ற "வெளி"க்கான தேவைப்பாடு மறுதலிக்கப்பட முடியாததாகும். இந்தப் பின்புலத்திலேயே "ஊடறு டொட் கொம்" இணையதளம் மிகுந்த கவனக்குவிப்பைப் பெறுகின்றது. தனக்கான முக்கியத்துவத்தினை, சமூகத்தில் தனக்கான வகிபாகத்தை, 'அதிகார வெளியினை ஊடறுத்து' நிலைநிறுத்துவதாக தொடர்ந்து இயங்கி வருகின்றது. பெண்களால், பெண்களுக்கான சுயத்தின் குரலை உரத்து ஒலிக்கச் செய்து வருகின்றது.

பத்தாண்டுகால நிறைவினை எட்டி நிற்கும் "ஊடறு" பெண்கள் சார்ந்த செய்திகளை, அறிக்கைகளை வெளியிடுவதோடு மட்டுமின்றி, இணைய வெளியிலே பெண்களின் எழுத்துக்களுக்குக் களம் தந்து அவற்றை ஒரேயிடத்தில் ஆவணப்படுத்தும் முயற்சியில் பெண் படைப்பாளிகளின் முக்கியத்துவம் வாய்ந்த பல நூல்களை அது தனது நூலகத்தில் சேமித்து வைத்துள்ளது. அதுமட்டுமல்ல, பெண்களின் எழுத்துக்களைத் தொகுத்து நூல் வடிவில் வெளிக்கொண்டுவரும் உன்னதப் பணியிலும் ஈடுபட்டு வருகின்றது.

அந்த வகையில், "ஊடறு" வெளியிட்டுள்ள புத்தகங்களாக, புலம்பெயர் பெண்களின் சிறுகதைகளின் தொகுப்பாய் அமைந்த, "புது உலகம் எமை நோக்கி..." (1999), "ஊடறு" (2002), பெண்ணியாவின் "என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை" (2006), "மை" (2007) "இசைபிழியப்பட்ட வீணை" (2008), என்பவற்றையும், ஊடறுவும் விடியல் பதிப்பகமும் சேர்ந்து வெளியிட்ட "பெயரிடாத நட்சத்திரங்கள்" (2011) எனும் நூலையும் குறிப்பிடலாம். குறிப்பாக, "பெயரிடாத நட்சத்திரங்கள்" நூல் வெளியீடு மூலம் கிடைக்கும் வருமானத்தை, ஈழப் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் நல்வாழ்வுக்காகச் செலவழிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் சமுதாய நோக்கு, "வெறுமனே வாய்ச்சொல் வீரராய் இருக்கும் பலர் முன்னே, ஒரு செயல் வீராங்கனையாய்" ஊடறு செயற்பட்டு வருகின்றது என்பதை ஐயந்திரிபற உணர்த்தி நிற்கின்றது.

ஊடறு தளத்தின் பெயரைப் போலவே, அது தந்துநிற்கும் ஆக்கங்களும் வித்தியாசமானவையாக, தனித்துவமானவையாகவே உள்ளன. உலகளாவிய ரீதியில் புறச்சூழல் பேதங்களுக்கு அப்பால் பல்வேறு தளங்களிலும் "பெண்" எதிர்கொள்ளும் துயரங்களை, அநீதிகளைப் பதிவுசெய்து, அவற்றுக்கு எதிரான தனது குரலை அது ஓங்கி ஒலிக்கச் செய்துவருகின்றது. பொதுவாக, சமூகத்தில் பிறர் பேசத் தயங்கும், பேச மறுக்கும் சர்ச்சைக்குரிய விடயங்களையும், கட்டாயம் பேசப்பட வேண்டிய பல விடயங்களையும் அது துணிவோடு பதிவுசெய்வதைக் கண்ணுறுந்தோறும் ஓர் உள்ளார்ந்த வியப்புணர்வு மேலிடுவதைத் தவிர்க்க முடியவில்லை.

நாம் வாழும் உலகம் உய்வடைவதற்குப் பணிசெய்வதில் பெண்ணின் பாத்திரம்/வகிபாகம் மிகவும் அழுத்தமானது என்பதற்கு ஊடறுவின் அற்புதமான பதிவுகள்/பணிகள் சான்றாய்த் திகழ்கின்றன. அவ்வாறே, நான்கு சுவர்களுக்குள் அகப்பட்டு, வெறுமனே கண்ணீர் சிந்திக் கொண்டிருக்காமல், பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நகரவும், அதனைக் கடந்து செல்லவும் ஊக்கம் தருவதாகவும் அதன் பதிவுகள் அமைந்திருப்பது மிகுந்த போற்றுதலுக்கு உரியது. அவ்வாறே, குறுகிய வட்டங்களுக்குள் நின்றுவிடாமல், அகன்ற வெளியில் சிறகடித்துப் பறந்துதிரிந்து உலகினை உற்றுநோக்கும் வழிகளைத் திறந்துவிடும் முனைப்பில் அது தளராது இயங்கிவருகின்றமை நமக்கெல்லாம் ஒரு சிறந்த முன்மாதிரியைத் தந்துநிற்கின்றது. இன்னொரு வகையில் சொல்வதானால்,

"பூட்டற்ற கதவுகளுடன்,
சாத்த முடியாத ஜன்னல்களுடன்
எப்பக்கமும் வாயிலாக
வீடொன்று வேண்டும் எனக்கு" (நன்றி: ஆழியாள்)

என்று கேட்கும் பெண் ஆளுமைகளின் தாய் வீடாக "ஊடறு" திகழ்ந்துவருகின்றது.

ஊடறுவில் இடம்பிடித்துள்ள பதிவுகளில் உள்ள பன்முகத் தன்மையும், அவை உள்ளடக்கியுள்ள விடயங்களில் காணப்படும் பரந்துபட்ட கருத்தியல் தளங்களும் விதந்துரைக்கத் தக்கவை. "ஊடறு"வின் விசாலமான பார்வைக்கும் அணுகுமுறைக்கும் மிகச் சிறந்த சான்றாய் அவை திகழ்கின்றன. அத்தோடு, பிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளங்களில் பதிவான காத்திரமான ஆக்கங்களையும்கூட வரட்டுத்தனமான "ஈகோ"வுக்கு இடங்கொடுக்காமல், நன்றிகூறி மீள்பதிப்புச் செய்துவருகின்றமை இத் தளத்தின் குறிப்பிடத்தக்க இன்னோர் சிறப்பம்சம் எனலாம்.

இந்தத் தளத்தில் சுமார் 84 கவிஞைகளின் படைப்புகள் பதிவாகியுள்ளன. அவர்களுள், ஈழத்துக் கவிதை வரலாற்றில் அழுத்தமான தடம் பதித்துச் சென்று, "தூக்கியெறிப்பட முடியாத கேள்வியாய் நம் முன்னே பிரசன்னமாகி இரு"ப்பதாய்ப் பிரகடம் செய்த மாபெரும் கவிஞை சிவரமணி, செல்வி ஆகியோரும் உள்ளடங்குவர்.

"ஊடறு"வில் உள்ள மற்றொரு சிறப்பம்சம், இதில் மிக முக்கியமான/கலைத்துவமான திரைப்படங்கள், குறுந்திரைப் படங்கள், நாடகங்களின் காணொளிகள் இணைக்கப்பட்டு, அவைகுறித்த அறிமுகக் குறிப்புகள் இடம்பெற்று வருவதாகும். ஈரானிய சினிமா, அல் ஜெஸீராவின் ஆவணப் படங்கள் என்பவை இவற்றுள் சிறப்பானவை. "பொன்னி அரசு"வின் ஓரங்க நாடகத்தின் காணொளி, ஓர் அற்புதமான கலை அனுபவத்தைத் தரும் அத்தகைய கலைப் படைப்புக்களுக்கான உதாரணமாகும்.

அத்துடன், செயற்பாட்டுத் தளத்தில் நேரடியாகவே களமிறங்கி வெவ்வேறு நாடுகளிலும் உள்ள பெண்களை ஒருங் கிணைத்து, அவர்களின் கருத்துக்களைப் பகிரவும், பெண்கள் சார்ந்த பன்முகப் பிரச்சினைகள், தீர்வுகளைப் பற்றிக் கலந்துரை யாடவுமாய் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்யும் அடுத்த கட்டத்தை நோக்கியும் நகர்ந்துள்ளது. அந்தவகையில், சுவிஸ் (2006), ஜெர்மன் (2007), ஃபிரான்ஸ் (2008), லண்டன் (2009), இந்தியா (2014) எனும் நாடுகளில் இடம்பெற்ற பெண்ணியச் சந்திப்புகளின் தொடர்ச்சியாக, அண்மையில் ஊடறு மலையகப் பெண்களுடன் இணைந்து ஹற்றனில் (இலங்கை— 2015) மற்றொரு பெண்ணியச் சந்திப்பினை நடாத்தியது. இவ்வாறு, பன்முகத் தளங்களிலும் "ஊடறு"வின் வீரியமிக்க செயற்பணி தொடர்ந்து வருவது மிகுந்த பெருமிதத்துக்கு உரியது. ஆதிக்கச் சக்திகளால் நசுக்கப்படும் குரல்களுக்கு மொழிதரும் தாயாய், பெண்களின் எழுத்துக்களுக்குக் களம் தரும் பிரபஞ்ச வெளியாய்த் திகழும் "ஊடறு"வின் பணிகள் மகத்தானவை என்பதில் ஐயமில்லை.

எந்தவிதமான இலாப நஷ்டங்களுக்கும் அப்பால், எல்லாவித மான கோபத்தையும் வெறுப்பையும் கடந்தும் அன்பு செலுத்தி அரவணைப்பவள், தாய். அவ்வாறே, தன்னை அகழ்வாரையும் இகழ்வாரையும்கூடத் தாங்கி, உலகின் உயிரிகள், உயிரிலிகள் முதலான அனைத்தின் இருப்புக்கும் ஆதாரமாய் இருக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநீதியின் அழுத்தம் அதிகரிக்கும் பட்சத்தில் எரிமலையாய்க் கொதித்தெழும் பூமித்தாயின் படிமம் உன்னதமானது. "ஊடறு" விலும் அத்தகைய தன்மையை நாம் காணலாம். தான் சார்ந்த சமூகம்—மொழி என்பவற்றுக்கு அப்பால் உலகு தழீஇய மனித நேயத்தைத் தன்வயப்படுத்திச் சிந்திக்கும், சிந்திக்கத் தூண்டும் அதன் சால்புடைமை பெரிதும் மதிக்கத்தக்கது. வெற்றுக் கோஷங்களுக்கு அப்பால், சமூக வெளியிலே பெண்கள் தொடர்பான ஆய்வுகளை, கலந்துரையாடல்களை மேம்படுத்த தொடர்ந்து முனைப்புடன் இயங்கிவரும் அதன் அர்ப்பணிப்பு விதந்து போற்றத்தக்கது.

அதேவேளை, "ஊடறு"வில் வெளிவரும் கட்டுரைப் பதிவேற் றத்தின்போது, பத்திகளின் இடையில் அடைப்புக்குறிகளுக்குள் இடம்பெறும் ஆங்கிலச் சொற்களின் அல்லது நிறுத்தக் குறி களுக்கான எழுத்துருக்கள் மாற்றப்படாமல் சிலபோது தமிழிலேயே இடம்பெற்றுவிடுதல், சில கட்டுரைகளில் சொற்களுக்கும் பந்திகளுக்கும் இடையிலான இடைவெளிகள் இல்லாமல் போதல் முதலான வடிவமைப்புச் சார்ந்த சிற்சில குறைபாடுகள் குறித்து தளநிர்வாகிகள் சற்றுக் கவனம் எடுப்பது நன்று.

எது எவ்வாறிருப்பினும், ஒரு தசாப்த காலத்துக்குள், குறிப்பிட்டுக் கூறத்தக்க பல அடைவுகளை எட்டியிருக்கும் இந்த இணைய தளத்தின் இன்றைய உயர் நிலைக்குப் பின்னால் உள்ள அர்ப்பணிப்பும் இடையறாத முயற்சியும் உழைப்பும் புறந்தள்ளப்பட முடியாதவை; மிகுந்த போற்றுதலுக்கு உரியவை; ஆதர்சமாகக் கொள்ளத்தக்கவை. அந்த வகையில், "ஊடறு" இனிவரும் காலங்களிலும் தளைகளற்று விடுதலைபெற்ற விழுமிய வாழ்தலுக்கு வழிகோலும் வகையில் தன்னுடைய காத்திரமான பணிகளை இதைவிடவும் வேகமாகவும் வீரியமாகவும் முன்கொண்டு செல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 4. மொழியின் விடியலை முழங்கும் குரல்கள்

ரவிக்குமாரின் "குரல் என்பது மொழியின் விடியல்— அரபுக் கவிதைகள்" மொழிபெயர்ப்பு நூலைப் படித்துக்கொண்டிருந்தேன். நிஸார் கப்பானி, லேனா கலாஃப் டுஃப்பாஹா, தாஹா முஹமது அலி, ஃபுயாத் ரிஃப்கா, அடோனிஸ், மாரம் அல் மஸ்ரி, ஃபதில் அல் அஸ்ஸாவி ஆகிய ஏழு அரபுக் கவிஞர்களின் கவிதைகள் அழகிய, எளிய தமிழில் மனதை ஈர்க்கும் வகையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இத்தொகுதியில் உள்ள ஒவ்வொரு கவிதையும் முக்கியமானதுதான். அவற்றின் பாடுபொருள்கள் பலதிறப்பட்டவை. அவற்றில் அனேகமானவை அரசியல் கவிதைகள். இக்கவிதைகள் அனைத்துமே பிடித்திருந்தாலும், நிஸார் கப்பானி (1932—1998)யின் இரண்டு கவிதைகளும் லேனா கலாஃப் டுஃப்பாஹா எனும் பெண் கவிஞரின் இரு கவிதைகளும் மிக முக்கியமானவையாக எனக்குத் தோன்றின. காரணம், அவை என் மனதில் ஏற்படுத்திய அதிர்வுகள் வித்தியாசமானவை. ஆம், முதலிரண்டும் "பெண்" பற்றியவை. அடுத்தவை இரண்டும் போரின் விளைவான இடப்பெயர்வு பற்றியவை. இரண்டையும் தனித்தனியே நோக்குவோம்.

I

மொழிபெயர்ப்பாளர் ரவிக்குமார், நிஸார் கப்பானி பற்றிய அறிமுகக் குறிப்பில் சொல்லியிருக்கும் ஒரு விடயம் இக்கட்டுரையின் பேசுபொருளைப் பொறுத்தளவில் மிக முக்கியமானது. தனக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்காத ஒருவரைத் திருமணம் செய்துவைக்க ஏற்பாடு செய்ததால் தனது சகோதரி தற்கொலை செய்துகொண்டமை, நிஸார் கப்பானியின் எழுத்துக்களில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, அரபுப் பெண்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பெண்களின் நோக்கில் இருந்து அவர்களின் பிரச்சினைகளைப் பார்க்குமாறு அவருக்கு உந்துதல் அளித்திருக்கிறது. இதனை மிகத் துல்லியமாக உணர்த்தும் இரண்டு கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளன.

1.) ஒரு முட்டாள் பெண்ணின் கடிதம் (ஒரு ஆணுக்கு எழுதியது),

2.) எனக்கு வலிமை இல்லை என்பனவே அவ்விரு கவிதைகளாகும்.

"ஒரு முட்டாள் பெண்ணின் கடிதம் (ஒரு ஆணுக்கு எழுதியது) எனும் தலைப்பே கொஞ்சம் நக்கலாகத்தான் உள்ளது. ஐந்து சிறுபகுதிகளாய் அமைந்த இந்தக் கவிதையின் முக்கிய புள்ளி, அதன் வரிகளிடையே இழையோடிக் காணப்படும் துயரம்தான். ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்டுவரும் ஓர் இனத்தின் துயர்தோய்ந்த ஆன்மாவை அக்கவிதையின் வரிகள் அடையாளப்படுத்துகின்றன. "எனதருமை எஜமானே" எனத்தொடங்கும் முதல் பகுதியில், தன் பெயரைப் பற்றிக் கூற முற்பட்டுப் பின்,

"... பெயர்களை விடுங்கள்
ரானியா அல்லது ஸெய்னப்
அல்லது ஹிண்ட் அல்லது ஹய்ஃபா
நாம் சுமந்துகொண்டிருக்கும் மிகவும்
அற்பத்தனமான விஷயம் பெயர்கள்"

என்று சொல்லும் வரிகள் கூர்ந்து கவனிக்கத் தக்கவை. இங்கே ஒரு பொதுமைப்படுத்தல் இருக்கிறது. பெயர்களும் நபர்களும் வெவ்வேறானாலும் பிரச்சினை ஒன்றுதான் அல்லது ஒத்த தன்மையதுதான் என்ற செய்தி இவ்வரிகளுக்குள் பொதிந்திருக்கக் காணலாம். ஆம், உலகளாவிய ரீதியில் "பெண்"ணின் பிரச்சினைகள் பெரிதும் பொதுவானவைதாம், இல்லையா?

இக்கவிதையின் இரண்டாம் மூன்றாம் பகுதிகள், பெண்களால் தமது எண்ணங்களை, கருத்துக்களை வெளிப்படையாகக் கூறுவதில் உள்ள இடர்ப்பாடுகளையும் அவர்கள் மீதான ஒடுக்குமுறைகளையும் பற்றிப் பேசுகின்றது. கீழைத்தேசம் பெண்களுக்கு என்னென்னவெல்லாம் செய்துள்ளது என்ற பட்டியல்படுத்தலில்,

"பெண்களின் சேமிப்புப் பெட்டகங்களிலிருந்து
கனவுகளைப் பறிமுதல் செய்துவிட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்குகிறது பெண்களின் நுண்ணுணர்வுகளை
பெண்களிடம்
கத்திகளால் அரிவாள்களால் பேசுகிறது
வசந்தத்தை, வேட்கைகளைப் படுகொலை
செய்கிறது
பெண்களின் மண்டையோடுகளைக்கொண்டு
தயாரிக்கிறது
தனக்கான மகுடத்தை"

என்று, கலாசாரத்தின், பாரம்பரியத்தின், சாதியத்தின், மதத்தின் இன்னபிறவற்றின் பெயர்களால் எல்லாம் காவுகொள்ளப்படும் பெண்களையும் அவர்கள்தம் உணர்வுகளையும் பற்றிச் சொல்லிச் செல்லும் இவ்வரிகள் தரும் வலி, இதயத்தைக் கீறிப்பிளக்கிறது.

"ஆத்திரப்படாதீர்கள் எஜமான்!" என்று மன்றாட்டமாய்த் தொடங்கும் 4ஆம் பகுதி, ஒரு பெண்ணால் தனக்கெதிராய்ப் போடப்பட்டிருக்கும் தளைகளை அறுத்தெறிவது அவ்வளவு சுலபமானதல்ல, அது ஒரு மிகபெரும் போராட்டமே என்பதை உணர்த்துகின்றது.

"... கீழைத்தேச ஆண்
உணர்வுகளைப் பற்றி, கவிதைகளைப் பற்றி
கவலைப்பட மாட்டான்
அவனுக்குப் பெண்ணென்றால் படுக்கை
மட்டும்தான்"

என்ற வரிகளின் தீவிர உணர்வு ஓர் எரிதழலாய் இதயத்தைத் தகிக்கச் செய்கின்றது. "பெண்" என்றால் "உடம்பு" என்றே பார்க்கப் பழக்கப்பட்டுப்போன, கலை — இலக்கியங்களில்கூட "பெண்" ஓர் "சதைப் பிண்டமாக"வே வார்க்கப்படும், மூன்று வயதா, 60 வயதா என்ற வயது வேறுபாடுகளுக்கு அப்பால், பெண்ணுடைய உடல் வெறும் யோனியாக மட்டுமே பார்க்கப்படும் சமூக அவலங்கள் நிறைந்த ஒரு சூழலில், இந்த வரிகளின் தாக்கம் மனதை மிகவுமே கனத்துப்போகச் செய்கின்றது. ஆன்மாவின் மெல்லுணர்வுகள் புறந்தள்ளப்பட்டு, பெண்ணும் மனித உயிரிக்கான இயல்பான தகைமைகள், திறன்களைக் கொண்டிருக்கின்றாள் என்ற உண்மை கவனங்கொள்ளப்படாமல், "அவள்" வெற்று ஜடமாக மட்டுமே நோக்கப்படுவதன் அவமான உணர்வை, வேதனையைப் பகிர்ந்துகொள்ளும் அழுத்தமான வரிகள், இவை.

5ஆம் பகுதியிலே,

"மன்னியுங்கள் எஜமான்
ஆண்களின் ராச்சியத்தை நான் தாக்கி இருந்தால்
மகத்தான இலக்கியங்களென்றால் அவை
ஆண்களின் இலக்கியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு அவர்களுக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்டது
காமம் அவர்களுக்கென்று விறகப்படும்
போதைப்பொருள்
பெண்களின் சுதந்திரம் என்பது நைந்துபோன ஒரு
கட்டுக்கதை
ஆண்களின் சுதந்திரம் என்பதுதவிர
சுதந்திரமென்று வேறெதுவுமில்லை

என் எஜமானே!
என்னைப்பற்றி நீங்கள் நினைப்பதையெல்லாம்
சொல்லுங்கள்
எனக்குக் கவலையில்லை;
மக்குஞ் முட்டாள்... பைத்தியம்...
எனக்குக் கவலையில்லை
தனது பிரச்சினைகளைப் பற்றி எந்தவொரு பெண்
எழுதினாலும்
ஆண்களுக்கு அவள் முட்டாள்தான் ..."

என்று தொடரும் வரிகள் கன்னத்தில் ஓங்கி அறைவதுபோல் அழுத்தந் திருத்தமாகப் பெண்ணின் குரல் ஒடுக்கப்படுவதன் வலியை, அவலத்தை, அதன் மீதான ஆதங்கத்தைப் பதிவுசெய்கின்றன. சமூக வெளியிலே, பெண்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகின்ற, எழுதுகின்ற பெண்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள், கேலிகள், அவமானப்படுத்தல்கள் என்பன இன்று நேற்றல்ல, என்றைக்குமானது, பிரதேச எல்லைகளுக்கு அப்பாற்பட்டது என்பதையே இந்த வரிகள் சாட்சி சொல்லிநிற்கின்றன.

உரிமைகளில் எல்லாம் மேலானது சுதந்திரத்துக்கான உரிமையே! ஆக, மனித சுதந்திரம் என்ற பொதுமைப்படுத்தப்பட்ட எண்ணக்கருவுக்குள் "பெண்"ணின் சுதந்திரமும் உள்ளடங்குகின்றது என்ற புரிதல் வரண்டுபோய், "அவள்" ஆதிக்கம் செலுத்தப்படக் கூடியவள். கட்டுப்படுத்தப்பட வேண்டியவள் என்ற நோக்குநிலை இயல்பான ஒன்றாக சமூக மனநிலையில் வேரோடிப் போயுள்ள காரணத்தினாலேயே "பெண்ணின் சுதந்திரம்" தனியாக அழுத்திப் பேசப்பட வேண்டிய ஒன்றாக மாறிவிட்டிருக்கிறது. இதனையே,

"ஆண்களின் சுதந்திரம் என்பது தவிர
சுதந்திரமென்று வேறெதுவுமில்லை"

என்ற வரிகள் மூலம் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

இனி, குறித்த தொகுதியில் உள்ள நிஸார் கப்பானியின் இரண்டாவது கவிதையைப் பார்ப்போம். முன்னைய கவிதை ஒரு பெண்ணின் குரலாய் ஒலித்ததைக் கண்டோம். "எனக்கு வலிமை இல்லை" எனும் தலைப்பில் அமைந்த அடுத்த கவிதை ஆணின் குரலில் பெண்ணின் மகத்துவத்தைப் பேசுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனது பழக்கங்களை என்னால் உடைக்க முடியாது
முப்பது ஆண்டுகளாக
முன்னூறு ஆண்டுகளாக
நீ இப்படித்தான் இருக்கிறாய்
புட்டியில் அடைபட்டிருக்கும் புயல்
பெண்ணின் உடலொன்று இயல்பாக
ஆணின் வாசனையை அறிகிறது
இயல்பாக அதைத் தாக்குகிறது
இயல்பாக வெற்றிகொள்கிறது"

என்ற வரிகள் காலங்காலமான பெண்ணின் இருப்பைப் பற்றியும் அந்த இருப்பு எத்தகையது என்பது பற்றியும் பேசுகின்றது.

அதனையடுத்த வரிகளில்,

"ஒரு ஆண் தன்னைப்பற்றிச் சொல்வதை ஒருபோதும்
நம்பாதே
அவன் சொல்வான் கவிதைகளை
உருவாக்கினேனென்று
குழந்தைகளை உருவாக்கினேனென்று
பெண்தான் கவிதைகளை எழுதுகிறாள்
ஆண் அவற்றின் கீழ் தனது பெயரைப்
பொறித்துக்கொள்கிறான்
பெண்தான் குழந்தைகளைப் பெறுகிறாள்
ஆண் மகப்பேறு மருத்துவமனையின் பதிவேட்டில்
தந்தையென்று தனது பெயரை எழுதிக்கொள்கிறான்"
என்று கூறிவிட்டு அடுத்த பகுதியில்,
"உனது இயல்பை மாற்றும் வலிமை எனக்கில்லை"

என்று தொடங்கித் தொடர்கின்றார்.

பெண்ணுடைய பணிகள் தொடர்பில், அவளுடைய முயற்சிகள் தொடர்பில் சமூக அங்கீகாரம் எத்தகையது, அவளுடைய உழைப்பு சுரண்டப்படும் விதம் என்பன குறித்த உள்ளார்ந்த கூர்மையான விமர்சனத்தை இவ்வரிகள் தாங்கி நிற்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

மேலும்,

"உன்னை அடக்கவோ பழக்கவோ உனது
இயல்பூக்கங்களை ஆற்றவோ
என்னால் இயலாது
அது முடியாத வேலை
உன்மேல் எனது அறிவைப் பிரயோகித்தேன்
மூடத்தனத்தை சோதித்துப் பார்த்தேன்
எதுவும் பலன் தரவில்லை
வழிகாட்டலோ வசீகரமோ எதுவும் பயன் தரவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ இருப்பதுபோல
புராதனமாகவே இரு"

என்ற அவரது வரிகள் மிக முக்கியமானவை.

உண்மையில் சமூக நடைமுறையில் அவர் சொல்வதற்கு மறுதலையாகவே பெண் நடத்தப்படுகிறாள். பெண் பிறந்தது முதல் "பழக்கப்படுத்தப்படுகிறாள்". 'இன்னின்னவைதாம் உனக்கானவை, உனக்கான துறை, நீ இப்படித்தான் இருக்க வேண்டும்' என்றெல்லாம் காலந்தோறும் "புகட்டி வளர்க்கப்படுகிறாள்". சமூகம் ஏலவே வடிவமைத்திருக்கும் ஒரு "பாத்திரத்துக்குள்" ஊற்றப்பட்டு வார்க்கப்படுபவளாகவே பெண் இருக்கின்றாள். மலையாளத்தில் இருந்து தமிழுக்கு வந்த "36 வயதினிலே" படத்தில் 'ஒரு பெண் எதைச் செய்யலாம் என்று ஐந்து இருக்கும். எதைச் செய்யக்கூடாது என்று 50 இருக்கும். எல்லாருக்கும் பிடித்த அந்த ஐந்தை நாம் செய்யலாம், நமக்குப் பிடித்த அந்த 50 ஐ நாம் செய்யக்கூடாது அவ்வளவுதான் ஒரு பெண்ணின் வாழ்க்கை' என்றொரு வசனம் வரும். பெண்ணின் வாழ்க்கையைப் பொறுத்தவரையில் அதுதான் அனேகமான வீடுகளிலும் சமூகங்களிலும் உள்ள நிலை. இந்த நிலை சரியல்ல, மாற்றத்துக்குள்ளாக வேண்டும் என்ற கவிஞரின் மன ஆதங்கத்தையும் எதிர்பார்ப்பையுமே மேற்கண்ட வரிகளில் அவர் வெளிப்படுத்தி இருக்கின்றார் எனத் தோன்றுகின்றது.

"உனது இயல்பை மாற்றும் வலிமை எனக்கில்லை
எனது புத்தகங்கள் உனக்குப் பயன்படாது
எனது நம்பிக்கைகள் உன்னை சமாதானம் செய்யாது
நான் சொல்லும் ஆறுதல் நன்மை பயக்காது"

என்ற வரிகளின் வழியே கவிஞர் சொல்லவரும் சேதி என்ன? "பெண்ணே! நீ நீயாகவே இருந்துகொள், யாருடைய திணிப்பையும் அங்கீகரிக்காமல் நீ உன் சுயத்தோடு வாழ்" என்ற கோரிக்கை அவ்வரிகளில் உள்ளார்ந்து இருப்பதாய் உணரமுடிகிறது. அந்தவகையிலும், பெண்ணின் சுயத்தை, அவளது இருப்பின் இயல்பை மிக வலிமையாக எடுத்துரைக்கும் மிக முக்கியமான ஒரு கவிதை இதுவென்றே எனக்குத் தோன்றுகின்றது.

II

இனி, இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள பெண் கவிஞர் லேனா கலாஃபின் கவிதைகளின் பக்கம் நம் கவனத்தைத் திருப்புவோம். அவை இரண்டும் நம் கவனத்தைப் பெரிதும் ஈர்ப்பதற்குப் போதிய நியாயங்கள் உள்ளன. ஆம், அக்கவிதையின் பாடுபொருள் மூன்று தசாப்தகால யுத்தத்தைச் சந்தித்த, அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரான வடுக்களைச் சுமந்த நம்முடைய தாய்மண்ணுக்கும் உரியது என்பதே அவற்றுள் முதன்மையானது.

ஒருமுறை பேராசிரியர் நுஃமானுடன் உரையாடிக்கொண்டு இருக்கும்போது, "நீங்கள் தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து, அவர்களுக்கு எதிரான பெரும்பான்மைச் சமூகத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்துப் பல கவிதைகள் எழுதி இருக்கும் அதேவேளை, முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து எழுதவில்லை என்று நிலவிவரும் குற்றச்சாட்டு குறித்து என்ன பதில் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன். அப்போது, அவர் எனக்குச் சொன்ன பதில் மிக முக்கியமானது. "இதோ பாரும்மா, ஒரு கவிஞன் எழுதும் படைப்போ பிற படைப்பிலக்கியமோ குறித்த ஒரு கருத்தினை, உணர்வினைப் படைப்பாக வெளிப்படுத்தும்போது, அது இன, மத, மொழி, பிரதேச எல்லைகளுக்கு அப்பால் முழு மானிடத்துக்குமானதாக, பொதுமையாகி விடுகின்றது. உதாரணமாக, அடக்குமுறைக்கு எதிரான படைப்பாளியின் குரல் என்பது, எல்லாவித அடக்குமுறைகளுக்கும் எதிரானதுதான். காலா காலத்துக்கும் அது எல்லாவிதமான அடக்குமுறைகளுக்கும் எதிரான குரலாய் ஒலித்துக்கொண்டே இருக்கும். மாறாக, ஒவ்வொரு சம்பவத்தைப் பற்றியும் எழுதுவது என்பது பத்திரிகை நிருபரின் வேலையே தவிர, கவிஞனின் வேலையல்ல" என்று அவர் பதிலளித்தார். உண்மைதான். அமெரிக்காவில் வசித்துவரும் லேனாவின் பலஸ்தீனம் குறித்த இக்கவிதை வெளிப்படுத்தும் உணர்ச்சிநிலை, நமக்கும் நெருக்கமானதாக நாம் உணரக் காரணம் அந்தப் பொதுமைப் பண்புதான். இனி, கவிதைகளுக்கு வருவோம்.

2014ஆம் ஆண்டு ஜூலை மாதம். நாற்புறமும் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டுள்ள பலஸ்தீனின் காஸா மக்கள் மீது இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு இராணுவம் திடீர் தாக்குதல் தொடுக்கின்றது. நீதிக்கும் நியாயத்துக்குமான உலகத்தின் வெகுசில குரல்களை அடக்கும் நோக்கில், உப்புக்குச் சப்பாணிபோல் வெறும் ஒப்புக்கு ஆக்கிரமிப்பு இராணுவத்தால் எச்சரிக்கை முன்னறிவித்தல் கொடுக்கப்படுகிறது. அதுவும் எப்படி? ஒரே ஒரு தொலைபேசி அழைப்பு. "நாங்கள் இப்போது தாக்குதல் நடத்தப்போகின்றோம், வீடுகளைவிட்டு உடனே வெளியேறுங்கள்" என்பதோடு தொடர்பு துண்டிக்கப்படுகின்றது. சில மணித்துளிகளுக்குள் அந்த மக்கள் எங்கே ஓடித் தப்ப முடியும்? நான்கு புறமும் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்ட அம்மக்கள் எங்கே போய் அடைக்கலம் பெற முடியும்? மத்திய கிழக்கின் ஒரே ஒரு ஜனநாயக நாடு என்று மார்தட்டிக்கொள்ளும் இஸ்ரேலின் யுத்த தர்மத்தின் லட்சணம் இதுதான் என்பதை ஒருவித தார்மீகக் கோபத்தோடு கவிதை வரிகளினூடே வெளிப்படுத்தி இருக்கிறார், கவிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கோ ஒரு தொலைதூர நாட்டில் இருந்தபடி தமது பூர்வீகத் தாயகத்தில் நடக்கும் இந்த அவலத்தைக் கையறுநிலையில் பார்த்துத் தவிக்கும் ஒருவரின் உணர்ச்சிகள் எவ்வாறு இருந்திருக் கும் என்பதை நம்மால் உணர முடிகிறல்லவா? ஐ.நா. சபை தலையிடக்கூடும்; உலக மனித உரிமை அமைப்புகள் உதவக்கூடும்; உலகின் ஜனநாயக நாடுகள் இந்த அக்கிரமத்தைத் தடுத்து நிறுத்தக்கூடும் என்ற எதிர்பார்ப்போடு சமூக வலைதளம், வீதிப்பேரணிகள் என சாத்தியமான எல்லா வழிகளிலும், நடைபெற்றுக்கொண்டிருக்கும் கொடூரத்துக்கு எதிரான எதிர்ப்பையும் கண்டனத்தையும் பதிவு செய்தபடி அதற்கு மேல் எதுவுமே செய்ய முடியாத கையாலாகாத நிலையில் நல்லது நடக்காதா என்று உயிர் வலிக்க, மனம் பதறக் காத்திருக்கும் கொடுமையை வெற்று வார்த்தைகளுக்குள் அடக்கிவிட முடியுமா? ஐ.நா. ஏதாவது செய்யும், குறைந்த பட்சம் இந்தியாவேனும் தலையிடும் என்ற கொஞ்ச நஞ்ச எதிர்பார்ப்போடு நெஞ் சுதுடிக்கக் காத்திருந்தும் எல்லா எதிர்பார்ப்புகளையும் துவம்சம் செய்தபடி நடந்தேறிய முள்ளிவாய்க்கால் கொடூரத்தைக் கையறுநிலையில் பார்த்துக்கொண்டிருந்த புலம்பெயர் உள்ளங்களின் வலி இதனை ஒத்துத்தான் இருந்திருக்கும் என்பதில் ஐயங்கொள்ள முடியுமா? ஆக, இனம், மதம், மொழி, தேசம் என்ற எல்லாவிதமான எல்லைக்கோடுகளுக்கும் அப்பால் இந்த வலிகள் பொதுவானவைதாம்.

வார்த்தைகள் தொண்டைக்குழிக்குள் உலர்ந்துபோய் நெஞ்சடைக்கத் திணறும் அந்தத் தருணத்தில் உதித்த தனது கவிதையைப் பற்றி அவர் இவ்வாறு சொல்கிறார், “என்னால் பேச இயலாதபோது என் கவிதை பேசுகிறது”. அப்படிப் பேசிய கவிதையின் தலைப்பு, “ஓடுவதற்கான உத்தரவு”.

“அவர்கள் தொலைபேசியில் அழைக்கிறார்கள்
குண்டுகளைப் போடுவதற்கு முன்பு
தொலைபேசி அடிக்கிறது”

என்று தொடங்குகின்றது, அக்கவிதை.

“அவர்கள் ஃபோன் செய்து ஓடச் சொல்கிறார்கள்
இந்தச் செய்தி முடிந்ததும்
உங்களுக்கு 58 நொடிகள் உள்ளன
உங்கள் வீடுதான் அடுத்த இலக்கு
போர்க்காலக் கருணையென அவர்கள் இதை
நினைத்திருக்கலாம்
ஓடுவதற்கு ஒரு இடமும் இல்லையென்றாலும்கூட!”

என்று குமுறும் மனதோடு பேசும் வரிகளில் பொதிந்திருக்கும் வலி சொல்லுந்தரமன்று. தனக்குப் பிடித்த, தன் குழந்தைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பமான எதையும்கூட எடுத்துக்கொள்ள எந்த அவகாசமும் இல்லாத ஒரு கட்டளை தரும் வேதனையை வரிகள் தோறும் விரவிச் செல்கின்றார், லேனா.

பார்த்துப்பார்த்துக் கட்டிய வீடு, ஆசையாசையாய் வளர்த்த செடிகள், நினைவுகளைச் சுமந்து நிற்கும் சுற்றுச் சூழல் என எல்லாவற்றையும் போட்டது போட்டபடி இருக்க வேரோடு பிடுங்கப்பட்டதான வேதனையோடு கண்ணீர் சுமந்து பிறந்துவளர்ந்த இடம்விட்டு இருபத்து நான்கு மணிநேரத்துள் விரட்டப்பட்ட இலங்கையின் வடபுலத்து முஸ்லிம்களின் துயரை, அரச படைகள் தாக்குதல் நடத்தியபடி முன்னேறி வர வர, குழந்தை குட்டிகளோடு சுமக்க முடியுமான சிறு பொதிகளுடன், வழியில் செத்துவிழும் உற்றார் உறவினரின் பிணங்களை எடுத்துப் புதைக்கவும் அவகாசமற்று மனதைக் கல்லாக்கியபடி கடந்து நகர்ந்து, இடத்துக்கிடம் பெயர்ந்து பெயர்ந்து அல்லாடிய வடக்கு மற்றும் கிழக்குத் தமிழ் மக்களின் அவலத்தைப் பிரதியெடுத்ததுபோன்று தோற்றமளிக்கின்றது லேனா டூஃபாஹாவின் கவிதை.

“நீங்கள் யாரென்பதுகூட பொருட்டல்ல
நீங்கள் மனிதர்தான் என்பதை நிரூபியுங்கள்
நீங்கள் இரண்டு கால்களில்தான் நிற்கிறீர்கள்
என்பதை நிரூபியுங்கள்”

“ஓடுங்கள்” என்று கவிதை நிறைவுறும்போது அந்த வரிகளில் தொனிக்கும் எள்ளல், உண்மையில் உக்கிரத்தின், விரக்தியின் வெளிப்பாடுதாம், இல்லையா? இதேபோன்ற அவலத்துக்கு முகம் கொடுக்கும் எல்லா மக்களின் வலியும் கண்ணீரும் காயங்களும் எங்கும் ஒன்றுபோலவே இருக்கின்றன என்பதையே இது உணர்த்தி நிற்கின்றது.

அடுத்த கவிதையின் தலைப்பு, “முன்பே தெரிந்திருந்தால்” என்பதாகும். தன் விதி என்ன, அடுத்த கணத்தில் என்ன நடக்கப்போகின்றது என்பவற்றை மனிதன் முன்கூட்டியே அறியும் வாய்ப்பு இருந்திருந்தால், அவனால்/அவளால் வாழ்வின் ஒரு கணத்தைக்கூட நிம்மதியாய்க் கழித்திருக்க வாய்த்திருக்குமா என்று தெரியவில்லை. அடுத்த கணத்தில் எல்லாம் அழிந்துபோய்விடும் என்று அறிய நேரும்போதான பயங்கரமான அல்லது திகில் நிறைந்த மனநிலையை விபரிக்கிறது, இக்கவிதை.

“என்ன ஆகியிருக்கும்?
பாங்கொலி அழைக்கும் அதிகாலைக்கும் விடிந்த
நாளுக்கும் இடையிலான சிறு வெளிச்சத்தில்
எல்லாமே பறிபோய்விடும் என உங்களுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்திருந்தால்
நீண்ட காலமாக உருப்பெற்றுவந்த சுனாமி உங்கள்
வாழ்க்கையின் கரைக்கு வந்து
உங்கள் உலகின் கல்லையும் இரும்பையும்
விழுங்கிவிடும் எனத் தெரிந்திருந்தால்"

என்று தொடரும் கவிதை முழுக்க முழுக்க போர் சூழ்ந்த பூமியில் கழிக்கும் நிச்சயமற்ற பதற்றமான கணங்களைப் பற்றியே பேசுகின்றது. சாவு நம்மைத் துரத்தி வருவது தெளிவாகத் தெரிந்துவிடும் ஒரு தருணத்தில் ஒருவரின் மனநிலை எவ்வாறிருக்கும் என்பதைத் துல்லியமாக யாராலும் சொல்லிவிட முடிவதில்லை. சிலவேளை,

"உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடும்போது
கடைசியாக ஒருமுறை சுவர்களைத் தொட்டு
விடைபெற்றிருப்பீர்களா ?"

என்று அவர் கேட்பதுபோல் குழந்தைத்தனமாக நடந்துகொள்ளக் கூடுமா? இந்தக் கவிதை வரிகளை வாசிக்கும்போது, தாக்குதல் எவ்வளவு கொடூரமானதாக இருந்தாலும், 'இந்த மண்ணிலேயே, இந்த வளவிலேயே என்னுயிர் போகட்டும்' என்று வடக்கு யுத்த புலத்திலிருந்து இடம்பெயர மறுத்த வயோதிபர்கள் பற்றிய கதைகள் மனதுக்குள் வந்துபோவதைத் தவிர்க்க முடியவில்லை. அவர் கேட்கிறார்,

"இந்த நூற்றாண்டின் மறுபகுதியில் உங்களது
பேரப்பிள்ளைகள்
உங்கள் வீட்டைப் பார்த்தபடி நடக்கத்தான் முடியும்
பெயர் மாற்றப்பட்ட அந்தத் தெருவழியாகப் போகும்போது
ஜன்னல் கதவுகளில் பியந்து தொங்கும்
வண்ணப்பூச்சுகளைப் பார்க்கத்தான் முடியும்
என்பது முன்னதாகவே உங்களுக்குத் தெரிந்திருந்தால்
ஓடுவீர்களா ?
உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நினைப்பீர்களா ?
காத்துக்கொண்டிருந்தே செத்துப்போவீர்கள் எனத்
தெரிந்திருந்தால்,
மறதியின் புதைகுழியை நோக்கி நீண்டபயணம்
மேற்கொள்வீர்களா ? அல்லது
அதில் தலைகுப்புறப் பாய்வீர்களா ?".

இக்கேள்விகள் ஒவ்வொன்றும் மனதைக் கீறிக் கிழிப்பன. பறித்தெடுக்கப்படும், ஆக்கிரமிக்கப்படும் சொந்த நிலம் கண்முன் தனக்கு அந்நியமாகிப்போய் வெறும் கடந்தகால நினைவுகளை மட்டுமே சுமந்துநிற்கப் போவதை எதிர்வுகூறும்நிலை துர்ப்பாக்கியமானது. பலஸ்தீனத்தில் பல தசாப்தகாலமாக அதுதான் நிகழ்ந்துவருகின்றது. என்றாலும், இந்த அவலம், இந்தத் துயரம், இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்வலி பலஸ்தீனத்துக்கு மட்டுமானதல்ல, நமக்கும் உரியதே என்பதை நாம் உணரும் கணத்தில்தான் புரிந்துகொள்கின்றோம், எல்லைகளுக்கு அப்பால் துயர்தோய்ந்த மனிதக்குரல்களின் இயல்பு பொதுவானதே! அவை மொழியின் வழியே விடியலை அவாவியபடி காற்றுவெளியெங்கும் மிதந்தலைகின்றன, உலகளாவி உள்ள உள்ளங்களைப் பிணித்துக் கண்களைத் துளிர்க்கச்செய்தபடி...

இவ்வாறாக, நிஸார் கப்பானியினதும் லேனா கலாஃப் டுஃபாஹாவினதும் இக்கவிதைகள் ரவிக்குமாரின் அழகிய தமிழ் மொழிபெயர்ப்பில் மிகச் சிறந்த கவிதா அனுபவத்தை நமக்குத் தருகின்றன. படிக்குந்தோறும் உணர்வெழுச்சியை ஊட்டும் மொழி, கவிதையின் உயிர்ப்பு தொய்ந்துவிடாமல் அதனை மற்றொரு மொழிக்குள் கொண்டுவந்து சேர்த்திருக்கும் அவரது மொழிபெயர்ப்பு ஆற்றலையே நமக்கு உணர்த்துகின்றது. இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள பேராசிரியர் எம். ஏ. நுஃமானின் வரிகளில் சொல்வதானால், "ரவிக்குமாரின் மொழிபெயர்ப்புகள் ஆங்கில மூலத்துக்கு விசுவாசமாகவும், எளிமையாகவும் அதேவேளை சரளமாகவும் உள்ளன. தான் ஒரு கைதேர்ந்த மொழிபெயர்ப்பாளரும்தான் என்பதை இத்தொகுப்பின் மூலமும் அவர் நிரூபித்திருக்கிறார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5. 'ஊருக்கு நாலு ஆளுமைப் பெண்கள்'

ஒளி பரவுகிறது (1995), நச்சுமரமும் நறுமலர்களும் (1998), பாதை தெரியாத பயணம் (2000), உதயக் கதிர்கள் (2006) தெளிவு (2009) வீடு (2013) முதலான நாவல்களைத் தந்த திக்குவல்லை கமாலின் மற்றுமொரு சமூக நாவல் 'ஊருக்கு நாலு பேர்'. மேமன்கவியின் மிக வித்தியாசமான அட்டைப்பட வடிவமைப்பு வாசகரை முதற் பார்வையிலேயே நூலின் பக்கம் ஈர்க்கிறது. கையில் எடுத்தவுடன் கீழே வைக்க மனமின்றி கதையோடு வாசகரை ஒன்றிவிடுமாறு கட்டிப்போடும் எளிய ஆற்றொழுக்கான நடை இந்நூலின் சிறப்புக்கு முக்கியமானதொரு காரணம். வட்டாரமொழி வழக்கு நாவலின் உயிரோட்டத்துக்கு உரம் சேர்க்கிறது.

எப்போதும் போல் நறுக்குத் தெறித்தாற் போன்ற சுருக்கமான முன்னுரையைத் திறவுகோலாகக் கொண்டு எளிமை அழகு மிளிர்ந்த நாவலின் பின் அட்டையில் ஜனாப் முகம்மது சரீபு றம்ஸீன் அவர்களின் 'ஆசிரியர் பற்றிய குறிப்புரை', "தளம்பலற்ற தனித்துவப் படைப்பாளியான கமாலிடமிருந்து இன்னும் பல படைப்புகளை நிச்சயம் எதிர்பார்க்கலாம்" எனும் பொருத்தமான முத்தாய்ப்புடன் நிறைவுறுகிறது.

**கதைக்களம்**

'ஊருக்கு நாலு பேர்' வல்லையூரைக் களமாகக் கொண்டு மண்வாசனை கமழும் வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்த நல்லதொரு சமூக நாவல். ஒரு முஸ்லிம் கிராமம் எவ்வாறு பரம்பரைப் பணக்காரர்களான ஊர் மத்திசம்மாரின் ஆதிக்கப்பிடியில் கட்டுண்டு பலவகையிலும் பின்னடைந்து போயிருக்கிறது என்பதையும், அப்பின்னடைவு நிலையை மாற்றியமைக்க வேண்டும் எனும் உந்துதலோடு பாடுபடும் துணிச்சலான சில பெண்களையும் அவர்கள் எதிர்கொள்ளும் பன்முகப்பட்ட பிரச்சினைகளையும் பற்றியதாய் இக்கதை அமைந்துள்ளது.

## முஸ்லிம் கிராமங்களில் பெண்களின் நிலை

இஸ்லாம் பெண்களுக்கு விடுதலை அளித்த மார்க்கம் என்றும் இஸ்லாத்தில் பெண்களுக்கான பூரண உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் சொல்லப்படுவது உண்மைதான். எனினும், சமூகத்தில் அப்போதனைகள் மிகச் சரியாகவும் சம்பூரணமாகவும் நடைமுறையில் உள்ளனவா என்ற கேள்வி மிக முக்கியமானது. முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் "அடுப்பூதும் பெண்களுக்கு ஏடும் எழுத்தாணியும் எதற்கு?" என்னும் பிற்போக்குவாதம் பெருமளவு குறைந்துவிட்டாலும், பெண்கள் தமது திறன்களை சமூக மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்பதை முழு மனதோடு ஏற்றுக்கொள்ளும் ஆரோக்கியமான நிலை முஸ்லிம் சமூகத்தில் வேரூன்றிவிட்டதா என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

இந்நிலையில், சமூக மேம்பாடு பற்றி எவ்விதப் பிரக்ஞை யுமற்று ஓட்டுக்குள் நத்தையாய்த் தன்னைச் சுருக்கிக் கொண்டு இருட்டுக்குள் இருப்பதற்கு அடம்பிடிக்கும் ஒரு முஸ்லிம் கிராமத்தில், புது விடியல் காணத் துடிக்கும் பெண்கள் நால்வரை மையமாகக்கொண்டு "ஊருக்கு நாலு பேர்" நாவல் படைக்கப்பட்டுள்ளது. கதையின் கருவைச் சொல்லாமற் சொல்லி நிற்கிறது, நாவலின் தலைப்பு.

சமுர்தி முகாமையாளராகப் பணிபுரியும் மரீனா வல்லை யூரில் ஏழை மக்கள் மத்தியில் வறுமையை ஒழிக்கும் பொருட்டு சுயதொழில் ஊக்குவிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகிறாள். இடையில், ஊரில் உள்ள படித்த பெண்களை இணைத்துக்கொண்டு சமூக நலப்பணிகளில் ஈடுபட முனைகின்றாள். அவ்வூர்ப் பாடசாலையில் ஆசிரியையாகப் பணிபுரியும் அம்ரிதா, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் ஃபர்வீனா, மரீனாவோடு உடன் படித்த றம்ஸியா ஆகியோரின் ஒத்துழைப்பு அவளுக்குக் கிடைக்கின்றது.

இவர்கள் மாதர் சங்கம் அமைத்துச் செய்யும் பணிகள் ஊரில் உள்ள பலரின் கண்களையும் உறுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களால் செய்ய முடியாமல் போன பணிகள் பெண்களால் முன்னெடுக்கப்படுவதையிட்டு மரீனாவுடன் உடன் படித்த இளைஞர்கள் மகிழ்ச்சியடைந்து அவர்களுக்குத் தம்மாலான ஒத்துழைப்பை வழங்குவதாய் வாக்குறுதி அளிக்கின்றனர். பல்வேறு சந்தர்ப்பங்களில் அதனைச் செய்தும் காட்டுகின்றனர். எனினும், பழைய தலைமுறையைச் சேர்ந்த பாரம்பரிய சிந்தனை யாளர்களால் பெண்கள் இவ்வாறு சமூகக் களத்தில் நின்று பணியாற்றுவதையும் அவை ஒன்றன் பின் ஒன்றாக வெற்றி பெற்று வருவதையும் ஜீரணிக்கவே முடியவில்லை. இதில் பாடசாலை அதிபர் முதல் ஊர்ப் பெரிய மனிதர்களுக்கு எடுபிடி வேலைகள் செய்துகொண்டு ஊர் சுற்றும் ஜெஸாயிர் வரை உள்ளடங்குவர். அவர்கள் ஊர் மத்திசம்மாருடன் சேர்ந்துகொண்டு எவ்வாறு இப்பெண்களின் பணிகளுக்கு இடையூறு செய்ய முனைகின்றனர், அப்பெண்கள் அவற்றை எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பதே இந்நாவலின் கதை.

இங்கு, முழுக்க முழுக்க ஆண்கள் யாவரும் ஆணாதிக்கவாதி களாகவும் பிற்போக்குவாதிகளாகவும் காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பெண்கள் பற்றிய பாரம்பரிய மனோநிலையில் இருந்து மீண்டுவராத ஆணாதிக்கவாதிகளைப் போலவே நடுநிலையோடு சிந்திக்கும் ஆண்களைப் பற்றியும் விபரித்து சமநிலைபேணி இருப்பது கதாசிரியரின் சிறப்பாகும். இதனூடே தலைமுறை இடைவெளியையும், தலைமுறை மாற்றம் சார்ந்து அவர்களின் சிந்திப்பு முறையில் ஏற்பட்டுவரும் பரிணாம மாற்றங்களையும் உள்ளார்ந்து நாசூக்காகத் தொட்டுக்காட்டும் வகையிலும் இவ்வணுகுமுறை அமைந்துள்ளது எனலாம்.

பாரம்பரியமாகப் பெண்கள் பற்றிய கிராமத்துச் சமூகத்தின் மனநிலையும், பெண்கள் சமூகக் களத்தில் பணியாற்ற முனைவதைப் பற்றிய அவர்களின் பார்வையும் உணர்வுநிலையும் இந்நாவலில் இடம்பெறும் உரையாடல்களின் வாயிலாகத் தெள்ளத் தெளிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. உதாரணமாக:

> "சும்மா பொம்புளக் கூத்து. இந்தச் சங்கம் கிங்கம் இங்க சரிவாரல்ல. ஆம்பிளயளால செய்யேலாதது பொம்புளையால ஏலுமா?" (ப. 16)
>
> "இன்ன பாருங்கொ நான் ஒன்டு செல்லியன். பொம்புள தலயெடுத்தா ஒன்டும் சரிவாரல்ல. இவளியள் மிச்சம் படிச்சா முஸீபத்துத்தான்" (ப. 17)
>
> "பொம்புளயளட கூத்து எத்தின நாளக்கன். உட்டுப் பாக்கியஞ் அளவுக்கு மிஞ்சிப்போனா நாங்க கண்ணப் பொத்திக்கொண்டு நிக்கியா?" (ப. 48)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொம்புளகளட வேலவெட்டில நாங்க மிச்சம் கவனமா நடந்து கொளோணும். இது மிச்சம் பொல்லாத காலம்..." (ப. 51)

"பொம்புள ஊட்டுக்குள்ள தலயெடுத்தா அந்தக் குடும்பம் நாசம்... ஊருக்குள்ள தலயெடுத்தா ஊரு நாசம்..." (ப. 93) என்பன போன்ற உரையாடல்களைச் சுட்டிக்காட்டலாம்,

மேலும், சமூகக் களத்தில் பணியாற்ற முன்வரும் பெண்கள் இழிவாடல்களைச் சந்திக்க நேரும் அவலத்தினையும் ஆசிரியர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

கதையின் நாயகியான சமுர்தி மரீனாவின் காதுபடவே, "சும்மா இவள் உசுப்பிக் கொண்டு திரீத" (ப. 22) என்று கிராமத்தார் சொல்லும் குத்தல் மொழியை இதற்கு எடுத்துக்காட்டாக அமைத்துள்ளார், ஆசிரியர்.

இவ்வாறாக, பொதுநலப் பணிகளில் ஈடுபட முனையும் பெண்கள் எவ்வாறான பிரச்சினைகளை, விமர்சனங்களை சவால்களை எதிர்கொள்ள நேர்கிறது என்பதை எவ்விதமான செயற்கைத்தனமுமின்றி பிட்டுப்பிட்டு வைக்கிறார், ஆசிரியர். பல்வேறு வகையிலும் பின்தங்கிய ஒரு கிராமத்தின் இயல்பு நிலையையும், அப்பின்னடைவு நிலையை மாற்றியே தீர்வது என்ற இலட்சியத்துடன் அயராது போராடும் புதுமைப் பெண்களின் துடிப்பையும் துணிச்சலையும் சமநிலை தளம்பாமல் மிக யதார்த்தமாகச் சித்தரித்து கதையை நகர்த்திச் செல்வதில் ஆசிரியர் வெற்றி கண்டுள்ளார்.

பொதுவாக, "பொதுப் பணிகளை, சமூகச் சீர்திருத்தங்களை எவர் வீட்டுப் பெண்களேனும் செய்தால் பரவாயில்லை. தம் வீட்டுப் பெண்கள் பத்திரமாக வீட்டுக்குள் இருக்கவேண்டும்" என்கின்ற சுயநலப் பேய் முஸ்லிம்கள் பலரையும் பிடித்தாட்டுகின்றது என்பதே கசப்பான கள யதார்த்தமாகும். இதன் விளைவாகவே பள்ளிக்கூடங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் பல்வேறு திறன்களை வெளிக்காட்டிய, தன்முனைப்போடு சமூகப் பணிகளில் ஈடுபட்ட பெரும்பாலான முஸ்லிம் பெண்கள் திருமணத்தின் பின்னர் முகவரியே அற்றவர்களாக மாறிப்போகும் அவலம் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. இதனை இக்கதாசிரியரும் தொட்டுக்காட்டத் தவறவிலை.

"வசதி படைத்த பெரிய குடும்பங்கள் படித்த அழகிய பெண்களைத் தேடிப்பிடிக்கின்ற வரிசையில் அவளும் அகப்பட்டிருந்தாள்." (ப. 72)

"அந்த ஊரில் இதற்கு முன் இரண்டே இரண்டு பெண் பட்டதாரிகளே உருவாகி இருந்தார்கள். இருவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாம், எட்டாம் வகுப்பு முதலே வெளியூரில் படித்து கெம்பஸ் போனவர்கள்தான். இருவருக்குமே வெளியூரில் மாப்பிள்ளை வாய்த்ததால் ஊருக்கு டாட்டா காட்டி விட்டார்கள்... அவள் வளர்த்த கனவுகள், பேசிய சீர்திருத்தங்கள், திட்டமிட்ட நடவடிக்கைகள் எல்லாம் ஒவ்வொன்றாக உதிர ஆரம்பித்தன." *(பக். 72, 73)*

"பிச்சச் சம்பளமெடுக்கும் உத்தியோகமே வேணாம். நல்ல குடும்பப் பெண்ணாக இருந்தால் போதும்' என்று சொல்லாமலிருப்பார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை" *(ப. 75)*

"... கலியாணத்தோட அந்தக் குட்டிய கெணத்தில போட்ட மாதிரிதான். பாத்துக்கோங்கொ... அரசாங்க ஜொப்புக்கு பொகுடமாட்டாங்க..." *(ப. 79)* முதலான வரிகள், படித்த பெண்கள் சமூகச் செயற்களத்தில் இருந்து மறைந்துபோவதற்கான காரணங்களில் திருமணமும் ஒன்றாக மாறியிருக்கும் நிலையைத் தெளிவாக உணர்த்துகின்றன.

இலங்கை முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தளவில் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறும் பெண்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் ஆண்களை விட அதிகரித்துக் காணப்படினும்கூட, சமூகப் பங்களிப்பிலும் பொதுப் பணிகளிலும் அவர்களின் வகிபாகம் குறிப்பிடத்தக்களவு இல்லை என்றே கூறவேண்டும். குடும்பத்தைப் பராமரிப்பதே அவளது ஒரே உன்னதப்பணி என்ற போதனைகளும், வேலைப் பகிர்வுக்கான "வெளி"யும் வாய்ப்பும் குடும்பங்களில் இல்லாமல் இருப்பதாலும் இந்நிலை மாற்றமின்றித் தொடர்கின்றது. ஆசிரியர்களாக பிற அரச அலுவலங்களில் உத்தியோகத்தராக வேலைபார்க்கும் பெண்கள்கூட வீட்டு வேலைகள் அனைத்தையும் தாம் தனியே செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலையில், தமது ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள, மேலே படிக்க, சமூகத்துக்குப் பங்காற்ற அவர்களால் மேலதிக நேரம் ஒதுக்க முடிவதில்லை. இன்னொருபுறம், எவ்வளவு படித்திருந்தபோதும், பட்டங்களைப் பெற்றிருந்தபோதும் சமூக வலைதளங்களில்கூட தம் சொந்தப்பெயரோடும் முகத்தோடும் வலம்வர முடியாத தடைகளையும் இடர்ப்பாடுகளை இன்றும் பெண்கள் எதிர்நோக்கி வருகின்றமை கண்கூடு. அந்தவகையில், என்னதான் பட்டப்படிப்புப் படித்துவிட்டு வந்து சமூகப் பற்று, சமுதாய விடுதலை என்ற கனவுகளுடன் சிறகடித்தாலும், 'தன்னுடைய சொந்த வாழ்க்கை' என்று வரும்போது பேசிய லட்சியங்களைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு மூலைக்குள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடங்கிவிடும் 'நமது' சமூக யதார்த்தமாய் 'ஃபர்வீனா'வின் கதாபாத்திரம் வார்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்படியான ஒரு சமூகச் சூழலில், உண்மையான துணிவுள்ள பெண்களால் சமூகத்துக்குப் பணியாற்றி சமூக மேம்பாட்டின் பங்காளர்களாய் மாற முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டும் வகையில் இந்நாவலின் பிரதான பெண் கதாபாத்திரங்கள் அமைந்துள்ளன. அந்தவகையில், (சமுர்தி) மரீனா, றம்ஸியா, அம்ரிதா டீச்சர் என்போர் தன்னம்பிக்கை, நேர்மை, சமூகப் பற்று, துணிவு எனும் குணாம்சங்களுடன் வாழும் பெண்கள். இத்தகையோர்தாம் இன்றைய சமூகத்தின் தேவை என்பதை உணர்த்தும் வகையில் அவர்கள் கம்பீரமாய் நம் மனதில் நிற்கிறார்கள். 'இளங்கன்று பயமறியாது' என்று ஊருக்கு நல்லது செய்யப் புறப்பட்ட இளம் பெண்களைத் தனது திறமையான ஆளுமையால் வழிநடாத்துவதோடு, இடையில் ஏற்படும் எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாது, 'திமிர்ந்த ஞானச் செருக்கோடு' நிமிர்ந்து நின்ற அம்ரிதா டீச்சர், உன்னத சமூகமொன்றைக் கட்டி யெழுப்புவதில் ஆசிரியர்களால் கற்பித்தலுக்கப்பாலும் செயற்பட முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாய்ப் படைக்கப்பட்டுள்ளார்.

## அதிகார வர்க்கமும் ஆதிக்கவெறியும்

பொதுவாக, ஊழலோ தன்னலமோ இன்றிப் பொதுப்பணிகளில் ஈடுபட முனைவோருக்கு எதிராகக் கிளம்புவதில் முன்னணி வகிப்போர் அதிகார வர்க்கத்தினரே. அவர்களுக்குக் கூஜா தூக்க எப்போதும் ஒரு பரிவாரம் சுற்றிக்கொண்டே இருக்கும். வல்லையூர்க் கிராமமும் அதற்கு விதிவிலக்கில்லை என்பதை இந்நாவல் சொல்லிச் செல்கின்றது. 'ஊரில் தாம் வைத்ததுதான் சட்ட'மென்று சமூக மேலாதிக்கத்தைத் தமது கைக்குள் வைத்துக்கொண்டு சமூகத்தை ஆட்டிப் படைக்கும் சுயநலத் தலைமைகளாக பெரிய மத்திசம் மம்மஸாதிக், மற்ற மத்தசம்மார் ஆகியோரையும், அவர்களுக்கு வால்பிடித்துத் தூபம் போடும் பரிவாரத்தினராக பாடசாலை அதிபர், எடுபிடி ஜெஸாயிர், அப்பாஸ் போன்றவர்களையும் எதிர்நிலைக் கதாபாத்திரங்களாகச் சித்திரிக்கின்றார், கதாசிரியர். அவர்களின் காழ்ப்புணர்வுகள், கீழ்த்தரமான எதிர்ப்பு நடவடிக்கைகள் என்பனவற்றைத் தோலுரித்துக் காட்டும் வகையில் படைக்கப்பட்டுள்ளமை நாவலின் விறுவிறுப்புக்கு இன்னும் பலம் சேர்க்கிறது எனலாம்.

"எனத்தியென்டா ஜெமீல், ஊரில நாங்க மானம் மருவாதியா ஈக்கோணும். ஊரட பொறுப்ப அல்லாத்தாலா நாயன் ஏன்ட கைல தந்தீக்கியான். ஊரு விஷயங்கள ஒழுங்கான மொறக்கி பாக்கக் கேக்காட்டி நாளக்கி எனக்கிட்ட கேள்வி கணக்கீக்கி..." (ப.51)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஊர் பிரதம் மத்திசம் மொமஸாதிக் ஹாஜியாரின் கூற்று கூர்ந்து நோக்கத்தக்கது. ஊரின் நிர்வாகப் பொறுப்பு நேரடியாக இறைவனால் தமக்கு வழங்கப்பட்ட உடைமைச் சொத்து என்பதாகக் காட்டிக்கொள்ள முயலும் இந்தத் தந்திரம், இன்று நேற்று உள்ளதல்ல. மாறாக, வரலாற்றுப் பழமையான ஒன்றாகும். ஆளும் அதிகார வர்க்கம் மக்களை அடக்கி ஆள்வதற்கும், அவர்கள் தம்மை எந்த வகையிலும் எதிர்க்கேள்வி கேட்பதைத் தடுப்பதற்கும் மக்களின் மத நம்பிக்கையையும் ஒரு கருவியாகக் கொள்வதை இந்நாவலின் ஊடாக எடுத்துக்காட்டுகின்றார், கதாசிரியர்.

மேலும், தமக்குப் பிடிக்காத விடயங்கள், தமது செல்வாக்குக்கு ஊறுவிளையுமாறான செயற்பாடுகள் ஊரில் நடைபெறுவதைத் தடுப்பதற்கு, மதபோதகரைத் தமது ஊதுகுழலாகப் பயன்படுத்தும் போக்கினையும் போகிற போக்கில் இந்நாவல் தொட்டுச் செல்கின்றது. மாதர் சங்கம் ஒழுங்கு செய்த "பெண்களுக்கான மையத்துக் குளிப்பாட்டும் செய்முறை விளக்கம்" நிகழ்ச்சி குறித்து அதிருப்தி அடையும் தாஹிர் மத்திசம், அதனை எதிர்த்து வெள்ளிக்கிழமை ஜூம்மாப் பிரசங்கம் செய்யுமாறு கட்டளையிடுவதும், அந்நிகழ்ச்சியின் முக்கியத்துவம் விளங்கிய நிலையிலும் அதற்கு மாற்றமாகப் பிரசங்கம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தால் பள்ளிவாசல் ஹஸ்ரத் இரண்டுக்கெட்டான் நிலைமையில் தவிப்பதையும் அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். (ப. 80—81)

அவ்வாறே, மாதர் சங்கத்தின் தூண்களாக உள்ள பெண்களைத் தனித்தனியாகப் பிரிப்பதை நோக்கமாகக் கொண்டு, ஊர் மத்திசம்மாரின் உறவினரான அதிபர் தனது பதவியைப் பயன்படுத்தி ஊர் நலன்களில் தோள் கொடுத்துவரும் வேற்றூரைச் சேர்ந்த அம்ரிதா ஆசிரியையை மிரட்டிப் பணியவைக்க முனைவதும், அது சரிவராதபோது, அவருக்கு எதிராகப் போலிப் 'பெட்டிசன்' அடிப்பதையும் காணலாம். தன்னலமற்றுப் பொதுப்பணியில் ஈடுபடுவோர் இப்படியான அடாவடித்தனங்களை எதிர்கொள்ள நேர்வது பொதுவான ஒரு சவால்தான். அதனை அப்பெண்கள் எவ்வாறு துணிவோடு எதிர்கொள்கின்றனர் என்பதை கதாசிரியர் சுவாரஷ்யம் குன்றாமல் சொல்லிச் செல்கின்றார். ஆக, இந்நாவலின் கதாபாத்திர வார்ப்புகள் மிக அருமையாகக் கைவந்துள்ளன எனலாம்.

## தென்னிலங்கை முஸ்லிம் வட்டார வழக்கு

தென்னிலங்கை முஸ்லிம் பேச்சுத் தமிழோடு அறிமுகமற்ற புதியவர்களுக்கு நாவலில் இடம்பெற்றுள்ள மண்மணம் கம்மும் உரையாடல்களைச் சட்டென்று புரிந்துகொள்வதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியதோர் இடர்ப்பாடு இருக்கலாம்தான். எனினும், மல்லிகை சஞ்சிகையிலும் பிற படைப்புக்கள் (நாவல்கள், சிறுகதைகள்) மூலமும் ஆசிரியரின் எழுத்துக்களைத் தொடர்ந்து வாசித்து வருவோருக்கு இந்த நாவலைச் சுவைப்பதில் தடையேதுமில்லை. 'கலை சமூகத்துக்காகவே!' என்பதை நிரூபிக்கும் வகையிலும், முஸ்லிம் பெண்களாலும் சாதிக்க முடியும் என்று உந்துதல் தரும் வகையிலும் படைக்கப்பட்டுள்ள இத்தகையதொரு நல்ல நூலுக்கு அனுசரணை வழங்கிய மத்திய கலாசார நிதியம், கலாசார அலுவல்கள் அமைச்சு என்பனவற்றை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 6. மழைமரத் தவத்தில் திளைத்தபடி...

வீட்டுக்கு வெளியே பெருமழை பொழிந்து கொண்டிருக்கும் ஒரு தருணத்தில் வீட்டினுள் "மழைமர"த்தின் அடிவாரத்தே அமர்ந்திருந்தபடி மற்றொரு மழைத்தவம் இயற்றிக்கொண்டிருக்கின்றேன். ரவிக்குமாரின் கவிதைத் தொகுதி க்ரியா வெளியீடாக 2010இல் வெளி வந்திருக்கிறது. என்னுடைய தேடலின் போதாமை அல்லது மத்திய கிழக்கு வாசம் என ஏதேதோ காரணங்களால் ஐந்து வருடத் தாமதத்தின் பின் என் கரம் வந்துற்ற அற்புதம், இந்நூல். கைக்குள் அடங்கும் சின்னஞ்சிறிய நூலில் பல்வண்ணப் புள்ளிகள் கொண்டு வளைந்து நெளியும் ஒரு வெண்மரம், அட்டை ஓவியமாய் வந்தமைந்திருக்கிறது. பக்கங்களை மெல்லப் புரட்டினேன். ஏழாம் பக்கத்தில் இருந்து ஆரம்பிக்கின்றன, தலைப்புகளே அற்ற தனித்துவ வரிகள்...

முதலாவது கவிதை, பொதுவாக நம் மனதுக்குப் பிடித்தமானவை தம் இயல்பிழந்துபோவதனால் விளையும் உள்ளத்து அதிர்வினை பற்றிப் பேசிக் கொண்டு வந்து, "நம்பிக்கையின் குரல்வளையை உன் சொற்கள் நெரித்தபோது..." என முடிவுறும்போது மனவலியின் உச்சம் அக்கடைசி வரியில் மிச்சமாகி விட்டிருக்கிறது. அடுத்த கவிதையும் அந்த உணர்வின் நீட்சியாய் வடிவெடுத்துள்ளதாகவே தோன்றியது, எனக்கு. வெடித்துக் கிளம்பாமல் உள்ளேயே அடைத்துக்கொண்டு உயிர்வருத்தும் வேதனையை, தனிமையின் அவலத்தை, நிர்க்கதியான நிலைமையினை மிக லாகவமாகக் கொட்டிவிடும் கச்சிதமான தேர்ந்த சொற்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமை பிடித்தாற்போல் அமர்ந்திருக்கும் ஒருவனுக்கும் நண்பர்களுக்கும் இடையிலான உணர்ச்சிச் சுழிப்பையும், சொற்களாய் அவை உருப்பெறும் சாத்தியமற்ற மௌனப்பெரு வெளியில் எண்ணங்கள் சுரந்து கரைந்துசெல்வதான ஒரு தருணத்தைக் கவிஞனின் கூற்றாகவே விபரித்துச் செல்கிறது மூன்றாவது கவிதை. பேச வார்த்தையற்றுப் போன ஒரு மௌன நாடகத்தின் ஸ்தம்பிதத் தருணம்,

"தவறி வந்துவிட்ட வண்டொன்று
பறக்கிறது
வீடு முழுவதும் உடைந்து கிடக்கும்
கண்ணாடித் துண்டுகளில்
ஆயிரமாய்த் தெரிகிறது
அதன் பிம்பம்"

என்ற வரிகளில் சட்டென்று உயிர்பெற்று இயங்கத் தொடங்குவது அருமை.

இருந்த துணை இல்லாத வீட்டின் வெறிச்சிடலை, பிரிவின் வலியை, இணைந்திருந்த வாழ்வுமீதான ஏக்கத்தை நினைவு மீன்கள் நீந்துகின்ற மனக்குளத்தில் தேக்கிவைத்து, வரிகளின் இடையே வேதனையை ஏற்றிவிட்டுப் போகின்றது அடுத்த கவிதை.

அதையடுத்து வருகிறது என் அபிமானக் கவிதைகளில் ஒன்று. இந்தக் கவிதையை எத்தனையோ முறை படித்துப் பார்த்துவிட்டேன். உருகியுருகிக் கரைந்து பெருகும் உணர்வின் வலியில் இருந்து, ஒருசில வார்த்தைகளையேனும் வார்த்தெடுத்து, அக்கவிதை பற்றிய உள்ளார்ந்த என் உணர்தலை எழுதிவிடத் திருப்பித் திருப்பி முயன்றும் முடியாமல் தோற்றுப்போன கவிதை, இது.

"இனியும் தருவதற்கு
என்ன இருக்கிறதென்று
ஒரு சுருக்குப்பையைத்
திருப்பிக் காட்டுவதுபோல்
இதயத்தை உள்ளும் புறமுமாய்
திறந்து காட்டுகிறாய்"

என்று தொடங்கித் தொடரும் காதலின் உயிர்வலி, ஒவ்வொரு வரியிலும் நம்மைக் கொன்று தீர்க்கிறது.

"ரத்தத்தில் பிறந்து அதையே தின்று
பெருகும் புற்றுநோய்போல
என்னுள் நொடிதோறும்
கிளைத்துப் பரவுகிறது நேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பாரம் என்னை அழுத்துகிறது
அதை எடுத்துக்கொள்"

என்று கேட்டுக் கதறுகின்றது. ஐயோ! இந்தக் கொடும் வலியை இவ்வளவு கொடூரமாய், இதயத்தைக் கீறிப்பிளந்து சொல்வது எப்படிச் சாத்தியமானது என்று நொடிதோறும் என்னை வியக்கவைத்த கவிதை, அது.

அடுத்த கவிதை, இப்படித் தொடங்குகின்றது:

"மழை கழுவிய சாலையில்
படர்கிறது
தெருவிளக்கின் மஞ்சள்
காற்றைத் தடுத்து மறிக்கும்
கண்ணாடிக்கு இப்புறமிருந்து
பார்த்துக்கொண்டிருக்கிறோம்"

இப்படிக் கச்சிதமாய் நகரும் கேமராக் கோணத்தோடு தொடங்கும் கவிதை தனிமையின் ஆவேசத்தில் மொழியற்ற மௌனத்துள் இறுகும் குரல்வளைகளைப் பற்றிய விவரணத்தோடு தொடர்கிறது. அடுத்த பக்கத்தில், "நினைவிருக்கிறதா?" என்ற கேள்வியோடு கண்களுக்குள் ஆழ்ந்து பழைய நினைவுகளுக்குள் மூழ்கிக் கரைந்துபோகச் செய்கிறது மற்றொரு கவிதை.

"உணவகங்கள் பேசுவதற்கானவை அல்ல" என்று தொடங்கும் அடுத்த கவிதை, சாப்பாட்டு மேசை பற்றித்தான் சொல்கிறதோ என்ற எண்ணத்தை வளர்த்துச் சென்று காதலின் ஆவேசத் துய்ப்பில் நிறைவுறுகிறது.

"காத்திருக்கும்போது
பசி தெரிவதில்லை" என்று ஆரம்பிக்கிறது மற்றொரு கவிதை. காத்திருக்கும் நேரத்தில் நுணுக்குக்காட்டியின் (மைக்ரோஸ்கோப்) துணையில்லாமலேயே சின்னஞ்சிறு துணிக்கையும் மிகத் துல்லியமாய்க் கண்ணில் தெரிவதை எல்லாம் காட்சிகளாய் நகர்த்திச் செல்லும் வரிகள், காதலிக்காகக் காத்திருப்பதன் சுகத்தை சுவாரஷ்யமாய்ச் சொல்லி முடிக்கின்றன

இந்த நூலின் பின்னட்டையில் சொல்லப்பட்டு இருப்பது போல, இந்நூலிலே அணில்களைப் பற்றிய செய்தி அடிக்கடி வந்துபோகின்றது, வெவ்வேறு கவிதைகளில். கவிஞர் தம் இதயத்தையே பழமாய் அளித்துக் கொறிக்கக்கொடுத்துள்ளார், அணில்களிடம். அந்த அற்புதமான அனுபவத்தில் தோய்ந்து தீர்ந்துபோனதென்னவோ நம் இதயங்கள்தாம்! ஆம்! பறக்கும் அணில்களைப் பற்றிய விவரணத்தோடு மெல்ல விரிகிறது ஓர் அற்புதமான கவிதை. அந்த அணில் பறந்துவந்து இதயத்துக்குள் புகுந்துகொள்ளும்போது நமது மனசுக்குச் சிறகு முளைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயம் பற்றிப் பேசுகின்றது, அக்கவிதை. படித்து முடிக்கையில் நாம் காற்று வெளிக்குள் சிறகுவிரித்து மிதந்தலைவதான புத்துணர்வு முகிழ்க்கின்றது.

"நான் வெறுக்கிறேன் காலையை" என்று தொடங்கும் கவிதை, இயந்திரகதியான வாழ்வின் மீதான சலிப்புணர்வோடு தொடங்குகின்றது. நிதானமான நிமிடத்துளிகளை மெல்ல உள்வாங்கி ரசித்துத் துய்க்கும் கவிதை மனமல்லவா? எனவேதான், அது, அந்தரங்கங்களை அலசி வெளிக்காட்டும்,

"ஒரு வேவுகாரனைப்போல்

நம்மைப் பின்தொடரும்" காலையை வெறுத்து ஒதுக்க முனைகிறது. என்றாலும், அந்தக் காலைப்பொழுதில் தரிசனம் தரும் அணில் குஞ்சின் மீதான வாஞ்சை, அந்த சலிப்புணர்வையும், அவ்வெறுப்புணர்வையும் தின்றுதீர்த்து, காலையின் வரவுக்காய் மனசின் கதவுகளை அகலத்திறந்து வைக்கச் சொல்கிறது.

அடுத்த கவிதையும் அணில் குஞ்சுகளுடனான அற்புத வாழ்வைச் சொல்லிச் சிலாகித்துச் சிலிர்க்கின்றது.

"அணில் குஞ்சுகள்

தாவி ஓட மரங்கள்..." என்று தொடரும் வரிகள், "நீ, நான், அணில் குஞ்சுகள்

அட

என்னவொரு வாழ்க்கை" என்று முடியும் அந்தக் கவிதையின் முற்றுப்புள்ளியில் இருந்து நம் மனசுக்குள் ஓர் அனிமேஷன் சிறுவர் திரைப்படமாய் காட்சிகள் விரிகின்றன.

அடுத்த கவிதையும் அணில் புராணமாய்த்தான் வாய்த்திருக்கிறது. உள்ளங்கையில் சிறுதுணிக்கை உணவினை வைத்தவாறு அணிலை நோக்கி மௌன அழைப்பினை விடுக்கும் போதே கவிஞரோடு சேர்த்து கனியத் தொடங்கும் நம்முள்ளம், அது உள்ளங்கையருகில் வந்துவிடும் கணத்தை வார்த்தையூடே தரிசிக்கும் தருணத்தில் இரட்டிப்பாய்த் துடிக்கத் தொடங்கிவிடுகின்றது. அடுத்த கணத்தினைக் கவிஞரின் அற்புத வரிகளின் வழியே அனுபவிப்பதுதான் நல்லது. ஆம்,

"கிளைகள் வெடிக்க
இலைகள் சலசலக்க
நானே ஒரு
விருட்சமாய் மாறுகிறேன்"

என்று நம்மை உருமாற்றி மரத்துக்குள் குடியேற்றி விடுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்துவரும் கவிதையும் ஓர் அணில் கவிதைதான். நம் கவிஞருக்குக் கூடிவிட்டுக் கூடு பாயும் வித்தை ரொம்பப் பிடித்துப்போய்விட்டதோ என்னவோ! அணிலுக்காக அன்புகூர்ந்து ஒரு கூண்டமைக்கின்றார். அடடா! அணிலின் காதலர் அணிலை இப்படிச் சிறைப்பிடிக்க எண்ணலாமோ என்ற எண்ணத்தோடு நாமும் அவரை அவரின் வரிகளின் பின்னே ஒளிந்து இரகசியமாய் எட்டிப் பார்க்கிறோம். கூண்டு என்று அணிலுக்குத் தெரிந்துவிடக்கூடாது என்று இலைகளும் மலர்களும் தழைக்குமாறான பசிய கூண்டு ஒன்றினை மிகத் தந்திரமாய்ச் செய்து முடிப்பதை நாம் காண்கின்றோம். அடடா! அடடா! கடைசி அடிகளில் நம்மை அப்படியே அசத்திவிடுகின்றார். என்னதான் நடக்கிறது என்று எம்பியெம்பிப் பார்க்கும் நம்மை,

"ஒரு அணில் குஞ்சு வந்தது
என்னை எடுத்துக் கூண்டுக்குள் விட்டு
கதவை மூடியது
அது கொண்டுவரப்போகும்
பழத்துக்காகக்
காத்திருக்கிறேன் இப்போது"

என்று வியப்பினால் வாய்பிளக்க வைத்துவிடுகின்றார்.

அதையடுத்து வருகிறது என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மற்றோர் அழகிய கவிதை.

ஏலவே விருட்சமாய், கூண்டாய் எல்லாம் உருமாறிய கவிஞரின் உள்ளம் இப்போது மரக்கிளையாய்க் கிளைத்து நீள்கிறது. அதில் அணிலைத் தாவி ஏறப்பணிக்கிறது. இதயப்பழத்தைக் கொறிக்கக் கொடுத்துக் அதன் குடைச்சலில், அந்த இன்ப அவஸ்தையில் குளிர்ந்திடத் துடிக்கிறது. படிப்பவர் மனதை அப்படியே அலேக்காய்த் தூக்கி ரசனையின் உச்சத்திற்குக் கொண்டு செல்லும் கவிஞர், கடைசி அடிகளில்,

"உன் குன்றிமணிக் கண்களில்
மிதக்கும் கனவுக்குள்
என்னை எழுதுகிறேன்
இடம் கொடு என் அணில் குஞ்சே"

என்று கெஞ்சிக் கனிகின்றார். நம் நெஞ்சில் இன்னதென்று சொல்லத் தெரியாத ஓர் உணர்வுப் பெருக்கில் நம்மை ஆழ்த்தி விடுகின்றார்.

...ம்ம்... இந்தக் கவிஞரின் அணில் மீதான நேசத்தின் இம்சை நம்மையும் ஆக்கிரமித்துக்கொள்(ல்)கிறது. அடுத்த கவிதையில், தம் கபாலம் பிளந்தொரு ஜன்னலை ஆக்குகிறார். அதற்குள் அடர்ந்துவிரியும் நினைவுகளின் வனமொன்றை விரைந்தெழச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றார். ஒரு மாயாஜாலப் படம் போல் நகரும் கவிதைக்குள் ஓசையெழுப்பாமல் நம்மைப் பயணிக்க வைக்கிறார். கனவுகளைச் சருகென உருவகித்து அவற்றை மீளத் தட்டியெழுப்பும் வகையில் ஓடுமாறும், "ஊசியாய்க் காற்றில் கீறும் குரலினால்" தனிமையின் வெப்பத்தால் பட்டுப்போய்க் கிடக்கும் மரத்தினைத் துளிர்க்கச் செய்யுமாறும் அணிலிடம் யாசிக்கிறார். யாருமற்ற தனிமை தரும் இம்சையை, உயிர்ப்பின்மையை ஆழமாய்ச் சொல்லும் வரிகள் நம் உள்ளத்தைக் கீறிப்பிளக்கின்றன. இந்தத் தொகுதியில் அடிக்கடி ஓடி விளையாடும் அணில்களைக் கண்டபோது, இந்தத் தொகுதிக்கு "மழைமரத்து அணில்" என்றுகூடப் பெயர் வைத்திருக்கலாமோ என்ற கேள்வியும் எனக்குள் உள்ளார்ந்து எழத் தவறவில்லை.

ஒரு குழந்தையின் பிறப்பினை எதிர்பார்த்திருப்பதுபோல் அந்தப் பிறந்தநாளுக்காய்க் காத்திருக்கும் ஒருவன் பற்றியது அடுத்த கவிதை. கவித்துவம் நிறைந்த ஈற்றடிகள்,

"திறக்காத உன் கண்களுக்குள்
தன் கனவுகளை எழுதுகிறான்
ரத்தத் துளியாய்
துடிக்கும் உன் நாவில்
தன் இதயத்தைக் கிள்ளி வைக்கிறான்
இறுக மூடிய உன் பிஞ்சுக் கைகளைத்
திறந்து அதில் தன் உயிரை வைத்து
மூடுகிறான்."

என்று உணர்வை வாழ்வாய் உலவவிட்டு விடுகின்றன.

வாசவதத்தை பற்றிய அந்தக் கவிதையை வாசிக்கும்வரை அவளை நான் அறிந்திருக்கவில்லை. கவிஞர் ரவிக்குமாரின் கவிதையைக் கண்டபின் இணையத்தில் வாசித்தறிந்துகொண்டேன், அவளின் துயர்தோய்ந்த கதையை. கவிஞர் ரவிக்குமார், தன் போக்கில் மீட்டுருவாக்கம் செய்திருக்கிறார். "சடசடவெனக் கிளைத்து, பெருவிருட்சமாய் தழைத்துக் குலுங்கிய அவளது தீராக் காதலை"க் காவியமாக்கியுள்ளார். காதலின்முன் எத்தனையோ சாம்ராஜ்யங்களே தோற்றுச் சரிந்துவிழுந்துள்ளபோது உபகுப்தன் எம்மாத்திரம்!

காதல் பித்துக் கொண்டவனின் மனதில் எழும் பிரேமையின் பிரமைகளை அடுத்த கவிதை பேசுகிறது. வானமும் மேகங்களும் வந்து குளிக்கும் அதிசயக் குளம் பற்றி விபரிக்கிறார், கவிஞர். அவ்வாறு குளிக்கும் வானத்தில் கரையோர நாணல் பறித்து அவள் பெயரை எழுத, பசிகொண்ட மீன்கள் அதை இரையெனக் கவ்விச் செல்வதைக் கண்ணீர் மல்கப் பார்த்திருக்கும் ஒரு காதல் பித்தனை நம் கண்முன் நிறுத்துகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே உன்மத்தம் அடுத்த கவிதையிலும் தொற்றிக் கொள் கிறதுபோலும்! காதலியை வாழ்த்தும் வழியறியாது திகைக்கும் ஒருவனின் தவிப்பை உருக்கமாகப் பேசும் கவிதை அது. ஈற்றடிகளில்,

"யுகம்யுகமாய் நீ வாழ்ந்து
இந்த நாயேன்
உயிர் வளர்க்கட்டும்"

என்று பாடும்போது, பக்தி இலக்கியக் கவிதைகள் நம் மனதுக்குள் வரிசைகட்டி நிற்கின்றன. மானிடக் காதலாய் இருந்தாலென்ன, தெய்வீகக் காதலாய் இருந்தாலென்ன, இந்த உருக்கமும் பரவசமும் உன்மத்தமும் பொதுவான உணர்வுகள்தாம், இல்லையா?

"வீட்டு விளக்குகளின்
குறையொளியில்
தடுமாறி நெளிகிறது வீதி"

என தேர்ந்த ஒளிப்பதிவாளனின் கேமராக் கோணத்தோடு தொடங்கும் கவிதை, காதலின் இம்சையை, அது அவனுக்குக் கொடுக்கும் புலன்களுக்கு அப்பாற்பட்ட கூர்மையை கொலுசணியாப் பாதங்களின் ஒலியைக்கூட செவிமடுக்கும் இதயம் பற்றிச் சொல்லி நமக்கு உணர்த்துகிறது. ஓசையற்ற ஒன்றைக்கூட உய்த்துணரும் அந்த நுண்ணுணர்வை "வறுத்த அரிசியின் வாசனையாய் மனமெங்கும் பரவும் நினைவாய்" உருவகித்து, வானத்து நிலவையும் பொறாமை கொண்டு விலகிப் போகச் செய்யுமளவு அவள்மீதான தீராக் காதலைப் பேசும் கவிதை, அது.

காதலர்களின் இடையில் இருக்கும் ஒரு சாதாரண நிகழ்வு பரிசுகளைப் பரிமாறிக் கொள்வது. கவிஞர் பரிசுப் பொருள் தேடி அலைகிறார். அவர் விரும்புவதுபோன்ற ஒரு பரிசுப்பொருள் கிடைத்தபாடில்லை. "எனவேதான்

உயிரில் நனைத்தெடுத்த

வார்த்தைகளைத் தருகிறேன்" என்று சொல்லி, தான் இறந்த பின்னும் அது தொடர்ந்து வரும் என்று முடிக்கும்போது, நாம் நெக்குருகிப் போகின்றோம். காலம் கடந்தும் சாஸ்வதமாய் நிலைபெறும் கவிதையை விடப் பெரிய பரிசு என்னதான் இருந்துவிடக்கூடும்?

தீராக் காதலின் உயிர்வலிக்கும் இம்சை சொல்லில் அடங்காததுதான். ஆம், அது இரவுகளில் அவனை ஏதேதோ வாகவெல்லாம் உருமாற்றி விடுகின்றது. அன்றிரவு அவன் ஒரு மரமாக மாறிவிடுவதையும், தலையெங்கும் கிளைகள் சலசலத்து, கைகளும் கால்களும் கிளைகளாய்க் கிளைத்து, முள்ளெலும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேராய்ப் புதைகின்ற அதிசயம் நிகழ்கின்றது. எதிர்பார்த்தபடி அவள் ஓர் அணிலாய் மாறி அவனில் வந்து விளையாடுகிறாள்.

ஓரிரவில் அணில் குஞ்சாக மாறியவளைப் பற்றிப் பாடிய கவிஞர் அடுத்த கவிதையில், ஆண்டுகள் எத்தனையோ கடந்தபோதும் பால் கவிச்சி மாறாத நித்திய குழந்தையாய் அவன் கைகளில், மனதில் அவள் தவழ்வதைச் சொல்லி வியக்கிறார். அதையடுத்த கவிதையில் இரவின் ஆலிங்கனம், உறக்கம் கலைந்த அந்தக் காலைப்பொழுது வரையும் தொடர்ந்ததை சிருங்கார ரசம் சொட்டச் சொட்டச் சொல்லிவிட்டு,

"புலரத் தொடங்கிய பொழுதோ
திரும்புகிறது இரவுக்குள்" என்று முடிக்கிறார். காதல் விளையாட்டில் இரவென்ன, பகலென்ன!

"அடுத்த ஆண்டு இந்த நாளில்
தவிக்கும் இதயத்தோடு
தனிமை சில்லுச்சில்லாய் உடைத்துத் தின்ன
இப்படி அமர்ந்திருக்க மாட்டேன்
இப்படிக் கவிதை எழுத மாட்டேன்"

என்ற பிரகடனத்துடன் தொடங்குகிறது அடுத்த கவிதை. இருவரும் சேர்ந்திருக்கும் இன்பகரமான தருணத்தை, தான் எழுதிய கவிதைகளை அவளுக்காக அவன் பாடிக்காட்டும் பொழுது களைப் பற்றி நம்பிக்கை உணர்வோடு பேசுகிறது, அக்கவிதை.

காத்திருப்பு இன்பமானதுதான். ஆனால், காத்திருப்பின் விளைவான ஊடல் அதனிலும் இன்பமானது. தாமதமாக வந்தவன் பற்றித் தொடங்கும் அடுத்த கவிதையின் தாபமும் தவிப்பும் எனக்கு செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியின் கடைதிறப்புப் படலத்தைத்தான் நினைவூட்டியது.

"அந்த மரம்
மழையைத் தன்னோடு
விளையாட அழைத்தது"

என்று தொடங்கும் மற்ற கவிதை. ஆம், நான் எதிர்பார்த்தது சரிதான். மரத்தில் கிளைதாவி விளையாட அணிலையும் கூடவே அழைக்கிறார் கவிஞர். மழை வறள, மரத்துக்குள்ளிருந்து பிறக்கும் கண்ணீர் மழையைப்பற்றிப் பாடி முடிக்கிறது, அக்கவிதை.

அடுத்த கவிதை, உணர்வுகள் ஒட்டாமல் ஒருவர் ஒருவராய் இருந்து, பின்னர் இருவர் ஒருவராய் மாறி, ஈற்றில்,

"மழை மரத்தின் பாடல்
மிதக்கும் உடல்கள்
இருந்தும் இல்லாமல் இருந்தோம்" என்று முடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கவிதை ஒரு காட்சியாய் வார்த்தைக்குள் நிலை கொள்கின்றது. வரண்டு இறுகிய நிலம் பற்றிய பாடல் அது. கவிதையின் வரிகளை ஒரு தூரிகையின் நேர்த்தியோடு வரைகிறது கவிஞரின் மனது.

"மரம் தன்னை மெல்ல அசைக்கிறது
ஒரு மழையை மண் மீது
எழுதத் துவங்குகிறது"

என்ற வரிகளே அதற்குச் சான்று.

இதுவரை பார்த்துவந்த கவிதைகளில் இருந்து முற்றிலும் வித்தியாசமான ஒரு கவிதையை அடுத்த பக்கத்தில் காண்கின்றேன். "விடியற்காலையில் கடற்கரை எப்படி இருக்கும்?" என்ற கேள்வியோடு தொடங்குகின்றது, அக்கவிதை. வழமையான அழகிய கடற்கரை அல்ல, அது. வீடற்றவர்களின் மலஜலங்களால் அசுத்தமாகியிருக்கும் கடற்கரை. எளிமையான மனிதர்களின் அன்றாட வாழ்வோடு பின்னிப் பிணைந்த கடற்கரையினை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார், கவிஞர். போலிப் பாசாங்குகளுடன்கூடிய வர்ணனைகள் அதில் இல்லை. சிலருக்கு அழகாயும் இன்னும் சிலருக்கு அசிங்கமாகவும் தோன்றக்கூடிய பிறந்தமேனியைச் சித்திரிப்பதுபோல் அந்தக் கடற்கரையை விபரித்துச் சென்றவர், ஈற்றடிகளில் உடலைக் கடலாகவும் அடங்கா வேட்கையை அதில் புரளும் அலைகளாகவும் காட்டி முடிக்கிறார்.

அடுத்த கவிதையிலும் அதன் நீட்சியாய் வர்ணனைகள் வருகின்றன. அவள் பாறையாய் இறுகிக்கொள்ள அவன் அலையாய் அறைந்துகொண்டிருப்பதைப் பற்றிப் பேசுகிறது, கவிதை. சொற்களின் சாவிக் கொத்தில் எந்தச் சாவியால் அவளைத் திறக்கலாம் என்று தவிக்கும் மனதின் போராட்டத்தை நுட்பமாய் விளக்கிச் செல்லும் கவிதையில், "அம்மா" என்ற சொல் நிகழ்த்தும் அற்புதத்தை அகதரிசனமாய்க் காட்டுகிறார், அடைமழைக் காலத்துக் குளமாய் அவள் உடைப்பெடுத்ததைச் சொல்லி.

மற்ற கவிதை, அவர்கள் "மரம் பெய்து கொண்டிருந்ததைப் பார்த்தபடி அமர்ந்திருந்த"தைச் சொல்லி இருவரினதும் இணைவின்பம் பற்றிப்பேசி, அவனின் நாடலையும் அவளின் ஊடலையும் "கெஞ்சியும் மறுத்தும், தழுவியும் தள்ளியும்" நிகழும் மௌன விளையாட்டை வரிகளினூடே நிகழ்த்திக் காட்டுகிறது. இவர்களின் இந்தத் தவிப்பையெல்லாம் பார்த்தபடி பொழிந்துகொண்டிருக்கும் மழைமரம் பற்றிய அக்கவிதை, நம் மனசையும் நனைத்துப் போகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதையடுத்து, "அறுபட்ட நரம்பின் வழியே ரத்தம் வடிவதுபோல் இறங்கும்" காலம் பற்றியும், மரணத்திடம் நம் கைப்பிடித்து அழைத்துச் செல்லும் கடிகாரம் பற்றியும் விபரிக்கிறார், கவிஞர். கடிகாரத்தை அவர் பார்க்கும் விதம் நம்மைத் திணறச் செய்துவிடுகின்றது. அதையடுத்த கவிதை சற்று வித்தியாசமானது. காட்சியின் ஸ்தம்பிதத்தில் கவிஞரின் உணர்வுகள் மட்டும் உள்ளூற ஓடிக்கொண்டிருப்பதைப் பேசுகிறது. உதிரும் இலைகள்கூட அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் நிச்சலனமான மௌனப் பெருவெளியில் கற்கும் ஞானத்தைப் புரியவைக்கிறார் கவிஞர்.

அடுத்த கவிதை, "கொட்டும் மழையில் ஆடிவிட்டு நனைந்து திரும்பும் நினைவுகளை" நமக்குத் தருகிறது. எவ்வளவு வளர்ந்தாலும், மழையின் மடியில் சிறார்களாகும் ரசிகமனதின் இயல்பை மீண்டுமொருமுறை ஞாபகித்துப்போகிறது.

"சுவரில் நெளியும் நிழல் உருவங்களைக் கண்டு அழுகிற குழந்தை" பற்றிய கவிதை பலவகையிலும் சுவாரஷ்யமானது. குழந்தையின் கற்பனை உலகும் நாம் அக்குழந்தைக்குக் காட்டும் உலகும் வெவ்வேறானவை என்ற உண்மையை முகத்தில் அறைந்தாற்போல் சொல்கின்றன, அதன் வரிகள்.

நடுப்பகலில் சுடுகின்ற கொடுவெயிலில் கானல் தொடர நடக்கின்றவளைப் பின்தொடர்ந்து செல்லும் வரிகளில் பிறக்கிறது, அடுத்த கவிதை. காட்சிகளாய் நகரும் கவிதையில் நாவறளும் வெயிலில் நடக்கும் அவள்மீதான அவனின் நேசம் நம் இதயத்தையும் தகித்துச் செல்கிறது.

அடுத்து, "உலகத்துக் காதலர்கள் உண்டு தீர்த்தபின்பும் முழுதாய் இருக்கும் நிலவை"ப் பற்றிய சுவையான கவிதை. காதலின் உன்மத்தம் தலைக்குள் நட்சத்திரங்களைக் குலுக்கிப்போட்டு, நிலவையும் பிய்த்துத் தின்னச் சொல்கிறது. எதைத்தின்றாலுமென்னே, காதலின் பித்தம் தெளியப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

ஊழிக்கூத்தின் தாண்டவத்தைப் பேசுகிறது ஒரு கவிதை. இலைகளுக்குப் பதிலாய் சவங்களை உதிர்க்கும் மழைமரத்தினடியில் தஞ்சம்கோரும் அவனையும் அணிலையும் பற்றிப் புலம்பும் ஒருகவிதை, அது. அதே மழைமரம் அடுத்த கவிதையில் அணில் கொண்டுவந்த சொல்லில் தழைத்து, தண்மையில் திளைத்துத் தாயாய் உருக்கொண்டு தாலாட்டுவதைக் கண்டு வியக்கிறோம்.

கவிஞனின் உலகம் கணத்திற்குக் கணம் உருமாறிக்கொண்டே இருப்பதுதான் போலும்! ஒரு கணத்தில் இன்பத்தின் உச்சத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துய்ப்பில் வான்வெளியில் மிதப்பதும் அடுத்த கணமே கொடும்பாலைவெளியில் சொட்டுநீரின்றித் தாகத்தில் தவித்தலைவதுமாய் வானவில்லின் வர்ணஜால வித்தைகளைக் காட்டும் வாழ்வுக்குச் சொந்தக்காரன் கவிஞனாய்த்தான் இருக்கவேண்டும். ஆம், மழைமரத்தின் தாய்மையில் பனிக்குடத்தில் நீந்தும் குழந்தையாய் உணர்ந்தவன், அதையடுத்த கவிதையில், சுட்டுத் தீர்க்கும் பாலையிரவிலே கண்ணீரை விழுங்கி உயிர்க்கும் அவலம் பற்றி மனம் கசியப்பாடுகிறான். அவன் கனவுகளை யாரோ வெட்டிச் சாய்த்து, ஆணிகளாலான செருப்பில் கால்கள் பூட்டப்படும் வாதையைப் பற்றிச் சொல்லிப் புலம்புகிறான். நம் உள்ளமோ பதறித்துடிக்கிறது.

"நீயும் நானும்
காலத்துள் தொலைந்தோம்" என்று தொடங்குகிறது அடுத்த கவிதை. காதலர் வாழ்வின் இருப்புக்குச் சாட்சியாய் எதையெதையோவெல்லாம் விட்டுச் செல்கிறது, அது. அதையடுத்து, கடற்கரையில் பேசியும் மௌனித்துமாய்க் கணங்களைக் கடத்தும் காதலர் பற்றிப் பேசும் கவிதை நம் உள்ளத்தை ஈர்த்துப்போகின்றது.

"ஈர மணலில் எழுதிய கனவுகளை
ஒரு அலை அழிக்கும்
இன்னொன்று கொண்டுவரும்"

என்று அழிந்தும் மீண்டுமாய் அலையும் கனவினைச் சொல்லிவிட்டு, மறுகவிதையில், "கருவணுவாய் உருப்பெற்ற சொல் எதுவென்று" தேடித் தவிக்கும் இதயம் பற்றியும் அதன் ஆழ்துயரம் பற்றியும் பெருகும் உயிரணுக்களைப் போன்று அடரும் நினைவுகளோடு கால்போனபோக்கில் அலையும் ஒருவனின் மன அவசம் பற்றியும் விபரிக்கிறது.

தேர்ந்தெடுத்த கோரைகளைக் கொண்டு நெய்யப்படும் கல்யாணப் பாயின் அடியாய் பெருகும் காதலின் நினைவுகளைப் பாடும் கவிதையை அடுத்து வருகிறது மற்றும் ஓர் அற்புதமான காதல் கவிதை.

அன்புக்குரியவளின் கொஞ்சும் குரலைத் திரட்டியெடுத்து முகர்ந்தும் பானமாய் பருகிக் களித்தும், கருவாட்டுக் குழம்பாய் உண்டுமகிழ்ந்துமாய் உன்மத்தம் கொண்டு தவிக்கும் தருணத்தில் கதவு தட்டப்படுகிறது. உடனே, அந்த நினைவுகளின் உணர்தலை இரண்டாம் நபர் கண்டுவிடக்கூடாதென ஒளித்துவைக்க படாதபாடுபடும் காதல் பித்தனின் தடுமாற்றம், நம்மை வாய்விட்டுச் சிரிக்கவும், அவனின் நிலைக்காய் நெகிழ்ந்திரங்கவுமாய் பல்வேறு உணர்வுகளின் கலவைக்குள் அமிழ்த்திவிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலில் இணைவு இன்பம் தருவதுபோல் இடைவெளி இன்ப அவஸ்தை தருகிறது. கண்ணெட்டும் தூரத்தில் இருந்தபடி பார்வையால் அள்ளிப்பருகி, குழல் கோதிபடி விடுகின்ற பெருமூச்சில் உருகிவழியும் உலோகக் கட்டில் பற்றிச் சொல்லும் கவிஞர், இருவரினதும் தர்க்கத்தின் இறுதியில் இடியாய் மோதி மழையாய்ப் பொழியும் இருவரைப்பற்றிய காட்சியை நம் மனதில் தீட்டுகிறார்.

கவிஞன் கற்பனையின் வெளியெங்கும் சஞ்சரித்து அலைபவன்தான். மாடமாளிகைகள், கூடகோபுரங்களைக் கணப் பொழுதில் அடைந்து மானசீகமாய்க் குடியேறக்கூடியவன்தான். ஆனால், ஒரு மக்கள் கவிஞனின் காதல் கவிதைகளில்கூட சாதாரணப் பாட்டாளி மக்களின் அன்றாடப் பாவனைப் பொருட்கள்தாம் உவமைகளாய் வந்துவிழும்போலும்! முன்னைய கவிதையில் வறுத்த அரிசியின் மணமாய் மிதந்தது, காதலியின் நினைவு. இந்தக் கவிதையில், களைத்த இரவின் உறக்கமாய் உருமாறுகிறது காதலியின் தழுவல். ஆவிபறக்கும் அவித்த மரவள்ளிக் கிழங்காய் அவன் படுத்துக் கிடக்கிறான். எங்கோ ஒரு குழந்தையின் அழுகுரலும், அதனை நிறுத்த, தாலாட்டுத் தெரியாத தாயொருத்தியின் சொற்களற்ற மொழியின் ஓய்ச்சுதலும் அவன் காதில் விழுகிறது. இந்தக் காட்சி, எளிய மனிதன் ஒருவனின் அன்றாடப் பாடுகளை, அவனைச் சுற்றி நிகழ்வனவற்றை, அவற்றினூடே பரிணமிக்கும் அவனின் உணர்வுகளையெல்லாம் உள்ளவற்றை உள்ளபடி நம்மைக் காணவும் உணரவும் வைக்கின்றன. இதுவே அவனுடைய எழுத்தின் வெற்றி.

அந்தப் பருவத்தை நாம் எல்லோரும் கடந்துதான் வந்துள்ளோம். ஆம், கண்ணில் காணும் மரமாகட்டும் சுவராகட்டும் எல்லாவற்றிலும் நம் பெயரை, நமக்குப் பிடித்தமானவர்களின் பெயர்களைப் பொறித்துப் பார்த்து இன்புறத் தூண்டும் விடலைப்பருவம். அதுபற்றிய நினைவுகளை ஊர்ந்துசெல்லும் பாம்பென உருவகப்படுத்துகிறார், கவிஞர். விடலைப் பருவத்துப் பையனின் காதலையும் அதை உள்ளபடி ஏற்பதில் அவளுக்குள்ள தயக்கத்தை, பயத்தை, அவற்றைமீறி மெல்ல எட்டிப்பார்க்கும் நேசத்தையெல்லாம் சொற்சித்திரமாய்த் தீட்டும் அழகிய கவிதை, 69 ஆம் பக்கத்தில் நம் மனதுக்கு விருந்துபடைக்கின்றது.

அதையடுத்து, எங்கும் நிறைந்திருந்து மூச்சைத் திணறச்செய்யும் அவள் நினைவின் இம்சையைப் பற்றிப் பேசுறது இன்னொரு கவிதை. அதனைத் தொடர்ந்து, மண்ணெண்ணெய் விளக்கு, அடுப்பு, பின்வாசலில் கிடக்கும் நாய், மண்சுவரில் தொங்கும் மயில் மீதமர்ந்த முருகன் படம், உலையில் வேகும் சோறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என எளிய உழைப்பாளியின் குடிசையின் இரவுநேரக் காட்சி கவிதையில் விரிகிறது. அவளின் வரவுக்காய்க் காத்திருக்கும் அவனின் இம்சையை,

“சோற்றுப் பதம் பார்க்கும் விரலிடுக்கில்
என்னுயிரும் சேர்ந்து நசுங்க”

என்ற வரி அச்சொட்டாய் உணர்த்துகின்றது.

“உலையை அடக்க மூடியைத் திறந்து
நீர் தெளிப்பதுபோல
மனதை அமைதிப்படுத்த
எளிய வழி ஏதுமுண்டா ?”

என்ற வரிகளில் அடங்காத் தவிப்பை ஏற்றிவைத்து படிப்பவர் மனதுக்குள் இறக்கி வைக்கின்றார்.

இத்தொகுதியின் இறுதிக் கவிதை, “வேம்பின் நிழல்கூடத் தகிக்கும்கோடை” பற்றிய அறிமுகத்தோடு தொடங்குகின்றது. கோடையினால் வறண்ட வயல், உருகிவழியும் தார்ச்சாலை என்று விரியும் காட்சியில் அன்பின் பரிமாறலையும் அதன் மீதான அடங்கா வேட்கையையும் சொல்ல வந்த கவிஞர், “அன்பையும் உறிஞ்சிக்கொண்டுவிடுமா கோடை ?” என்று எழுப்பும் கேள்வி சுவாரஷ்யமானது. ஈற்றடிகளில்,

“சாக்குப் பைக்குள் போட்டு
ஊர் தாண்டி அவிழ்த்துவிட்டு வந்தாலும்
நமக்கு முன்னால் வீட்டில் நிற்கும்
பூனையைப்போல்
இப்போதும்
உன் காலையே சுற்றுகிறதென் நினைவு”

என்ற படிமத்தின் வழியே சொல்லப்படும் எளிய ஆனால் ஆழமான காதல் நம் இதயத்தை மெல்லெனத் தழுவும் சில்லெனும் தென்றலாய் மாறிக் குளிரச்செய்து, இதழ்க்கடையில் ஒரு புன்னகையை இலவசமாய்த் தந்துவிட்டுப் போகின்றது.

இவ்வாறாக, இந்தத் தொகுதியின் எந்தக் கவிதையையுமே ஆழ்ந்து துய்க்காமல் வெறுமனே என்னால் கடந்து போய்விட முடியவே இல்லை. பலதடவைகள் வாசித்தாலும், அந்த ஒவ்வொரு முறையும் இதன் கவிதைகள் என்னை ஆட்கொண்டு, எங்கோ எனைச் சுமந்துசென்றுவிடுவதை உணர்ந்தேன். இக்கவிதைகளைப் படிக்கப் படிக்க இன்னதென்று சொல்லத் தெரியாத பல்வேறு உணர்வுகளை உற்பவிக்கும், கொண்டாட்டமான ஒருவித மனநிலையை எய்திவிடுகின்றேன். இதயத்தைப் பழமாக்கி அணிலுக்குக் கொறிக்கக்கொடுத்தது பற்றி இந்தத் தொகுதியில் கவிஞர் ரவிக்குமார் சொல்கிறார். என்னைக் கேட்டால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கவிதைத் தொகுதியே ஓர் அணிலாய் மாறி நம்முடைய உள்ளங்களைக் கொறித்துத் தீர்த்துவிட்டது என்றுதான் சொல்லத் தோன்றுகின்றது. அந்த இதயம் மறுபடி மறுபடிக் கவிதைகளைப் படிக்குந்தோறும் வளர்ந்து கனிவதும், அதேகவிதைகள் அதனை மீண்டும் கொறித்துத் தீர்ப்பதுமாய் மாறிமாறி ஓர் அற்புத அனுபவத்துக்குள் நாம் ஆழ்ந்து பயணிக்க வைக்கப்படுகின்றோம். மந்திரக்காரனின் கோலாய் மாறிவிடும் வரிகளின் இன்ப வெளிக்குள், அவஸ்தையின் ஆழங்களுக்குள் மூழ்கி நாம் மிதந்தலைகின்றோம். அதனால்தான், இதனை இந்நூலுக்கான மதிப்புரையாய் அன்றி, என்னையே வாசிப்பனுபவத்தில் தொலைத்துவிட்டமை பற்றிய என் உணர்வுகளையெல்லாம் திரட்டி ஓர் இரசனைக் குறிப்பாகத்தான் முன்வைத்துள்ளேன். இந்த வாசிப்பின்பம் எல்லோருக்கும் கிட்டவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு, எந்த வரையறைகளோ, கட்டுப்பாடுகளோ இன்றி நான் உள்ளத்தால் உணர்ந்தவற்றையெல்லாம் தங்குதடையின்றி இங்கே கொட்டியுள்ளேன். இது தன்னையே கவிதைகளுக்குள் ஆழ்ந்து தொலைத்துவிடும் ஒரு பரவச நிலை. அதனை உள்ளது உள்ளபடி வார்த்தைக்குள் வார்ப்பது அரிது. எனவே, நீங்களும் இந்நூலினை ஒருதரம் வாசித்து அனுபவித்துப் பார்ப்பதுதான், நான் இங்கு சொல்லி இருப்பவற்றை முழுமையாக உள்ளார்ந்து அனுபவித்துணர உங்களுக்கு வழியமைத்துத்தரும் என்பதே என் நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 7. ஈழத்துக் கவிதை இதழ்கள் வரிசையில் 'கவிஞன்' இதழ்: சில குறிப்புகள்

பொதுவாக இலக்கிய இதழ்களில் அல்லது வாராந்த இதழ்களில் 'கவியமுதம்', 'கவிச்சரம்', 'கவிமஞ்சரி', 'கவிதாபவனம்' முதலான ஏதேனுமொரு தலைப்பில் கவிதைக்கென ஒரு பக்கமோ சில பக்கங்களோ ஒதுக்கப்பட்டிருப்பது வழக்கம். அத்துடன், செய்திகள் மற்றும் பிற ஆக்கங்களுக்கு இடையிலே எஞ்சும் இடத்தை இட்டுநிரப்பும் வகையில் ஆங்காங்கே சிறு கவிதைகள் இணைக்கப்படுவதுமுண்டு.

இந்நிலையை மாற்றி, தனித்துக் கவிதைகளுக்கு மட்டுமான ஓர் இதழ் வெளிவரவேண்டும் என்ற இலட்சியத்தோடு 1955ஆம் ஆண்டில் மஹாகவி, வரதர் ஆகிய இருவரும் இணைந்து வெளியிட்ட ஈழத்தின் முதலாவது கவிதை இதழ் 'தேன்மொழி' ஆகும். கவிதைக்கான தனியிதழ் ஒன்றை வெளியிடுதல், நவாலியூர் சோமசுந்தரப் புலவருக்கு ஒரு நினைவுச் சின்னத்தைத் தோற்றுவித்தல் ஆகிய இரண்டு நோக்கங்களின் அடிப்படையில் 16 பக்கங்களைக் கொண்ட இந்த மாத இதழைத் தாம் வெளிக்கொணர்வதாக அவர்கள் தெரிவித்திருந்தனர். 'தேன்மொழி'யின் முன்னட்டையில் சோமசுந்தரப் புலவரின் ஒரு கவிதையும் பின்னட்டையில் ஈழத்தை அல்லது தமிழகத்தைச் சேர்ந்த கவிஞர்களில் ஒருவர் பற்றிய அறிமுகமும் கொண்டதாக இவ்விதழ் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், பிறமொழிக் கவிதைகளை ஈழத்தவர் மத்தியில் அறிமுகப்படுத்தும் நோக்கில் சீன, ஸ்பானிய, பிரான்ஸிய, ஆங்கில மொழிக் கவிதைகளின் மொழிபெயர்ப்புக்களும் இவ்விதழில் வெளியாயின. இவ்வாறாக, ஈழத்துக் கவிதை இலக்கியப் போக்கின் ஒரு வெட்டுமுகத் தோற்றத்தைக் காட்டும் ஒரு சிறந்த இலக்கிய ஆவணமாகத் திகழ்ந்த இவ்விதழ் ஆறு வெளியீடுகளோடு நின்றுபோனமை துரதிருஷ்டவசமானது.

அடுத்து, 1964ஆம் ஆண்டுமுதல் இ. இரத்தினம், முருகையன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு 'நோக்கு' எனும் கவிதைக் காலாண்டிதழ் வெளிவரத் தொடங்கியது. தமிழ்க் கவிதை, மொழிபெயர்ப்புக் கவிதை, கவிதை விமர்சனம் என்பவற்றின் வளர்ச்சியை நோக்காகக் கொண்டு எழுந்த 'நோக்கு' இதழில், மஹாகவி, முருகையன், நீலாவணன் முதலான பலரும் எழுதிவந்தனர். அதேவேளை, புலவர் சிவன் கருணாலய பாண்டியனார் போன்ற மரபுவழிச் செய்யுள் இயற்றுவோரும் அதில் பங்களிப்புச் செய்தனர். 'நோக்'கின் ஓர் இதழ் ஷேக்ஸ்பியர் சிறப்பிதழாக வெளிவந்தமை கவனங்கொள்ளத்தக்கது. இவ்வாறு, பழமைக்கும் புதுமைக்கும் இடையில் பாலமமைக்கும் வகையில் இருவகைப் போக்கிலும் அமைந்த கவிதைகள் 'நோக்'கில் இடம்பெற்றன. 1970ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் வெளிவந்த 'நோக்கு' இதழின் பின்னட்டையில் இடம்பெற்றுள்ள,

"பாவினில் புதுமைசெய்யவல்ல பாவலரை அழைக்கின்றோம். செய்யுட் களத்தில் சேர்ந்து பணியாற்றுங்கள். புதியன படைத்து 'நோக்'கிற்கு அளியுங்கள். ஈழத்தில் புதியதொரு பாமரபை பரிசோதனை முறையில் ஏற்றி அமைத்து நிறுவ எல்லோரும் முயல்வோம். கூறும் பொருள் என்னவாயமையினும் பாநலத்தைப் பெருநலமாகக் கொண்டு உழைக்கும் ஓர் அணியினர் நம்மிடை தோன்ற வேண்டும். .." எனும் வாசகங்கள், ஒரு காத்திரமான கவிஞர் அணியொன்றைத் தோற்றுவிக்கும் முனைப்பினை வெளிப்படுத்தி நிற்பதைக் காணலாம். 'நோக்கு' இதழும் ஆறு வெளியீடுகளோடு நின்றுபோனமை குறிப்பிடத்தக்கது.

## II

கவிதை எனும் இலக்கிய வடிவத்துக்கு அதிக அழுத்தம் கொடுத்து, தூய கலைத்துவ நோக்கினை முன்னெடுத்துச் செல்லும் வகையில் அமைந்த 'தேன்மொழி', 'நோக்கு' எனும் இரு இதழ்களின் போக்கில் இருந்து சற்றே வேறுபட்டு, கலைத்துவ நுட்பத்தோடு ஆழமான சமூக நோக்கையும் சமூகச் செயற்பாட்டையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மைப்படுத்தும் வகையில் 1969ஆம் ஆண்டு எம். ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம் ஆகிய இருவரால் 'கவிஞன்' காலாண்டிதழ் வெளியிடப்பட்டது. கவிதையின் சமூகப் பெறுமானம், கலைத்தரம் எனும் இரண்டு அடிப்படை அம்சங்களைக் குவிமையப்படுத்தி, முற்போக்குச் சிந்தனையின்பாற்பட்ட பலரின் கவிதைகளையும், கவிதை தொடர்பான கட்டுரைகளையும் உள்ளடக்கி வெளிவந்த 'கவிஞன்' இதழ் ஈழத்து இலக்கிய இதழியல் வரலாற்றில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுக் கொண்டது. அதன் முதலாவது இதழின் ஆசிரியர் தலையங்கத்தில்,

"கலைமதிப்புடைய தமிழ்க் கவிதைகளை இனங்காண்பதற்காக, எமது கவிதைகளுக்கு நிலையான — வாசகமதிப்புடைய ஒரு வெளியீட்டுக் களத்தை உருவாக்கும் நோக்குடன் கவிஞன் வெளிவருகின்றது... கவிதை பற்றிய விமர்சன நோக்கை வளர்ப் பதிலும் சமகாலத்துக் கவிதைகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்துவைப்பதிலும் கவிஞன் கவனம் செலுத்தும்" என்று அமைந்துள்ள வரிகளில் அவ்விதழ் கொண்டுள்ள இலட்சிய நோக்கு வெளிப்படுகின்றது.

III

*தேன்மொழி, நோக்கு, கவிஞன்* எனும் இம்மூன்று இதழ்களின் வாயிலாகவும் ஈழத்துக் கவிதைச் செல்நெறியில் கவிதை இதழ்களின் கட்டங்கட்டமான முன்னகர்வினை அல்லது வளர்ச்சிப் போக்கினை நாம் இனங்காண முடியும். 60களின் நடுப்பகுதியில் எழுச்சிபெற்ற புதிய கவிதைப் போக்கினடியாக, யாப்பின் வரம்பினை முற்றாகப் புறந்தள்ளிவிடாமல், யாப்போசையை விடவும் பேச்சோசை மிகைத்துத் தோன்றும் வகையில் அமைந்திருந்த கவிதைகள் அதிகச் செல்வாக்குப் பெற்றன. இப்புதிய கவிதைப்போக்கின் முன்னோடிகள் என்ற வகையில், மஹாகவி, முருகையன், சில்லையூர் செல்வராசன், நீலாவணன் ஆகியோரைக் குறிப்பிடலாம். அந்தவகையில், 60களின் இறுதிக் கூற்றில் தோன்றிய 'கவிஞன்' இதழிலிலும் இப்போக்கு பிரதிபலிப்பது வியப்பன்று.

எனவே, கட்டிறுக்கமான செய்யுள் மரபைப் பெரிதும் தளர்த்திப் பேச்சோசையை முதன்மைப்படுத்தி, மக்களுக்கு மிக இலகுவாகப் புரிகின்ற சொற்களைக் கொண்டமைந்த நவீன கவிதைகளுக்கான தளத்தை உருவாக்கித் தருவதிலும், அக்கவிதைகளில் சமூகப் பிரக்ஞையுடைய பாடுபொருளுக்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்குவதிலும் 'கவிஞன்' இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிய முனைப்பு விதந்துரைக்கத்தக்கது எனலாம். கவிதையின் வடிவம், உள்ளடக்கம் பற்றிய தீர்க்கமான நோக்குநிலையோடு 'கவிஞன்' தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது என்பதை அவ்விதழ்களில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளின் வாயிலாக அடையாளம் காணலாம். எடுத்துக்காட்டாக,

"கவிதையின் பேச்சு மொழிப் பண்புக்கு முரணான எல்லா வற்றையும் தவிர்த்து, பேச்சின் சகல அகப் பண்புகளையும் செய்யுளில் கொண்டு வரும்போது அது மிகுந்த எளிமையும் புதுமையும் பெறுகின்றதை நாம் காணலாம்" *(இதழ் 1, ப. 33)*,

"கவிதை அனுபவபூர்வமானதாக அமைக்கப்பட்ட போதிலும் அது இலகுவானதாகவும் சுலபமாகப் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்கவேண்டும். கவிதையின் இலகுத்தன்மை அதன் புறவடிவமாகிய செய்யுள் நடையின் எளிமையில் மட்டும் தங்கி இருக்கவில்லை. அதன் அகவடிவமான பொருள் அமைப்பிலும் தங்கி உள்ளது." *(இதழ் 2, ப.33)* எனும் கூற்றுக்களைக் குறிப்பிடலாம். இந்தக் கவிக்கொள்கையானது வெறும் பிரகடனமாக அன்றி, கவிஞன் இதழில் வெளிவந்த கவிதைகளிலும் பிரதிபலிக்கக் காணலாம். வகைமாதிரிக்கு சில எடுத்துக்காட்டுக்களைப் பார்ப்போம்:

1) 'சந்தியிலே நிற்கிறேன்;
பகல் சாய்கிறது.
மங்கல் இனி வந்துவிடும்
அதைத் தொடர்ந்து வரும் விடிவு.
அதுவரையில்,
இந்த மக்கள் போய்த் துயில்வர்.'

('சந்தியிலே நிற்கிறேன்' சண்முகம் சிவலிங்கம்)

2) 'எத்தனை மனிதர்
இங்கிருக் கின்றார்!
இருந்துமென்ன?
இருந்துமென்ன?
சிறுநீர் கழிக்கச்
செல்லலாம் என்றால்
யாரிடம் எனது
கைச்சுமை கொடுப்பேன்...?'

('புகைவண்டிக்காகக் காத்திருக்கையில்' எம் ஏ நுஃமான்)

3) 'மூத்தப்பா, செத்தா போனாய்?
மூடர்கள் உன்னை நன்கு
பார்த்திருந் தார்களானாற்
பச்சையாய்ப் பொய்யே சொன்னார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியார் போல, வாலா
மணி, வெள்ளை வேட்டி, சால்வை
நேர்த்தியாய் உடுத்தி யுள்ளார்;
நீ புது மாப்பிள் ளைதான்'

('உன்னைப்போல் நானும் ஒருமுறை சாகவேண்டும்' – ஜீவா ஜீவரத்தினம்)

இவற்றையொத்த பல்வேறு கவிதைகளில் சாதாரண மக்கள் பயன்படுத்தும் சொற்கள் மிகுந்த உயிர்த்துடிப்போடு, பேச்சோசை வெளிப்பட்டுத் தோன்றும் வகையில் சிறப்பாக எடுத்தாளப்பட்டுள்ள பாங்கினை இனங்காணலாம்.

IV

காலாண்டிதழாக வெளிவந்து நான்கு இதழ்களோடு நின்று போன 'கவிஞ'னில் மஹாகவி, சண்முகம் சிவலிங்கம், எம். ஏ. நுஃமான், முருகையன், நீலாவணன், பஸீல் காரியப்பர், பாண்டியூரான், அன்பு முகையதீன், மு. சடாட்சரன், மருதூர்க்கனி, ஜீவா ஜீவரத்தினம், மருதூர்க்கொத்தன், சி. மௌனகுரு, அண்ணல், ஏ. இக்பால், மு. பொன்னம்பலம், இமையவன், அ. யேசுராசா, இ. சிவானந்தன், யோனகபுர ஹம்ஸா, ஏ. எல். கே. தாஸீம், நாக. மகாலிங்கம், தான்தோன்றிக் கவிராயர் முதலானோரின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இக் கவிதைகளின் உள்ளடக்கம் பலதரப்பட்டது. காதல், கழிவிரக்கம் முதலான அகவயப்பட்ட கவிதைகளோடு, தம்மைச் சுற்றியுள்ள சமூகத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகள், சாதி வேறுபாடுகள், உழைப்பாளி வர்க்கத்தின் பிரச்சினைகள், போரின் அவலங்கள் முதலான இன்னோரன்ன அம்சங்களை உள்ளடக்கி சமூகப் பிரக்ஞையோடுகூடிய பல கவிதைகள் இவ்விதழ்களில் இடம்பெற்றுள்ளன. அவை குறித்து சற்றே விரிவாய் நோக்குவோம்.

இவ்விதழ்களில் பஸீல் காரியப்பரின் 'உயிர்ப்பு', பாண்டி யூரானின் 'பத்துமுறை பிறந்தாலும்', அன்பு முகையத்தீனின் 'ஒருகணநேரச் சந்திப்பு', ஜீவா ஜீவரத்தினத்தின் 'பக்க பேதம்' என்பன காதலுணர்வைச் சொல்லும் சில கவிதைகள். மஹாகவி யின் அகலிகை புதுமைப்பித்தன் கண்ட 'அகலிகை'யை நினைவூட்டுகின்றது.

அவ்வாறே, மானிட நாகரிகத்தின் பரிணாம வளர்ச்சிநிலை களை அடிப்படையாகக் கொண்ட 'ராகுல சங்கிருத்தியானின் 'வால்கா முதல் கங்கைவரை' நூலின் போக்கை ஒத்ததாய் அமைந்த எம். ஏ. நுஃமானின் 'அதிமானிடன்' கவிதை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளியை எட்டுமளவு மனித இனம் அறிவியலில் வளர்ச்சி கண்டுவிட்ட நிலையிலும், அவர்களில் ஒருசாரரார் அன்றாடம் தெருவில் அலைந்து திரியும் நிலையையும், தொழிற்சாலைகளிலும் வயல்நிலங்களிலும் கசக்கிப் பிழியப்படும், சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் அவலத்தையும் சுட்டிக்காட்டி, ஈற்றில் உலகம் ஒரு போர்க்களமாக மாறுவதைக் காட்சிப்படுத்துகிறது. அவரது 'ஹோசிமின் நினைவாக மீண்டும் துப்பாக்கி வெடிக்கின்றது...' என்ற போர்க்காலக் கவிதை,

"உன் நரம்புகளில் ஓடிய உணர்வின்
சிறுதுளி எனினும் சேர்க எம் குருதியில்...!
இன்னும் இன்னும் இழக்கிலோம் எங்கள்
மண்ணிலே சிறிய மணலையும் நாங்கள்"

என, போர்களே வாழ்வாகிப் போன, விடுதலை வேட்கைகொண்ட மக்களின் குரலாய் உரத்து ஒலிக்கிறது.

அடுத்து, தொழிலாளர் வர்க்கத்தின் துயர்கள், அவர்களின் உழைப்புச் சுரண்டலுக்கு எதிரான தார்மீகக் கோபத்தினடியான கலகக்குரல், அவர்களின் வாழ்வின் விடியல் நோக்கிய நம்பிக்கை என்பவற்றை வெளிப்படுத்தும் பன்முகக் கவிதைகள் இந்த நான்கு இதழ்களிலும் இடம்பெற்றுள்ளன. சண்முகம் சிவலிங்கத்தின் 'சந்தியிலே நிற்கின்றேன்', நாட்டார்ப் பாடல் மரபை அடியொற்றிப் படைக்கப்பட்டுள்ள 'ஆக்காண்டி', எம்.ஏ.நுஃமானின் 'நாங்கள் கோபமுற் றெழும்போது உன் வதனத்தில் புன்னகை மலர்க', அன்பு முகையதீனின் 'விழிப்பு', நாக. மகாலிங்கத்தின் 'போர்ப் பாட்டு', ஏ.எல்.கே. தாஸீமின் 'நம்பிக்கை' என்பன இத்தகைய கவிதைகளுக்கான சில உதாரணங்களாகும்.

குறிப்பாக, ஊரைச் சுரண்டிப் பிழைக்கும் சிறுநரிக்கூட்டத்தை எதிர்த்து, மக்கள் நலம்பேணும் தன்முனைப்பில் போராடி, அதிகார வர்க்கத்தின் பழிவாங்குதலால் ஊரைத் துறக்கநேரும் ஓர் உண்மை மனிதனைக் கண்முன் நிறுத்தும் வகையில் அமைந்த நீலாவணனின் 'பாவம் வாத்தியார்',

"வாழத் தெரியாமல் வம்புகளில் போய்மாட்டும்
ஏழைப் புலவர் பெருமானே, என்ன இது!
கையிலே மூட்டை முடிச்சும் கவலைகளோர்
பையிலுமாய் நிற்கின்றீர்! 'பஸ்'சுக்கோ ? நீண்டதொலை
தூரப்பயணம் போல்! தொந்தரவே! எங்களது
ஊரார் உமையிந்த ஊரைவிட்டே ஓட்டுதற்காய்..."

என்று அங்கதமும் சமூக விமர்சனமுமாய் நீண்டு தொடர்கிறது. சுரண்டலையும் ஊழலையும் எதிர்த்து நிற்பதோடு நில்லாமல், இளம் தலைமுறையினர்க்குக் கல்விக் கண் திறந்து சீர்திருத்தக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களால் விழிப்புணர்வூட்டும் வாத்தியாருக்கு எதிராய் 'இங்கிலீ'ஸில் பறக்கும் பெட்டிசனால், பெட்டி படுக்கையோடு ஊரைவிட்டு வெளியேற்றப்படும் பாவப்பட்ட வாத்தியாரின் நிலைக்கிரங்கி, நடக்கும் அநீதிகளைக் கண்டும் எதிர்க்கத் துணியாது அடங்கிவாழப் பழக்கப்பட்டுவிட்ட கிராமத்தானின் கூற்றாக அமையும் இக்கவிதையின் பேசுபொருள் அனேகமான கிராமங்களின் சொந்தச் சோகத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருப்பது அதன் தனிச்சிறப்பு எனலாம்.

அவ்வாறே,

"பட்ட கடனுக்காய் தொழிலாளி
பயந்தே உழைக்கின்றான்
வட்டிப் பணத்தினிலே முதலாளி
வாழ்க்கை நடத்துகின்றான்"

என்று சுரண்டப்படும் தொழிலாளியின் துயர்சொல்லும் அன்பு முகையதீனின் சோகக்குரலும்,

"எங்கள் அடுப்பில் எரியா நெருப்பு
எங்கள் வயிற்றில் எரிந்துகொண் டுள்ளதை
நீயறியாயா ?"

என்று முழங்கும் நுஃமானின் கலகக்குரலும்,

"அம்மா கழுத்தை அகன்று பெட்டியில்
சும்மா கிடந்த தாலியின் அடைவாய்,
அறுபது வாங்கி ஐயா கையில்
ஐம்பதைப் படைத்து..."

என்று தொடரும் மருதூர்க் கொத்தனின் நையாண்டிக் குரலுமாய் பலப்பல குரல்கள் 'கவிஞ'னில் ஓங்கி ஒலிக்கக் காணலாம்.

மேலும், மக்களின் வறுமை நிலைகுறித்த இரங்கலுணர்வை, அதுதொடர்பான விழிப்புணர்வை ஊட்டும் கவிதைகள் என்ற வகையில், அ.யேசுராசாவின் 'நல்லம்மாவின் நெருப்புச் சட்டி', ஜீவா ஜீவரத்தினத்தின் 'உன்னைப்போல் நானும் ஒருமுறை சாகவேண்டும், சண்முகம் சிவலிங்கத்தின் 'ஒரு ஞாயிற்றுக்கிழமை', சி. மௌனகுருவின் 'நிலவே உனைப்பாட நேரம் இல்லை' என்பவற்றைச் சுட்டிக் காட்டலாம். குறிப்பாக, வறுமையின் கொடுங்கரங்களில் சிக்கித் தவிக்கும் நல்லம்மாவின் அன்றாடப்பாடு பற்றி,

"பற்றியெரி சிரட்டைத்தணல்
கரிபற்றத் தணல்நிறைந்த
நெருப்புச் சட்டிகள்;
வீசுகிற பெருவெக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சினிலும் முகத்தினிலும்,
முன்னெழுந்து தாக்கித்
தன்னுடலைத் தின்கையிலும்
குந்தியிருந்தபடி
அவள், அப்பம் சுடுகின்றாள்"

என, நம்மூர்களிலும் சர்வசாதாரணமாய்க் காணும் நல்லம்மாக்களைச் சொற்சித்திரமாய்த் தீட்டியுள்ளார், அ. யேசுராசா.

அவ்வாறே, மு. சடாட்சரனின் 'நிலை உயரவேண்டும்', 'ஒரு மழைநாள்' ஆகிய கவிதைகள் மலையக மக்களின் அவலமான வாழ்வியலையும் அந்நிலை மாறவேண்டும் என்ற கவிஞரின் உணர்வுத் துடிப்பினையும் அடிநாதமாகக் கொண்டமைந்துள்ளன. "வளம் நிறைந்த மலைநாட்டின் நிலைஉயர வேண்டும்", "நாளைக்கிவ் வான்மிகவும் நன்றாய் வெளித்துவிடும்!" என்ற ஈற்றடிகள் இரண்டும் கவிஞரின் இந்நம்பிக்கை உணர்வினைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

சாதி வேறுபாட்டின் உக்கிரத்தையும் அதனால் மக்கள் படும் பாட்டையும் உணர்ச்சிக் கொந்தளிப்போடும் எள்ளல் தொனியோடும் சொல்லிச் செல்லும் இரு முக்கியமான கவிதைகள் 'கவிஞ'னில் இடம்பெற்றுள்ளன. மஹாகவியின் புகழ்பெற்ற கவிதைகளில் ஒன்றான 'தேரும் திங்களும்', இ. சிவானந்தனின் 'கொழும்பிலொரு கோலம் — சிவலோகமானாலும்...' என்பனவே அவை.

"சிவம் சைவம் எனமதித்த பெரியவர் என்னை நோக்கி
பறைப் பொடியன் மேலிருக்க இப்பொடியன் கீழேயாகில்
சிவனார் வதியுமொரு சிவலோகமானாலும்
எமக்கது வேண்டாம் தம்பி,
இறங்கிவா போவோம்' என்றார்"

என, சாதிவெறி மனிதநிலை மறக்கச் செய்துவிடும் என்பதை உரையாடற் பாங்கில் அமைந்த சிவானந்தனின் கவிதை எள்ளல் சுவையோடு சொல்லிச் செல்லும் விதம் சுவாரஷ்யமானது.

இவற்றோடு, வாழ்வின் போக்கினை 'மதிப்பீடு' செய்வதாய் அமைந்த மு. பொன்னம்பலத்தின் நீண்ட கவிதை அன்னையை எண்ணி மறுகும் தனயனின் மனக்கலக்கத்தை, நகரவாழ்வின் தன்மையை, அதன் தனிமையை, மன இறுக்கத்தையெல்லாம் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக, "கவிதை செய்யுள் உருவத்திலே இல்லை. அதன் உணர்விலும் உணர்வு வெளிப்படுத்தப்படும் முறையிலுமே உண்டு ... கவிதை அறிவுரீதியானதல்ல, உணர்வுரீதியானது. மூளையினால் விளங்கிக் கொள்ளும் கவிதையை விட உணர்வினால் புரிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்படுவதே சிறந்ததாக இருக்கும்” என்ற எம். ஏ. நுஃமானின் ‘கவிதை’ குறித்த கூற்றுக்கு (அ. யேசுராசா: மணற்கேணி நொவெ. — டிசெ. 2014) இசைவான போக்குடைய பல கவிதைகளை நாம் கவிஞன் இதழ்களில் கண்டு மகிழலாம்.

## V

பிறமொழிக் கவிதைகள் தமிழுக்கு அறிமுகப்படுத்தப்படல் வேண்டும் எனும் முன்னைய இரு கவிதை இதழ்களினதும் தொடர்ச்சியாகக் ‘கவிஞன்’ இதழிலும் பல்வேறு மொழிபெயர்ப்புக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. கீழைத்தேய, மேலைத்தேய மக்களின் அன்றாட வாழ்வியலைச் சித்திரிக்கும் பிறமொழிக் கவிதைகள் என்றவகையில், சண்முகம் சிவலிங்கத்தின் மொழி பெயர்ப்பிலே ஜேர்மன் கவி ஹான்ஸ் மாக்னஸ் என்கன்ஸ்பேகர் எழுதிய மூன்று புதிய கவிதைகள் முறையே, ‘தூரத்துவீடு’, ‘பட்டோலை’, ‘வரலாற்றுப் போக்கு’ எனும் தலைப்புகளிலும், ரஷ்யக்கவி அன்றெய் ஊநெசன்ஸ்கியின் இரு கவிதைகள் ஆங்கிலம் வழியே, ‘இலையுதிர்காலம்‘, ‘பனிப்புகார் வீதி’ எனும் தலைப்புகளிலும் லூச்—சி, ஃபு—சூ எனும் சீனக் கவிஞர்களின் கவிதைகள் ஆங்கிலம் வழியாக முறையே ‘சங்கிங் நகர்ப் படகுகள்’ ‘மாடுகள் ஓட்டும் பெண்’ என்னும் தலைப்புக்களிலும் தமிழுக்குக் கொண்டுவந்தமை ‘கவிஞன்’ இதழின் மிக முக்கியமான பங்களிப்பாகும்.

அத்துடன், சண்முகம் சிவலிங்கம் மொழிபெயர்த்து ‘கவிஞ’னின் கடைசி இதழில் இடம்பிடித்த எட்கார் லீ மாஸ்றேஸ், அமி லோவல், கார்ல் சேன்பேர்க், வோல்ற் விற்மன் ஆகியோரின் நான்கு அமெரிக்கக் கவிதைகளும் குறிப்பிட்டுக் கூறக்கூடியவை. மேலும், மஹாகவியால் மொழிபெயர்க்கப்பட்ட ‘முழங்கால்’ எனும் தலைப்பிலமைந்த ஜேர்மன் கவிதையும் சிறப்பாக விதந்துரைக்கத் தக்க ஒரு மொழிபெயர்ப்புக் கவிதையாகும். இவ்விதழ்கள் நான்கிலும் இடம்பெற்றுள்ள மொழிபெயர்ப்புக் கவிதைகள், “மொழிபெயர்ப்பானது இலக்குமொழியில் சுயமாகப் படைக்கப்பட்டது போலத் தற்புதுமையுடன் தோற்றமளிக்க வேண்டும்“ (நுஃமான், 1997:104) என்ற பண்பைத் தம்மகத்தே கொண்டுள்ளன எனத் துணிந்துகூறலாம். ஈழத்து இலக்கிய வரலாற்றில் மொழிபெயர்ப்புக் கவிதை முயற்சிகள் மேம்பட்டு வளம்பெறுவதில், முன்னைய இரு கவிதை இதழ்களைப் போலவே ‘கவிஞன்’ இதழின் காத்திரமான பங்களிப்பும் மறுக்க முடியாத முக்கியத்துவத்தைப் பெறுகின்றது எனலாம்.

இறுதியாக, கவிதை பற்றியும் அதன் கொள்கைகள், இலக்கு பற்றியும்மொழியமைப்பு குறித்தும் விழிப்புணர்வூட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் அமைந்த கட்டுரைகளையும் தாங்கியதாகக் 'கவிஞன்' இதழ் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. 'கவிஞன்' இதழின் ஆசிரியர்களான எம். ஏ. நுஃமானின் 'பேச்சு மொழியும் கவிதையும்', 'கவியரங்குக் கவிதைகள்' எனும் கட்டுரைகளும், மூன்றாம், நான்காம் இதழ்களில் அடுத்தடுத்து இருபகுதிகளாக வெளிவந்த சண்முகம் சிவலிங்கத்தின் 'இன்றைய தமிழ்க் கவிதை பற்றிச் சில அவதானங்கள்' எனும் நீண்ட கட்டுரையும் அக்காலக் கவிதைப் போக்கு குறித்த ஓர் ஆழமான பார்வையைத் தரக்கூடியதாய் அமைந்துள்ளன.

அந்தவகையில், வெறுமனே கலைநுட்பத்தை, கவித்துவ அழகை மட்டுமே கருத்திற்கொள்ளாமல், செயற்பாட்டுத் தளத்தில் பாரிய அதிர்வினை ஏற்படுத்தக்கூடிய செயலூக்கம் கொண்ட கவிதைகள் படைக்கப்பட வேண்டும்; அத்தகைய கவிதைகள் பிறமொழிகளில் இருந்தும் கொண்டுவரப்படல் வேண்டும்; அவ்வாறான கவிதைகளைப் படைப்போரும் படிப்போரும் அதிகமதிகம் உருவாக வேண்டும் என்ற வேட்கையை/ கோரிக்கையை முன்வைப்பதாக அமைந்த 'கவிஞன்' இதழ், ஈழத்துக் கவிதை இதழ் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளதோடு, பிற்காலத்தே எழுந்த பல்வேறு கவிதை இதழ்களுக்கும் முன்னோடியாய் அமைந்தது என்றால், அது மிகையல்ல.

*மணற்கேணி*, ஜன-பெப். 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 8. யாதுமாகி நிற்கும் ஓர் 'இளைய பாரதி'

**க**வி இளவல் தமிழ் என்ற இரா. அரவிந்தனை எனக்கு முகநூல் வாயிலாகவே தெரியும். பெயருக்கு ஏற்ப அவர் கவி இளவரசராகத்தான் இருக்கின்றார் என்பதை "யாதுமாகி நின்றேன்" எனும் தொகுதியில் அமைந்துள்ள அவரது ஈற்றடிக் கவிதை முதல் நெடுங்கவிதைகள் வரை சான்று பகர்கின்றன. பெண்ணுரிமை, சாதிக்கொடுமை, தமிழின் பெருமை, தமிழர்தம் அவல வாழ்வு, பாட்டாளியின் துயர்கள், உலகில் தலைவிரித்தாடும் அராஜகங்கள் என அவரது பாடுபொருள்கள் பல திறப்பட்டவை. அவற்றைப் பேச அவர் கையாண்டுள்ள மொழியும் உத்திகளும் தனித்துவமானவை.

"வலி பொறுத்தவள்" எனும் கவிதையைத் தன் அன்னைக்குச் சமர்ப்பித்துத் தொடங்கும் இத்தொகுதியில் சிறியதும் பெரியதுமாக 72 கவிதைகள் உள்ளன. அன்னைக்கு அடுத்ததாய் "பைந்தமிழ்த் தேர்ப்பாக"னாகப் பாரதியை விளித்து,

> "... செந்தமிழ்த் தேனி அந்தப் பைந்தமிழ்
> தேர்ப்பாகன் பாரதிக்குச் சாவுமுண்டோ ?
> அமரன் எங்கள் ஐயன், அவன் என்றும்
> அனந்தனன்றோ ?" (ப. 13)

என்று முண்டாசுக் கவிஞனைப் போற்றித் தொடர்கின்றார்.

பாரதியின் காதலனான அரவிந்தனின் எழுத்துக்களில் அந்த உத்வேகத்தை, வீரியத்தை, அறச்சீற்றத்தை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்காத் தன்னம்பிக்கையை தரிசிக்கக்கூடியதாய் இருப்பதை அவரது தொகுதியில் உள்ள பல கவிதைகள் சான்றுரைக்கின்றன. பாரதி காளிமாதாவிடம் "பாட்டுத்திறத்தால் இவ்வுலகைப் பாலித்திட" வரங்கேட்டதுபோல் இவர்,

"நின்னைச் சில வரங்கள் யான் இனிக்கேட்பேன்,
அவையாவும் நேர்ந்திடவே யாவருக்கும்
இனிதாய் இச்சகத்தினிலே வாழும்படியொரு
நனிவாழ்க்கை யாமிங்கெய்திடவே நீயே
நேரே அருள்புரிவாய்
... ... .... ... ... ... ...
என்னை நாடும் உயிர்களெலாம்
எந்நாளும் நலம் பெறவே
நான் ஈய வேண்டும் பொருள்தருவாய்
எந்நிலை சேர்ந்தாலும் எனக்கென்றும்
நின் ஏந்தல் தந்தருள்வாய்!" (ப. 58)

எனும்போது, பாரதியை மீட்டுருவாக்கம் செய்யும் "இளைய பாரதி"யை நாம் அடையாளம் காண்கின்றோம்.

மேலும், "அடிமைகள் அல்லோம்" எனும் கவிதை "உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!" என்று முழங்கிய பாரதியை நினைவூட்டுவதோடு, அதன்,

"கள்ளருக்கும் கரவருக்கும் எத்தருக்கும் அஞ்சோம்
இனி எவர் சொல்லிற்கும் சொடுக்கிற்கும்
சுயமானம் துஞ்சோம் கள்ளிற்கும் காசிற்கும்
காரிப்பொய் சொல்லோம் பிறர் எமை
எள்ளற்கும் ஏவற்கும் அடிமைகள் அல்லோம்
... ... .... ... ... ... ...
... ... .... ... ... ... ...
சாமிகளும் மதங்களுமே வாயில்வரை என்போம்
சாலையினில் யாருமினி சோதரரே என்போம்
பள்ளரென்ன பறையரென்ன யாருமெங்களுறவே
தமிழரென்ன தெலுங்கரென்ன யாவருமோர் இனமே!" (ப. 19)

எனும் வரிகள் வீரப் பெருமிதத்தின் மானுடநேயத்தின் ஒருதனிப் பிரகடனமாயும் முழங்குகின்றன.

மேலும், "எங்கள் சுதந்திரம் எங்கே போச்சு?" கவிதை,

"எங்கள் சுதந்திரமெங்கே போச்சிது
ஏழை நாடென்றெப்படியாச்சு?
எங்கே சுழலுது ஆட்சி இயந்திரம்
எப்போதெங்கள் சோறு நிரந்திரம்?
பண்டைய பெருமை பசியை நிறுத்துமோ?
வெறும் வந்தேமாதரம் வயிறு நிரப்புமோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தொடங்கி, மக்களின் உணர்ச்சிகளை முதலீடாக்கி உண்டுகொழுத்து மக்கள்தம் முதுகிலேறிச் சவாரிசெய்யும் ஈனர்களைத் தோலுரிக்கிறது. பெண்கள் வெறும் சதைப் பிண்டங்களாக நோக்கப்படும் அவலநிலையினை மனக்குமுறலோடு முன்வைக்கின்றது.

உலக அரசியல் குறித்தும், முழு உலகும் ஒரே குடையின் கீழ் அமைதல் வேண்டும் என்ற அவாவினை வெளிப்படுத்தியும் இவர் கவிகள் யாத்துள்ளார். அந்தவகையில், உலகக் காவல்கார னாய்ச் சொல்லிக்கொண்டு அமெரிக்கா செய்துவரும் அடா வடித்தனங்களை அப்பட்டமாய் வெளிப்படுத்துவதுபோல், "அமரியக்கப் பேரரசு" என்று எள்ளலோடும் "நச்"சென்று அடையாளப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாரதியின் கவிதைகளில் சாதியெதிர்ப்பு மிக முக்கியமான பாடுபொருளாக இருந்ததைப் போலவே அரவிந்தனின் கவிதைகளிலும் அவை அழுத்தமாக இடம்பெற்றுள்ளமை கவனங்கொள்ளத்தக்கது.

"பள்ளியிலே படிக்கச் சாதி, தேநீர் குடிக்கச் சாதி,
உடுக்கச் சாதி, தெருவில் நடக்கச் சாதிஞ்
மணம் முடிக்கச் சாதி, மானம் மறைக்கச் சாதி
பெயரில் சாதிப் பெயராய்ச் சாதி எனப்
பெற்றோர் உன்னைப் பெற்றுப்போட்டதும்
ஒட்டுத்துணி உடல் மூடும் முன்னே
பிணியாய்ச் சாதி தொற்றிக்கொள்ளும்
வெட்டும் விரகில், உடலது வேகும்போது
விறைக்கும் பிணமும் சாதிகள் சொல்லும்"

(வேடிக்கை உலகமடா தம்பி, ப. 63)

என்று தொடரும் வரிகளும்,

"சாதியின் பேர் பல சொன்னார் பின்னர்
சாத்திரப் படி இதுசரிதானே என்றார்
கோத்திரம் என்றதைச் சொன்னார் பின்னர்
நால்வர்ணம் சரியான நடைமுறை என்றார்..
... எரித்திடும் பிணமும் இங்கே
எழுந்ததன் சாதியைச் சொல்லும்
இவ்விழிநிலை தமிழர்க்கு ஏனோ ?" (சாதியின் சாம்பல், ப. 37)

என்று மனங்குமுறும் கவிதையும் இதற்குச் சான்றாகும்.

பாரதியின் "முரசு"ப் பாட்டை நாமறிவோம். அதைப்போல, இவரது "கொட்டட்டும் கொடும்பறை" எனும் கவிதையில் வரும்,

"இங்கே சாதிகள் இன்னமும் சாகலையே
இந்தச் சகுனிகள் செயலிங்கு தீரலையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கோதைகளை வீட்டில் பூட்டிவைத்தார்
கோமகனாய் வேடம் தான் தரித்தார்
பின்னர் பேதைபோல் மக்களை மாற்றிவைத்தார்ஞ்
கல்விக்கும் இங்கே விலைவிதித்தார் நீதிக்
கன்னித்தாய் கணகளைத் தாம் கெடுத்தார
இலவசங்கள் என ஏன் கொடுத்தார்? நாட்டை
இழிவுற இன்றிங்கு மாற்றிவிட்டார்
... ... .... ... ... ... ...
அடி கொட்டிடு கொட்டிடு கொடும் பறையே
இனி விழிக்கட்டும் முண்டாசுக்கவியவன் பரம்பரையே!" (ப. 73)

எனும் வரிகளில் உள்ள சமூக, அரசியல் விமர்சனம் முக்கியமான தாகும். அடுத்து இடம்பெறும் "பெரியார்" எனும் கவிதை,

"... தீண்டாமை நம்மைத்
தீண்டாமல் தீர்த்திட்ட
சமத்துவ தேசத்தின் தந்தை
"பெரியார்" புகழ் வாழ்க!"

எனப் பெரியாரின் மகத்துவம் பாடுகின்றது. தீண்டாமைக் கொடுமை இன்னும் நிலவிவரும் சூழலிலும் அது முற்றாக நீங்கி நீர்த்துப்போய்விட்டதான கவிமனதின் எதிர்கால தரிசனம் அல்லது அதற்கான ஏக்கம் இவ்வரிகளினூடே நமக்குப் புலப்படுகின்றது.

கவி இளவல் தமிழ் எனும் புனைப்பெயர் கொண்ட அரவிந்தன் தனது கவிதைகளிடையே வித்தியாசமான உருவகங்களைக் கையாள்கின்றார். தேநீரை இதற்குமுன் யாரேனும் தனிமைக்கு உருவகப்படுத்தி இருப்பார்களா என்று தெரியவில்லை. இவர், தனிமைத் தேநீரைப் பற்றிப் பாடுகிறார்.

"எனக்கு எதிரிலிருக்கும் மேசையில்
விரக்திக் குவளையின் கழுத்து நிரம்பத்
தளும்புகிறது அவமானத் தகிப்படங்காத் தனிமைத்தேநீர்"

என்று தொடரும் இக்கவிதையினூடே வெறுமையின், தனிமையின் துயரத்தை உள்ளத்தைச் சுடும் வகையில் வெளிப்படுத்தியுள்ளார். பொதுவாக, தேநீரை உற்சாகத்தின், தோழமையின் அங்கமாய்ப் பாடிவரும் பொது வழமைக்கு முற்றிலும் நேரெதிர் மனநிலையில் இவர் தேநீரைப் பார்க்கிறார், பாடுகிறார்.

மேலும், கவிதையின் பொருளை அழகாய் விரித்துரைத்துச் சென்று முற்றிலும் எதிர்பாராத ஒரு திருப்பத்தைக் கொண்டு கவிதையை முடிக்கும் அரவிந்தனின் கவிதைப் பாணி அலாதியானது. வகை மாதிரிக்கு,

"விட நெல்" என்ற கவிதையில், "இந்த நெல்மணி தாண்டி நீ பெண்மணியானால்" எனக் கடைசி அடி முகத்தில் அறையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும், "பாசமழை" எனும் கவிதை ஈற்றடியில், "எப்படி இருக்கிறாய்... நீயிருக்கும் முதியோர் இல்லத்தில் ?" எனக் கேட்கும் போதும் நாம் விதிர்விதிர்த்துப் போய்விடுகின்றோம். அவ்வாறே, "பெரிய கடவுள்" எனும் கவிதையில், கடவுளின் பண்புகளை எல்லாம் வரிசைப்படுத்திவிட்டு, ஈற்றில் "அன்பே தனிப்பெருங்கடவுள்" என்று முடிக்கும் போது நம் உள்ளம் நெகிழ்ந்துருகி விடுகின்றது.

பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு அவலங்களைப் பரிவோடும் ஆற்றாமையோடும் பேசும் பல கவிதைகள் இத்தொகுதியில் அமைந்துள்ளன. வாசித்து முடித்தவுடன் நம் உள்ளம் கனத்துப்போய் விடுகின்றது. அந்தவரிசையில், தெருவில் வீசியெறியப்பட்ட பெண் குழந்தையின் மனக்குமுறலை வரிகளாய்ச் சுமந்து வந்து நம்மைத் தகிக்கிறது, "தெருவோரத் தேவதை". ஒரு நாட்டார் பாடலைப் போல நயத்தோடு அமைந்த கவிதை அது. இவ்வாறாக, படிப்போர் உள்ளங்களைக் கட்டிப்போடும், கனக்கச் செய்யும், கதிகலங்கவைக்கும், உணர்ச்சிப் பெருக்கூட்டும் அனேக கவிதைகளை நாம் இத்தொகுதியில் காண்கிறோம்.

மானிடத் துயரையும் அவலங்களையும் அதிகமும் பேசும் இத்தொகுதியில் நகைச்சுவைக்கும் இடமின்றிப் போகவில்லை. ஆம்! "மூவேந்தர் காலத்தில் முகநூல் இருந்திருந்தால்" என்ற கவிதை, நம்மை வாய்விட்டுச் சிரிக்கவைக்கும் வகையில் அமைந்துள்ளது. இவ்வாறாக, இத்தொகுதியில் உள்ள கவிதைகளைப் பற்றிப் பேச அனேக விஷயங்கள் இருக்கின்றன. அவற்றை வாசித்து இன்புறுவதன் மூலம் கண்டடைவதே நல்லது.

இறுதியாக, இதில் உள்ள கவிதைகள், மரபுவழிப்பட்ட மொழிநடையில் கட்டிறுக்கமானவையாக அமைந்துள்ள காரணத்தினால், தேர்ந்த தமிழ் வாசகர்களை மட்டும் இவை சென்றடையுமே அன்றி, பரவலான பொது வாசகர் தளத்தினை இது சென்றடையுமா என்ற கேள்வி உள்ளார்ந்து எழத் தவறவில்லை என்பதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். என்றாலும், அருமையான ஒரு வாசிப்பனுபவத்தைத் தரும் இத்தொகுதியைத் தமிழுக்கு அளித்த கவி இளவலுக்கு மனமார்ந்த நல்வாழ்த்துக்கள். தமிழின் வளம் பெருக அவர் பணி தொடர்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 9. இலங்கையின் இக்பால், புலவர் அப்துல் காதர் லெப்பை [19131984]

"எனது சிந்தனைகள் பாமரர்களுக்காக எழுதப்படவில்லை. படித்துச் சிந்திப்பவர் களுக்காகத்தான் எழுதப்பட்டது" (அ.கா. லெ. 1.2.1980) என்று தற்துணிவோடு தனது எழுத்துக்களுக்குப் பாத்தியக்காரர்கள் யாவர் என்று பிரகடனப்படுத்தியவர், காத்தான்குடிப் புலவர் அப்துல் காதர் லெப்பை. இலங்கையின் புகழ்பெற்ற கவிஞராக அறியப்பட்ட அப்துல் காதர் லெப்பை அவர்கள் உண்மையில் பன்முக ஆளுமை கொண்டவர். மொழிபெயர்ப்பாளராகவும் கவிஞரா கவும் மட்டுமின்றி இலங்கையின் மிகச் சிறந்த சிந்தனையாளராய், தத்துவஞானியாய்த் திகழ்ந்தவர்.

இக்பால் இதயம் (1961), இறசூல் சதகம் (1966), மெய்ந்நெறி (1966), செய்நம்பு நாச்சியார் மான்மியம் (1967), முறையீடும் தேற்றமும் (1970), கார்வான் கீதம் (1974), நான் (1986), பாத்தும்மா சரிதை (1987), ஜாவித் நாமா (மொழிபெயர்ப்பு — 1989) தஸ்தகீர் சதகம் (1990), எதிரொலியும் மறையந்தாதியும் (2002), காலம் மறவாக் கவிதைகள் (2002), போராட்டச் சிந்தனைகள் (2011), பூரண வாழ்வு (2013) என்பன இதுவரை நூல்வடிவம் பெற்றுள்ள அவரது படைப்புகளாகும். இவற்றுள் மிக அண்மைக் காலத்தில் புலவர் அப்துல் காதர் லெப்பையின் மகனார் பேராசிரியர் அமீர் அலியினால் பதிப்பிக்கப்பெற்ற போராட்டச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகள் (2011), பூரண வாழ்வு (2013) எனும் இரு நூல்களைப் பற்றிய நமது மனப்பதிவே இக்கட்டுரையாகும்.

முதலில் "பூரணவாழ்வு" எனும் நூலை நோக்குவோம். அதில், எல்லாமாக ஐந்து கட்டுரைகளும் 20 கவிதைகளும் அடங்கியுள்ளன. நூலின் தலைப்பாக அமைந்த முதலாவது கட்டுரை சடத்துவம், இரசவாதம், ஆன்மீகம் ஆகிய மூன்று தனிப்பெரும் அம்சங்களும் ஒன்றிணைந்த வாழ்வே பூரணத்துவமானது என்றுகூறி, இம்மூன்று அம்சங்களின் இணைவுப் புள்ளியை, மிருக நிலையில் இருந்து மனிதனை வேறுபடுத்தும் பிரிகோடாகக் காட்டுகின்றது. அந்தக் கருத்து அந்நூலில் உள்ள அனைத்து ஆக்கங்களிலும் இழையோடிக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையில் உள்ளவாறு, சடத்துவம் — } இரசாவாதம் — } ஆத்மீகம் எனும் இந்தப் பிரிப்பு முறையிலும், அதனை அடுத்தடுத்துத் தொடர்புபடுத்தி விபரித்துச் செல்லும் முறையிலும் வெகு நுணுக்கமான ஒரு படிமுறை ஒழுங்கைத் தர்க்க ரீதியாகக் கட்டியெழுப்பி, அம்மூன்றும் ஒரே புள்ளியில் சந்திக்கும் நிலையிலேயே மனித வாழ்வு பூரணத்துவம் அடைகிறது என்பதை அப்துல் காதர் லெப்பை விளக்கியுள்ள பாங்கு மிக அற்புதமானது.

மனிதன் — விலங்கு என்ற பேதமின்றி, உயிரிகள் அனைத்துக்கும் அவசியமானதாக சடத்துவத்தை அடையாளப்படுத்தும் அவர், இரசாஞானத்தை விலங்குநிலையில் இருந்து மனிதனை வேறு படுத்தும் அடுத்தகட்ட நகர்வாக முன்னிறுத்துகிறார். என்றாலும், அந்த இரசாஞானம் மனிதனை போகத்தின்பால் தூண்டும் எனில், அது மீண்டும் பழைய சடத்துவ நிலைக்கே மனிதனைக் கொண்டு செல்லும் எனவும் எச்சரிக்கிறார்.

அதேவேளை, இரசாஞானத்தை நடுநிலைமையான போக்கில் கையாளும் நிலையில் பிறக்கும் அமைதியும் இன்பமும் ஒருவரின் உள்ளத்தில் நிஷ்களங்கத்தை ஏற்படுத்தி, ஆத்மீக உணர்வை மேம்படுத்தும் என்கிறார். அதாவது, இயற்கையின் அற்புதங்களை மனமாற ரசிக்க இரசாஞானம் அடிப்படையாகிறது. அந்த இயற்கை அற்புதங்கள் கடவுளுண்மையைக் காணும் சின்னங்கள், அத்தாட்சிகள் (signs) என்று குறிப்பிடுவதன் மூலம் அல்குர்ஆனின் மெய்ஞ்ஞானக் கருத்தைச் சாறுபிழிந்து தருகின்றார், அப்துல் காதர் லெப்பை அவர்கள். அல்குர்ஆனின் பல இடங்களில் அல்லாஹ் தன் படைப்புகள் பற்றி விபரித்து, நிச்சயமாக அறிவுடையோருக்கு அவற்றில் அத்தாட்சிகள் இருக்கின்றன; அவர்கள் சிந்திக்க வேண்டாமா என்று கேள்வி எழுப்புகின்றான். அதனையே நமது சிந்தனையாளரும் பூரண வாழ்வின் மையப்புள்ளியான இரசாஞானம் என்ற பகுதியில் விபரிக்கிறார். அந்த ஞானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மீக உணர்வை மேம்படுத்தும் விதத்தை மிக அழகாகச் சித்திரிக்கிறார். இதனை அவரது "ஓர் உண்மை" எனும் தலைப்பில் அமைந்த கவிதை வரிகளில்,

"இயற்கையின் மூலமே இறைவனை அறியலாம்
ஓவியனுக்கு ஓவியம் வேதம்
இறைவனுக்கு இயற்கையே வேதம்ஞ்
... ... ... ... ... ... ...
இறைவனருளிய வேதமொன்றிருந்தால்
இயற்கையேயன்றி வேறொன்றுமில்லை,
இயற்கை எவர்க்கும் பொதுவான வேதம்
எம்மொழியோர்க்கும் இயற்கை பொதுமொழி
மொழி பொதுவாகின் இறையும் பொதுவாம்,
ஓரிறையானால் ஒருமொழி வேண்டும்
அம்மொழி இயற்கை, அதுவே வேதம்
இயற்கையை ஆய்தலும் வணக்கமேயாகும்" (பூரணவாழ்வு ப. 111)

என வலியுறுத்துகின்றார்.

அதுமட்டுமல்ல, பரிசுத்த மனம், தார்மீக சிந்தனை, உள்ளார்ந்த பக்தி என்பவற்றை ஆத்மீகத்தின் முன் நிபந்தனைகளாக அவர் முன்வைக்கின்றார். இதனூடே மதம் என்பது சடங்காசாரங்களில் இருந்து விடுதலை பெற்று தத்துவரீதியில் புரிந்துகொள்ளப்படும் ஒன்றாக மாறவேண்டும் என்ற கருத்தை மிக அழுத்தமாகத் தெளிவுறுத்துகின்றார். இன்று உலகில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆத்மீகம் தத்துவ அடிப்படையில் புரிந்து கொள்ளப்படாமை மிக முக்கியமான ஒரு காரணம் என்று ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டுகின்றார்.

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள இரண்டு வகையான தொடர்புகள் குறித்து விபரிக்கும் இவர், வணக்கத்தை நேர்முகத் தொடர்பாகவும், சமூக நலனை மேம்படுத்தும் சமூக சேவையை மறைமுகத் தொடர்பாகவும் வரையறுக்கின்றார். இதனை இஸ்லாமியப் பரிபாஷையில் சொல்வதானால், இவர் ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் என்ற இரண்டு அம்சங்களையும் இவர் அழுத்தமாக முன்வைக்கிறார். தனக்கே உரிய பாணியில் ஆங்காங்கே பற்பல கேள்விகளை எழுப்பி, வாசகரின் சிந்தனையைத் தூண்டி அவர் தம்முடைய கருத்தை நிறுவும் விதம் மிக அலாதியானது, நயக்கத்தக்கது, தனித்துவமானது.

"சமூகவியற் பார்வையில் நடைமுறை இஸ்லாமும் நம்பிக்கைகளும்" என்ற அவரது கட்டுரையும் பலவகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவர் நடைமுறை இஸ்லாம் என்பதன் மூலம், மூலவடிவில் இருந்து விலகி தற்போது சமூகங்களில் கைக்கொள்ளப்பட்டுவரும் இஸ்லாத்தையே வரையறுக்கின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதில்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இமாம்கள் வரையறுத்த இஸ்லாம் நடைமுறை இஸ்லாம். தத்துவம் பற்றி அவர்கள் அக்கறை எடுக்கவில்லை. மனிதன் என்பதில் இரண்டு அம்சங்கள் உள. உடல், உளம் என்பவை. நடைமுறை இஸ்லாம் உடல் மனிதனுக்கே முக்கியத்துவம் கொடுத்து உள மனிதனை விட்டுவிட்டது. ஏனெனில், தத்துவம் உள மனிதனுக்கே அன்றி உடல் மனிதனுக்கல்ல. நடைமுறை இஸ்லாத்தில் விவேகம், சிந்தனை, அறிவு போன்ற உள வல்லபங்களைப் பற்றிப் பேச்சில்லை. மொழியறிவுகூட இதற்குத் தேவையில்லை. எந்த மொழியிலும் எழுத வாசிக்கத் தெரியாமல் இந்த இஸ்லாத்தைப் பின்பற்றலாம். எதையும் 'கேட்டுப்படி', 'பார்த்துப்பழகு' என்பதே இந்த இஸ்லாம் கையாளும் முறை. 'வாசித்து விளங்குதல்' என்று ஒன்றில்லை." (பூரணவாழ்வு, ப. 69) என்ற கருத்து ஆழ்ந்து நோக்கத்தக்கது. "போராட்ட சிந்தனைகள்" எனும் அவரது முன்னைய நூலில் உள்ள "மூல இஸ்லாமும் மாறுபட்ட இஸ்லாமும்" எனும் கட்டுரையிலும் இக்கருத்து உள்ளடங்கி இருப்பதைக் காணலாம். அதில் அவர்,

"சூனியத்திலிருந்து சிந்தனை நிகழ்வதில்லை. அதேபோல் மொழியறிவில்லாமலும் சிந்தனை தோன்றுவதில்லை. சிந்தனை நிகழ்வதற்குச் சென்றகாலச் சம்பவங்கள் பற்றிய அறிவு வேண்டும். அதோடு நிகழக்கூடிய சம்பவங்கள் பற்றிய மோதுதலும் வேண்டும். அப்போதுதான் சிந்தனை தொழிற்படும். முற்கூறிய இரண்டிலும் எவ்வித அக்கறையும் இல்லாதவர்களுக்குச் சிந்தனை தொழிற்படுவதில்லை" (போராட்ட சிந்தனைகள், பக். 101—102) என்கின்றார். ஆகவே, இவ்விரு நூல்களிலும் உள்ள கட்டுரைகளின் கருத்துக்களைத் தொகுத்துநோக்கும்போது, நமது சமூகச் சூழலில் நம்மை வழிநடத்தக்கூடிய மண்ணுக்கேற்ற சிந்தனை உதயமாவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பது புலனாகின்றது. இதனையே, பேராசிரியர் எம். ஏ. நுஃமானின் வார்த்தைகளில் கூறுவதானால், "நடைமுறை இஸ்லாத்தில் சிந்தனையாளர் தோன்றுவதற்கு இடம் இல்லை' என்பது அப்துல் காதர் லெப்பையின் அழுத்தமான கருத்து" ஆகும். (பூரணவாழ்வு. ப. XXI)

அப்துல் காதர் லெப்பையின் மேற்கண்ட கருத்து ஒரு தூரதரிசனம் என்றால், அது மிகையல்ல. தத்துவத்தில் இருந்து இஸ்லாம் பிரித்து நோக்கப்படும் ஒரு நிலையையே நாம் இன்று நடைமுறையில் காண்கின்றோம். பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்தவரையிலும், தத்துவம் கற்பது ஈமானை (இறை நம்பிக்கையை) பாதிக்கும் என்பதான ஆற்றுப்படுத்தல்கள் சீனியர் மாணவர்களால் புதியவர்களின் உள்ளங்களில் திணிக்கப் படுவதைக் காணலாம். நமது வரலாறு, நமது சமூகச் சூழல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றுக்கு அமைவாக மண்ணுக்கேற்ற சிந்தனை வடிவமைப்பு என்ற பேச்சுக்கே இடமின்றி, அரபு நாட்டுச் சிந்தனைகள் மொழிபெயர்ப்புகளின் வழியே இறக்குமதிச் சரக்காகக் கொண்டு வரப்பட்டமையையும், அவை நமது மண்ணுக்குப் பொருந்தாமல் துருத்திக்கொண்டு நிற்கும் அவலமான நிலையையும் கண் முன்னால் கண்டுகொண்டிருக்கின்றோம். இந்தப் பின்புலத்தில் நின்று பார்க்கும்போது அப்துல் காதர் லெப்பையின் சிந்தனையின் ஆழமும் தூரநோக்கும் நமக்குத் தெள்ளெனத் தெரியவரும்.

பூரணவாழ்வு எனும் இந்நூலில் "இக்பாலின் தத்துவம்: தனித்துவம்", "இக்பாலின் சிந்தனைகள்" எனும் மற்றுமிரு முக்கியமான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. முதலாவது கட்டுரையில் இக்பாலின் சிந்தனை வழிநின்று, மனித சக்தியின் மகத்துவத்தை விதந்துரைப்பதாய், அதுவே மனிதனின் தனித்துவமாய் முன்னிறுத்தப்படுகின்றது. அவர் அதிலே, இக்பாலின் "பாலே ஜிப்ரீல்" வரிகளை மேற்கோள் காட்டி,

"தனித்துவம் மனிதனால் உணரப்பட்டுச் செயலாற்றும் சக்தியின் அளவுக்கேற்ப அத்தனித்துவத்தின் அழியாத் தன்மை நிலைபெறும். 'நான்' என்பதை இத்தனித்துவம் எவ்வளவுக்குணர்ந்து இயங்க முற்படுகிறதோ, அவ்வளவுக்கு இதன் மகத்துவம் உலகில் ஒளிரும்." (பூரணவாழ்வு, ப. 37) என வலியுறுத்துகின்றார்.

மேலும், "முனைப்பான ஊக்கத்தையும், அவ்வூக்கத்தினால் தொழிற்படும் சக்தியையும் விட்டொழித்து ஒரு மனிதன் சமூகக் குருடனாய்த் தனித்திருந்து சிந்திப்பது ஈற்றில் அவனை ஒரு குறுகிய எல்லைக்குள் தள்ளிவிடுவதோடு, அவனது தனித்துவத்தின் வளர்ச்சியையும் அது மட்டந்தட்டிவிடும். மனிதன் இயக்கமற்ற ஒரு சடப்பொருளல்ல, தனித்துவம் அவனுள் மறைந்துநிற்கும் முனைப்பான ஒரு சக்தியாகும். இயங்கும்போதுதான் இச்சக்தி ஜொலிக்கும்." (பூரணவாழ்வு, ப.41) என்று தன் கருத்தை மேலும் தெளிவுறுத்துகின்றார்.

அத்துடன், "மனிதனின் தனித்துவம் இயங்காமை வாய்ப்பட்டு அப்படியே உலகத்திலிருந்து அடிபட்டுவிடுமாயின், அதன் நிலை மரணித்த நிலையேயன்றி வேறில்லை ... பல்வகைச் சக்திகள் நிரம்பிய இவ்வுலகில் மனிதன் தனது தனித்துவத்தின் சக்தியை வெளிப்படுத்தி அதனால் தனக்கும் சமூகத்துக்கும் பிரயோசனந் தரக்கூடிய காரியங்களைச் சாதிப்பதே இறைவனின் இலக்காகும்." (பூரணவாழ்வு, பக். 38, 39) என்ற கருத்துக்களினூடே மனிதனின் தனித்துவம் — சிந்தனை — இயக்கம் என்பவற்றுக்கிடையிலான உள்ளார்ந்த தொடர்பினை எடுத்துரைக்கின்றார் எனலாம். அவை எவ்வாறு ஒன்றையொன்று வலுப்படுத்தவும் வளப்படுத்தவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவும் என்பதையும், அவற்றுக்கிடையிலான சமநிலை பேணப்பட வேண்டியதன் இன்றியமையாமையையும் தன் எழுத்துக்களினூடே அவர் வலியுறுத்துகின்றார். சமூகத்தின் தேக்கநிலையை மாற்றி வீரியத்தோடும் உத்வேகத்தோடும் மேம்பாட்டை நோக்கியும் முன்னகர்வதற்கான அடித்தளம் யாதென்பதை அவர் தனது எழுத்துக்களின் வழியே அடையாளப்படுத்தியுள்ளார்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள மற்றொரு கட்டுரை, "இக்பாலின் சிந்தனைகள்". இக்கட்டுரையில் அப்துல் காதர் லெப்பை இலங்கையின் ஆரம்பகால முஸ்லிம்களின் கல்வி நிலை பற்றிய வரலாற்றை ஒரு முன்னுரை போலக் குறிப்பிடுகின்றார். வெற்றுச் சடங்காசாரமாக இஸ்லாம் உருக்கொண்ட விதம் பற்றியும் அதில் அவர் விபரிக்கின்றார். எடுத்துக்காட்டாக,

"உயிருள்ளவர்களுக்கு வழிகாட்டியாக அருளப்பட்ட வேதம், உயிரற்ற மையித்துகளுக்கு ஓதி, ஹதியாச்செய்யும் வேதமாக மாற்றப்பட்டது. இதுதான் முல்லாக்கள் குர்ஆனுக்குக் கொடுத்த கடைசி அடி. அத்தோடு குர்ஆன் முஸ்லிம்களை விட்டும் விலகிவிட்டது. இதுதான் முஸ்லிம்களின் இன்றைய வீழ்ச்சிக்கு மூலகாரணம். அன்றிலிருந்து முஸ்லிம்கள் குர்ஆன் போதகர்கள் என்ற நிலையிலிருந்து குர்ஆன் வியாபாரிகள் என்ற நிலைக்கு மாறிவிட்டனர்." (பூரணவாழ்வு. ப. 62) என்ற காரசாரமான வரிகளைக் குறிப்பிடலாம். குர்ஆனின் பெயரால் மக்களைப் பிழையாக வழிநடத்தி, சதாசர்வ காலமும் அவர்களை உணர்ச்சிவசப்பட்ட நிலையிலும் வெற்றுப் பெருமித மனோநிலையிலுமே வைத்துக்கொண்டு அதன் மூலம் பிழைப்பு நடத்தும் போலிகளின் முகமூடிகளைக் கிழித்தெறியும் மிகத் தீவிரமான சமூக விமர்சனமாக இவ்வரிகள் அமைந்துள்ளன என்பதில் ஐயமில்லை.

அதே கட்டுரையில், அறிவின் பெருக்கத்தாலும் அறிவியல்—தொழினுட்பத் துறைகளின் விரிவினாலும் தேடலின் தாகம் மிகைத்துவிட்ட இளம் சமுதாயத்தின் தவிப்பினைச் சாந்தி செய்யும் ஞானியாக அல்லாமா இக்பாலை அவர் அடையாளப்படுத்துகின்றார். அவரது சிந்தனைகள் எவ்வாறு மனிதகுல மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் வல்லமை வாய்ந்தன என்பதைத் தனது கட்டுரையில் ஆணித்தரமாக நிறுவுகின்றார்.

"மனிதனின் வாழ்வு தற்காலிகமானது. கொஞ்ச காலமே மனிதன் பூமியிற் தங்குகிறான். அப்பால் வருகிறவர்களுக்கு அவன் தனது இடத்தை விட்டு விலகி விடுகிறான். இந்த நிலையில் இவனுக்கு எதையும் சொந்தம் கொண்டாட முடியாது. இது இயற்கை. இதனாலேதான் இறைவன் இப்பிரதிநிதிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் அமானிதம் என்ற முறையில் தற்காலிகமாகவே கொடுத்துள்ளான். பூமி இறைவனைப் பொறுத்தவரை தனியுடமை; நிரந்தரம். மனிதனைப் பொறுத்தவரை பொதுவுடமை; தற்காலிகம்" (பூரணவாழ்வு. ப. 64) என்று கூறும் கவிஞர் அப்துல் காதர் லெப்பை, தன் கருத்துக்கு வலுசேர்க்கும் வகையில் ஜாவித் நாமாவில் உள்ள அல்லாமா இக்பாலின் வரிகளை மேற்கோள் காட்டுகின்றார்.

இந்நூலில் இறுதியாக இடம்பெற்றுள்ள மற்றொரு சிறப்பான கட்டுரை "இலங்கை முஸ்லிம்கள்: சில குறிப்புகள்" எனும் தலைப்பில் அமைந்துள்ளது. இலங்கை முஸ்லிம்களின் நிலை பற்றிப் பல்வேறு தளங்களில் விமர்சனக் கண்ணோட்டத்துடன் இக்கட்டுரை பேசுகின்றது.

அப்துல் காதர் லெப்பை அவர்கள், கல்வியின் அடிப்படையில் இலங்கை முஸ்லிம்களை நான்கு பிரிவினராகவும் பொருளாதார ரீதியில் மூன்று பிரிவினராகவும் வகுத்துத் தமது கட்டுரையைத் தொடர்கின்றார். இதில், புரோகிதம் எவ்வாறு அடிநிலையில் உள்ள பாமர மக்களைத் தம்வயப்படுத்திக்கொண்டு, சிந்தனைத் திறமிக்க நான்காம் பிரிவினரை சமூக விரோதிகளாய்க் கட்டமைத்து சந்தேகக் கண்கொண்டு நோக்கியும் நோக்கச் செய்யவுமாகத் தொழிற்படுகின்றது என்பதை மிக அழகாக அவர் விபரித்துச் செல்கின்றார். அதிலுள்ள அடிப்படைத் தர்க்கம் முஸ்லிம் சமூகத்துக்கு மட்டும் உரியதல்ல என்பதுதான் இதில் உள்ள சுவாரஷ்யமான அம்சம் எனலாம். அதனை அவரது வரிகளிலேயே நோக்குவோம்:

"பொருளாதார அடிப்படையில் முதலாவது கூட்டம் சுரண்டும் கூட்டம். இரண்டாவது முதலாவதற்கு வால்பிடிப்பதும் சுரண்டுவதும். மூன்றாவதோ சுரண்டப்படும் கூட்டம். இந்தக் கடைசிக் கூட்டம் முந்திய இரண்டாலும் நசுக்கப்படும் கூட்டமா கவே இன்றுவரை இருந்திருக்கிறது. மார்க்கம் முதலாவதற்குச் சலுகை, இரண்டாவதற்குப் பிழைப்பு, மூன்றாவதற்கு அடக்குமுறை. இந்த மூன்று கூட்டங்களுக்கும் தற்காலக் கல்வி சுத்த சூன்யம். எஜமானர், மேய்ப்பர், மந்தைகள் என்று இப்பிரிவுகளை மத்தியகால அடிப்படையில் வைத்துக் கூறுவதே மிகப் பொருத்தம். இன்றுள்ள மத்திய வகுப்பினர் அன்றில்லை. ஆசிரியர், பட்டதாரிகள், மற்றும் உயர்தரக்கல்வியில் முன்னேறியோர் சென்ற இருபத்தைந்து வருடங்களுக்குள் உருவானவர். இவர்களை மேற்காட்டிய மூன்று பிரிவினரும் சந்தேகக்கண் கொண்டே இன்றும் நோக்குகின்றனர்." (பூரண வாழ்வு, பக்.. 102—103). ஆசிரியர்கள் குறித்து இவ்வாறு நேர்மறையாகக் கூறும் அதேவேளை, "மந்தைகளை விட்டுச் சற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகி நிற்கக்கூடிய சக்தி இருப்பினும், அறிவுத் தெளிவின்மை காரணமாக எதிலும் ஓர் உறுதியற்ற நிலையிலேயே இவர்கள் காணப்படுவர். (இன்றுள்ள முஸ்லிம் ஆசிரியர்களை இப்பிரிவுக்குள் அடக்கலாம்.) (பூரணவாழ்வு, ப.101)" என்று விமர்சிக்கவும் அவர் தயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக, சமூகத்தில் மக்கள் மத்தியில் காணக்கூடிய சமூகப் படித்தரங்கள், அவற்றின் இயல்புகள், சமூகத் தேக்க நிலையில் அவை எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது குறித்த தமது பார்வையைத் தீவிரமான சமூக விமர்சனமாகக் காய்தல் உவத்தல் இன்றி முன்வைக்கின்றார்.

இக்கட்டுரை இன்னொரு வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். குறிப்பாக, இக்கட்டுரை மூலம் நாம் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றியும் அவர்களின் வரலாற்றெழுதியல் குறித்தும் அவரது கூர்மையான பார்வையையும், தூரநோக்கையும் அடையாளம் காணலாம். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு ஒரு நூலாக எழுதப்படவேண்டும் என்றும் அது அதிகாரபூர்வமான ஆய்வுகளுடன் அமையவேண்டும் என்றும் ஆணித்தரமாக வலியுறுத்துகிறார். "இப்படியான ஒரு வரலாற்று முக்கியத்துவமின்றி முஸ்லிம்கள் இந்நாட்டில் உரிமையுடன் வாழ்வது மிகக் கஷ்டம். அந்நியர் ஆட்சியின்கீழ் இது தேவைப்படாமல் இருந்திருக்கலாம். நாடு சுதந்திரம் பெற்ற பிறகு இதன் தேவை மிக இன்றியமையாதது. எக்காலமும் ஒரு சலுகைச் சமூகமாக இம்முஸ்லிம்கள் இருக்க முடியாது. உரிமை என்பதென்ன? அது அரசியற் சட்டரீதியானது" (பூரணவாழ்வு, ப.103) என்று அவர் கூறுகின்றார்.

இன்றைய இலங்கை முஸ்லிம் சமூகத்தின் நிலையென்ன? அவரது அன்றைய எதிர்வுகூறல் இன்று பலித்துள்ளது என்பது மிகத் தெளிவல்லவா? எனவே, சட்டபூர்வ ஆவணங்களை அடியொட்டி, இனியேனும் முஸ்லிம்களின் வரலாறு ஒரு நூலாக எழுதப்பட வேண்டும் என்ற உந்துதலை இவரது எழுத்து நமக்குத் தருகிறது. இதனை நாம் அவரது எழுத்தின் வெற்றி என்றும் கொள்ளலாம்.

இவ்வாறே முஸ்லிம்களின் கல்விநிலை குறித்தும் அது உலகக் கல்வி — மார்க்கக் கல்வி என்று பிரிக்கப்பட்டதால் நமது சமுதாயம் அடைந்த வீழ்ச்சி பற்றியும் ஆராய்ந்து, கல்வி விழிப்புணர்ச்சியை அவர் ஊட்டுகின்றார். முஸ்லிம் சமூகத்தின் வீழ்ச்சி நிலையை மனக்குமுறலோடும் தர்க்கபூர்வமாகவும் எடுத்துக்காட்டுவதன் மூலம் அவர் சமூகத்துக்கு விழிப்புணர்ச்சியூட்ட விழைகின்றார். இதனை,

"கல்வியென்பது பரந்தது. உலகமுள்ளளவும் அது பரந்து விரிந்து செல்லும் பான்மையது. இக்கல்வியை வளர்ப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்திலுள்ள சகல இன, மொழி, மத மக்களும்தான். எனவே, இக்கல்வியைப் பெறத் தெண்டிப்பது மனித இலட்சணத்தில் மிக முக்கியமான ஒன்று. இதை முஸ்லிம்கள் விளங்கவேண்டும்." (பூரணவாழ்வு, ப.106) என்று குறிப்பிடுகின்றார். இதே கருத்தினை இந்நூலில் உள்ள "முஸ்லிம் நாடுகள்" என்ற கவிதையிலும் காணலாம். இதற்கு முந்தைய "போராட்ட சிந்தனைகள்" நூலில்,

"கல்வியில் விஞ்ஞானம், கலை என இரு பிரிவுண்டு. மதம் கல்வியில் ஒன்று என்பதே தவிர, மதக் கல்வி என ஒன்று இருக்கிறதா?" என்று கேள்வி எழுப்புகின்றார். அதுமட்டுமன்றி,

"குர்ஆன் கூறும் கல்வி குர்ஆனுக்கு வெளியிலேதான் இருக்கிறது. குர்ஆனில் இல்லை. குர்ஆன் ஒரு வழிகாட்டி மட்டுமே. மனிதன் தனது புலனறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு ஆகிய மூன்றையும் கொண்டு இறைவன், பிரபஞ்சம், சிருஷ்டி ஆகியவற்றை ஆராய்ந்து மறைந்துகிடக்கும் புதுமைகளை வெளிப்படுத்த வேண்டும். இதுதான் *Exploration*என்பது. ஆரம்ப முஸ்லிம்கள் வெளிப்படுத்திய கல்வி இதுதான். மருத்துவம், இரசாயனம், வானியல், கணிதம், இசை, சித்திரம் என இன்னும் பல துறைகளில் அவர்கள் முன்னோடிகளாய் இருந்தனர். கலையில் மதம் ஒரு பகுதியே தவிர, அதுவே கல்வியென்பதல்ல" (போராட்ட சிந்தனைகள், ப. 148) என்று திட்டவட்டமாகத் தெளிவுறுத்தி தன் கேள்விக்குத் தானே பதிலுமிறுக்கின்றார்.

இவரது கட்டுரைகளில் உள்ள பேசுபொருளையே இவரது அனேகக் கவிதைகளும் கருப்பொருளாகக் கொண்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். பொதுவாக, தியாகத் திருநாள் பற்றி எத்தனையோ கவிதைகள் வந்திருக்கின்றன. ஆனால், கவிஞர் அப்துல் காதர் லெப்பை அவர்களின் கவிதையின் உள்ளடக்கம் சற்று வித்தியாசமானது. எடுத்துக்காட்டாக, "தியாகம்" எனும் கவிதையில், தியாகத் திருநாளை விளித்து, தியாகங்கள் எவையெவை என ஆன்மீக நோக்கில் பட்டியலிடத் தொடங்கியவர்,

"நாட்டுக் குழைப்பது தியாகம் அந்த
நாட்டின் நலனை மதிப்பது தியாகம்
பாட்டாளி சிந்திய வேர்வை அதில்
பசுமை விளைந்திட உதவுதல் தியாகம்"

என்று வரிசைப்படுத்தி இறுதியில்,

"தியாகத்தில் வாழ்பவன் முஸ்லிம் அந்தத்
தியாகத்தில் வந்ததே நபிதந்த இஸ்லாம்
தியாகமே எங்களின் ஜீவன் அந்தத்
தியாகமே முந்தையோர் தந்த முதுசம்."

என்று ஒரு முஸ்லிம் எப்படி வாழ வேண்டும் என அறிவுறுத்துகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக, இறைவணக்கம், சமூகத் தொண்டு என்ற இரண்டு அம்சங்களையும் ஒரே புள்ளியில் தொடர்புபடுத்துவதில் சடத்துவம், இரசாஞானம், ஆத்மீகம் ஆகிய மூன்றின் சமநிலைப் பண்பையும் நிறுவி, பூரண வாழ்வின் இரகசியம் இதுதான் என்பதைக் காட்டுகிறார். உலக முழுமைக்குமாய் அது பொதுமைப் படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை, நமது பொறுப்பை, கடமையை நினைவூட்டுகின்றார். அவ்வாறு நினைவூட்டும் போது, பின்வருமாறு ஒரு கேள்வியை எழுப்பிப் பதிலும் தருகின்றார்:

"வாழ்வென்றால் என்ன? அது முழுவதும் செயல்மயம். எண்ணமல்ல. ஏன்? சுவர்க்கம், நரகம் என்பன செயலின் பிரதிபலன். அப்படியானால், நீ செயல்படாமல் இதைத் தீர்மானிப்பதெப்படி? இந்த நிலையில் நீ மனிதனல்ல; கல்" என்கிறார். தம் கருத்தை ஆழமாய் வலியுறுத்துமுகமாக அல்லாமா இக்பாலின் ஜாவீத் நாமா தமிழ் மொழிபெயர்ப்பில் இருந்து இவ்வாறு மேற்கோள் காட்டுகின்றார்:

"ஓவ்வொரு கணமும் உருமாறும் பிரபஞ்சம்
ஓயாப் புரட்சியில் உருளுவதே வாழ்வாகும்
புத்துலகுக்காகப் புதுப்புதுத் தேடுதல்கள்
நீங்காத ஆர்வம், நிறைந்ததே வாழ்வாகும்."

அவ்வாறே, "மனிதன் தன் நிலையைத் தானே மாற்றிக் கொள்ளாதவரை இறைவனும் மாற்றுவதில்லை" என்ற அல்குர்ஆனின் கருத்தை மனிதனின் இயக்கம், அவனது தனித்துவம், பொறுப்பு என்பவற்றின் அடியாய் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். மெய்யியல் துறைப் பேராசிரியர் அனஸ் ஓர் உரையில் குறிப்பிட்டது போல, 'கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் எழுத்துக்களில் அல்லாமா இக்பாலின் சிந்தனைத் தாக்கம் அபரிமிதமானது. நவீன முஸ்லிம் உலகின் சிந்தனைத் தேக்கத்தை உடைக்கும் ஆற்றல் இக்பாலிடம் இருப்பதாய் அவர் மிகத் திடமாக நம்பினார்.' அதனைத் தமது எழுத்துக்களில் அவர் மிக ஆணித்தரமாக வலியுறுத்துவதை நாம் காணலாம். சிந்தனையிற் சுதந்திரமும், செயலிற் புதுமையும் ஒரு தனி மனிதனை மட்டுமல்ல, ஒரு சமூகத்தையே தூக்கி எழுப்பிவிடுகிறது என்பதை உணர்த்தும் இக்பாலின் வரிகளை அவர் விதந்துரைப்பதன் மூலம் இதனைப் புரிந்துகொள்ளலாம்:

"சிந்தனையோடு செயல் சேரின்
சிறந்து புரட்சி நின்றாடும்
உந்தும் ஜீவ உணர்வதனால்
உறங்கு மலர்ச்சி துள்ளியெழும்!
அந்தமிலாத புதுமையெலாம்
அணையும் சமூக வாழ்வினிலே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திய கல்லும் முத்தாகச்
சிறந்து மாறும் அற்புதமே!"

(பாலே ஜிப்ரீல், பூரணவாழ்வு, பக். 46,47)

என்றும் நவ உலகம், நவசிந்தனை ஆகியவையே எனது குறிக்கோள், இதற்கு வழிகாட்டி அல்குர்ஆன் என்றும் அவர் மேற்கோள் காட்டும் அல்லாமா இக்பாலின் கவிதை வரிகளின் தமிழ் மொழிபெயர்ப்பு இதற்குச் சிறந்த சான்றாகும்.

அப்துல் காதிர் லெப்பையின் "போராட்டச் சிந்தனைகள்" நூலில், "பெண்களின் இன உரிமைப் போராட்டம், கலாசாரம், மூல இஸ்லாமும் மாறுபட்ட இஸ்லாமும், லோகாயுதமும் ஆத்மீகமும், மதபோதனையும் சாதனமும், சிந்திக்கும் ஆற்றல் எனும் தலைப்புகளில் அமைந்த ஆறு கட்டுரைகளும், அவரது சிந்தனைத் துணுக்குகளும் (43), "நான்" எனும் கவிதையும் உள்ளடங்கியுள்ளன. இக்கட்டுரைகள் ஒவ்வொன்றுமே முக்கியமானதாகும். கலாசாரம், சமூகம், மதம், மொழி, இலக்கியம், கலைகள், பெண்ணின் நிலை என தாம் பேச எடுத்துக்கொண்ட ஒவ்வொரு விடயத்தையும் வரலாற்று நோக்கில் அணுகித் தற்போதைய நிலையோடு சீர்தூக்கிப் பார்த்து, இடையிடையே கேள்விகளை எழுப்பி, அலசி ஆராயும் பாங்கு அப்துல் காதர் லெப்பையின் எழுத்துக்களுக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

அப்துல் காதர் லெப்பையின் கட்டுரைகளில் மிக முக்கிய மானதும் அதிசிறப்பு வாய்ந்ததுமான கட்டுரையாக, "பெண்களின் இன உரிமைப் போராட்டம்" எனும் கட்டுரையைத் துணிந்து அடையாளப்படுத்தலாம். காரணம், அறிவியல் தொழினுட்பத் துறைகள் மேலோங்கிவிட்ட இன்றைய காலகட்டத்தில்கூட பெண்களின் விடுதலைப் போராட்டம் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்துவரும் சூழலில், 1963 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இந்தக் கட்டுரை மகத்துவம் மிக்கதே என்பதில் எந்தவோர் ஐயமும் இல்லை.

எந்த ஒரு சமூகத்தினதும் மகத்துவத்தை அச்சமூகம் பெண்களை எவ்வாறு நடத்துகின்றது என்பதை வைத்து மட்டிடலாம் என்பது ஆன்றோர் வாக்கு. அந்தவகையில், புலவரும் சிந்தனையாளருமான அப்துல் காதர் லெப்பை அவர்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் முஸ்லிம் சமூகத்தில் பெண்களின் நிலையைப் படம்பிடித்துக் காட்டும் வகையிலும், மூல இஸ்லாம் பெண்ணுக்களித்த உயரிய நிலையில் இருந்து அது எவ்வாறு பிறழ்ந்துபோய்விட்டது என்பதையும் தனது கட்டுரை மூலமும், கவிதைகள் மூலமும் பேசத் தயங்கவில்லை. தினகரன் பத்திரிகையில் பிரசுரமான "ஆயிஷாவின் உலகம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் கவிதை, தன் வீட்டு வளவை விட்டு வெளியே வராத, உலகம் தெரியாமல் வீட்டோடு முடங்கிப் போயுள்ள அன்றைய பெண்ணின் சமூகநிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது எனலாம்.

அப்துல் காதர் லெப்பை அவர்கள் "பெண்ணின் இன உரிமைப் போராட்டம்" எனும் அக்கட்டுரையில், "ஏன் இந்தப் போராட்டம்?" என்ற கேள்வியோடு தனது தேடலைப் பகிர முற்படுகின்றார். உடலமைப்பை முன்வைத்து பெண்ணை வலிமை குறைந்த இனம் என்று சொல்லப்படுவதன் அடிப்படையில் ஆண் — பெண் உயர்வு தாழ்வு நிர்ணயிக்கப்படுவது எவ்வகையிலும் நியாயமற்றது என்பதைத் தர்க்கபூர்வமாக நிறுவ முற்படும் லெப்பை அவர்கள், "பெண்ணிலும் ஆண் வலிமையிற் கூடியது. ஆனால், இவை இரண்டிலும் யானை வலிமையிற் கூடியது. ஆகவே, யானை உயர்ந்த இனமா?" என்று கேள்வி எழுப்புகின்றார். மேலும், வரலாற்று ரீதியாகப் பெண்ணின் நிலைமாற்றங்கள் குறித்து ஆராய முற்படுகின்றார். பெண் எவ்வாறு அடிமையாக்கப்பட்டு, அதனை மனப்பூர்வமாக ஏற்று நடப்பதற்குப் பயிற்றுவிக்கப்பட்டாள் என்பதைக் காய்தல் உவத்தல் இன்றிக் கடும் விமர்சன நோக்குடன் அலசுகின்றார். பெண்ணின் விடுதலையைப் பற்றிக் குறிப்பிடும்போது,

"பெண்ணினம் விடுதலை பெறவேண்டிய பல சம்பவங் களுண்டு. கல்வி கற்காவிட்டால் எந்த விடுதலையையும் பெற முடியாது. இந்த மூடக்கொள்கைகளிலிருந்து முதலில் விடுதலையாக வேண்டும். பெண் அச்சம் கொண்டவளென்று சொல்லப்படுகிறது. இந்த அச்சம் சம்பிரதாயங்களால் ஆக்கப்பட்டதே தவிர, இயற்கையில் அவள் அப்படியிருக்கவில்லை. ஆணின் அதீத அடக்குமுறையால் அவள் அச்சத்தின் இருப்பிடமாக ஆகிவிட்டாள். இந்த அச்சம் அவளை என்றுமே அடிமைபோல் ஆக்கிவிட்டது. அதற்கு அனுசரணையாக மூடக்கொள்கைகள் உருவாகின. இவை அவளை என்றுமே எழும்ப முடியாதபடி அப்படியே ஆழ்த்திவிட்டன. உயிர்த்துவ இயலின்படி தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் ஒரு துணிவு அவளுக்கு இருந்தேயாக வேண்டும். இல்லையேல் இந்த இனம் என்றோ அழிந்திருக்கும். தற்காப்புத் துணிவு என்பது எல்லா ஜீவராசிகளுக்கும் உண்டு. இது பெண்ணினத்துக்கு மட்டும் இல்லாமற் போய்விட்டதா? இல்லை. இது ஆணின் இன ஆதிக்கத்தினாலும் மூடக் கொள்கைகளினாலும் சம்பிரதாயங்களினாலும் மூடி மறைக்கப்பட்டுவிட்டது. இவ் விலங்குகள் நீங்கி மனம் மாறுகிறபோது இத்துணிவு தானே வந்துவிடும்." (போராட்டச் சிந்தனைகள், ப. 25) என்று மிகவும் ஆணித்தரமாகத் தமது கருத்தினை வலியுறுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கட்டுரையில் மகாகவி பாரதியின் கவிதை வரிகளையும் மேற்கோள்காட்டி உணர்ச்சிப் பெருக்குடனும் தர்க்கரீதியாகவும் தமது கருத்தைத் தெளிவுறுத்துகின்றார்.

"அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய குணங்கள் பெண்ணுக்கு ஆணைவிட முனைப்பாக இருக்கலாம். ஆனால், இவை விலங்காக மாறிவிடக்கூடாது. இந்த விலங்குகளுக்குக் கீழ் பெண் ஒரு கைப்பொம்மையாக மாறிவிடுவாள். கைப்பொம்மைக்கு ஆட்டுபவனின் இலக்கைத் தவிர வேறோர் இலக்கும் தனிப்படக் கிடையாது. வெறும் அலங்காரப் பிண்டமாக மாற மாற பெண் ஆணின் பொம்மையாகவே சதா ஆகிவிடுவாள்." *(ப. 39)* என்று எச்சரிக்கின்றார்.

1960களில் இப்படியான முற்போக்குக் கருத்துக்களை இலங்கை முஸ்லிம் அறிஞர் ஒருவரின் எழுத்துக்களில் காணக்கூடியதாக இருப்பது பேராச்சரியம் தரக்கூடிய ஒன்றுதான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நிச்சயமாக அவை விதந்துரைக்கத் தக்கவையே!

பெரும் புலவராக அறியப்பட்டிருந்த அப்துல் காதர் லெப்பையின் இச்சமூக சீர்திருத்தச் சிந்தனைகள் மிகவும் காலம் கடந்தே நூலுருப்பெற்று நம்மை வந்தடைந்துள்ளமை உண்மையில் இலங்கைச் சமூகத்துக்கு நேர்ந்த பேரிழப்பாகும். என்றாலும், தாமதித்தேனும் தமது தந்தையின் எழுத்துக்கள் சமூகத்தை வந்தடைய வழியமைத்த அன்னாரின் புதல்வர் பேராசிரியர் அமீரலியும் அதற்குத் துணை நின்ற சகோதரர்கள் முஹம்மது ஜலீல், அப்துல் ஹமீத் ஆகியோரும் நமது நன்றிக்குரியோரே.

இலங்கையின் இக்பால் எனப் போற்றப்படத்தக்க அப்துல் காதர் லெப்பை அவர்களின் ஆழமானதும் தீர்க்கமானதுமான சிந்தனைகள் யாவும் நம் சமூகத்தில் பரவலாகக் கலந்துரையாடப் பட்டு, சமூகத்தில் புரையோடிப்போயுள்ள சீர்கேடுகளும் குறைபாடுகளும் இனங்காணப்பட்டு களையப்படுவதற்கு ஏற்ற வழிகாட்டியாகப் பயன்படுத்தப்படல் வேண்டும் என்பதே நம்முடைய எதிர்பார்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 10. நீட்சி பெறும் சொற்கள்

அமைதியான நீர்ப்பரப்பில் ஒரு கல்லை விட்டெறிந்தால் ஒரு திடீர் அதிர்வோடு அந்த அமைதி கலைந்து அலையலையாய்ப் படர்ந்துசெல்வதுபோல் சில எழுத்துக்கள் நம் மனதுக்குள் பெரும் அதிர்வை, எண்ண அலைகளை எழுப்பிவிடுகின்றன. அத்தகைய ஒரு படைப்பே பேராசிரியர் சி. மௌனகுருவின் சார்வாகன். 2000 ஆம் ஆண்டு எழுதப்பட்ட இக்குறுநாவலை முகநூலினூடே வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மகாபாரதத்தில் வரும் ஒரு கதாபாத்திரத்தை வைத்து, இக்காலத்துக்கும் பொருந்துமாப்போல் மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட ஓர் அற்புதமான கதை, அது. அதனைப் பலமுறை வாசித்து முடித்துவிட்ட பின்பும், அப்படைப்பு என்னுள் எழுப்பிய உணர்வலைகள் பலதிறப்பட்டவை. வாசித்து முடித்த சொற்களின் கனதியால் எழுந்த எண்ணங்கள் ஏராளமான புதுச் சொற்களை உருவாக்கியபடியே இருந்ததை உணர்ந்தேன். ஒரு புராதனக் கதையின் ஒரு கூறாய் எழுந்த இக்குறுநாவல், தான் கதைக் களமாகக் கொண்டிருக்கும் கௌரவர் — பாண்டவர் அதிகார மோதல் தொடர்பான நேரடி நிகழ்வுகளுக்கு அப்பால், நம் காலத்துக்கு மிக இயல்பாகப் பொருந்தி வரக்கூடிய சமூக, அரசியல் விமர்சனம் கொண்டதாகவும், நவீன கால அரசியலை மறுவாசிப்புச் செய்வதான உணர்வை எழுப்புவதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதனைப் பகிர எண்ணியதின் விளைவே இக்கட்டுரையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களையும் அவர்தம் வாழ்வையும் குவிமையப்படுத்தி, அவற்றையே முதன்மைப்படுத்தி, சுவர்க்கம், நரகம், தேவர் என்னும் அனைத்தையும் மறுதலிக்கும் இந்தியாவின் பழம் சிந்தனை மரபுகளில் ஒன்று சார்வாகம். மகாபாரதப்போர் நடைபெறுமுன்பும் அது நடைபெறப்போகும் தருணத்திலும் அதற்குப் பின்பும் போரின் தீங்குகளை எடுத்துக்கூறி, அதிகார வர்க்கங்களின் ஆதிக்க மோகத்துக்கு விலைபோய் பலிக்கடாவாகும் மக்களை எச்சரிக்கும் மனிதநேயமும் அறிவுத் தீட்சண்ணியமும் வாக்கு வன்மையும் நிரம்பியவனே சார்வாகன். அவனே இக்கதையின் நாயகன். மகாபாரதக் காலத்தே அன்றைய கலகக் குரல்களின் மொத்த வடிவமாய் நின்று அதிகாரத் தரப்பைக் கேள்விகேட்கும் மக்கள் பிரதிநிதியாய் கதாசிரியர் சார்வாகனை முன்னிறுத்துகின்றார்.

இக்குறுநாவலின் முதலாவது பகுதி குருஷேத்திரப் போர்க் களத்தைச் சித்திரிக்கின்றது. போர் ஓய்ந்தபின் இரத்தமும் நிணமும் பிணமும் நிறைந்த போர்க்களத்தின் கோரக்காட்சியை மயிர்க்கூச்செறியும் வகையில் ஆசிரியர் வர்ணித்துள்ளார். அதனை வாசித்துச் செல்லும் நம் மனக்கண் முன்னே கலிங்கத்துப் பரணியின் யுத்தகளக் காட்சியும், கலிங்கப் போர்க்களக் காட்சியும் மட்டுமின்றி முள்ளிவாய்க்காலும்கூட வந்துபோவதைத் தவிர்க்க முடியவில்லை.

யுத்தத்தினால் நேரும் உயிரிழப்பு, பொருளிழப்பு, அங்கவீனர் களின் அவலம், அனாதைகளாய், அனாதரவான நிலையில் நிற்கும் குடும்பங்கள் என்பவற்றை ஆசிரியர் காட்சிப்படுத்தும் விதம் முப்பது வருடகால யுத்தம் பற்றிய செய்திகளையே கண்டும் கேட்டும் சோர்ந்து நொந்திருந்த மனதுக்கு மிக நெருக்கமானதாகவே உள்ளதில் ஆச்சரியம் ஏதுமில்லை எனத் தோன்றுகின்றது. சமாதானத்துக்கான யுத்தம், ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான யுத்தம் என்று எவ்வளவுதான் நியாயங்கள் கற்பிக்கப்பட்டாலும், போர் எங்கு நடந்தாலும் யாருக்கிடையில் நிகழ்ந்தாலும் அது குரூரமானதுதான். அங்கே பலிக்கடாக்களாவது மக்கள்தாம் என்பதை இந்நாவல் நெடுகிலும் ஆசிரியர் வலியுறுத்திச் செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

“அடே முழு மூடா! யுத்தம் என்றாலே அதர்மம் தானடா” என்ற சார்வாகனின் கூற்றையும்,

“தோல்வியுற்றோர் முகமெல்லாம் சோர்ந்து கிடந்தன. வெற்றி பெற்றோரும் சோர்ந்தே இருந்தனர். வெற்றியோ தோல்வியோ போர் எனில் மிஞ்சுவது என்ன? இழப்பு, துயரம், சோகம் இவைதானே.” எனும் கதாசிரியர் கூற்றையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், ஆதிக்கச் சக்திகளின் அதிகாரப் போட்டியின் விளைவான யுத்தம் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் அடியாகத் தீர்வை நோக்கி நகர்வதை விரும்பாமல், அந்த யுத்தத்தின் மூலம் ஆதாயம் தேட முனைவோர் அதனைப் பல வகையிலும் நியாயப்படுத்தி, மக்கள் மனங்களில் தமக்குச் சாதகமான மனநிலை மாற்றத்தை விதைக்கின்றனர். இதனையே,

"அனைத்துச் செயற்பாடுகளுக்கும் அதிகாரமே அடிநாதம். ஆளும் கூட்டத்தினர் அதிகாரத்தை, கையில் எடுத்துக் கொள்கிறார்கள். அறிஞர்களும், இலக்கியங்களும், மதங்களும் அதிகாரத்திற்குச் சார்பாகவேயுள்ளனர். தம் கருத்துக்களால் மக்கள் மனதிலே அதிகாரத்தை ஞாயப்படுத்தும் மனோநிலையை உருவாக்கி விடுகிறார்கள். அதிகாரம் சார்ந்த கருத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. உருவாக்கப்பட்ட கருத்துக்களுக்கு மக்களும் அடிமைகளாகி விடுகிறார்கள்" என்ற வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

உண்மையில், இந்த நிலைமை அன்றைக்கு மட்டுமானதா என்றால், இல்லை. இன்றைய நூற்றாண்டிலும் இதுதான் நிலை. உலகின் ஏக வல்லரசாகத் திகழும் கனவில் உலகம் எங்கிலும் யுத்தத்தை ஏற்றுமதி செய்யும் அமெரிக்கா தனது இலக்கை அடையும் பொருட்டு செய்தி ஊடகங்கள், இணையம், சினிமா என்று சகல வளங்களையுமே தன் சார்புக் கருத்துருவாக்கத்துக்காகப் பயன்படுத்துகின்றது. பலஸ்தீன் நிலத்தை ஆக்கிரமித்த இஸ்ரேலின் நிலையும் இதுவே. இன்றுவரை ஆக்கிரமிப்பு இஸ்ரேல் மேற்கொண்டுவரும் குரூரமான அடக்குமுறைகளையும் அடாவடித்தனங்களையும் கேள்வி கேட்பார் இல்லை. உலகெங் கிலும் உள்ள சுதந்திரத்தை விழையும், அதற்கு மதிப்பளிக்கும் மக்கள் குழுமங்கள் அவ்வப்போது அவ்வநீதிகளுக்கு எதிராய்க் குரல் எழுப்பி வந்தாலும் அதிகாரமிக்க அரசுகள் அவற்றை இலகுவாக அடக்கிவிடுகின்றன. அவ் அரசுகளுக்குச் சார்பான கார்ப்பரேட் ஊடகங்களும் அதற்கு ஒத்து ஊதுகின்றன.

இலங்கையை எடுத்துக்கொண்டாலும் இதுவே நிலைமை. தனதே நாட்டின் குடிமக்களில் ஒரு சாராருக்கு எதிரான அப்போரை ஊக்குவிக்கவும் பெரும்பான்மை இன மக்களின் மனங்களில் யுத்தவெறியையும் வீரப்பெருமித உணர்வையும் ஊக்குவிக்கும் வகையிலும் பண்டைய சிங்கள அரசர்களின் வீரப்பிரதாபக் கதைகள் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு சிங்கள சினிமாக்களாக வெளிவந்தன. சிங்களத் தேசியப் பெருமித உணர்வெழுச்சியூட்டும் பாடல்கள் பல புனையப்பட்டு மேடைகளில் பாடப்பட்டன. இலக்கியங்கள் படைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஹிம்சையைப் போதிக்க வேண்டிய பௌத்த ஆலயங்களிலே "சிங்கள இனம், சிங்கள தேசம், அவை அழியும் நிலையில் உள்ளதால் அவற்றைப் பாதுகாப்பதே நம் சமயக்கடமை" என்ற ரீதியிலான தேசிய இன உணர்ச்சி கிளர்ந்தெழும் வகையிலான பிரசங்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேடைகள் தோறும் அவை முழங்கப்பட்டன. கொல்லாமை அறத்தைப் போதிக்க வேண்டிய பிக்குகள் யுத்த சன்னத்தராய்க் குழுமி இருந்த இராணுவத் தினருக்கு ஆசி கூறி, ஆயுதங்களுக்குத் தெளிக்கப் புனிதநீர் வழங்கி நின்றனர். ஆக, இங்கே அறமும் அஹிம்சையும் ஆளும்தரப்பின் ஆதிக்கச் செல்வாக்கின் முன் விலைபோய் விட்டன என்பதையே இச்சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

இலங்கையில் மட்டுமல்ல, எகிப்தை எடுத்துக்கொள்வோம். அடக்குமுறை இராணுவ ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த மக்கள் வெள்ளத்தைக் கொன்றுகுவிப்பது ஆகுமானதே என்று ஜெனரல் ஸிஸிக்கு ஆதரவாக போலி ஃபத்வா வழங்கிய இஸ்லா மிய மார்க்க அறிஞரின் பிழைப்புவாதப் போக்கை அண்மைய கால வரலாறு பதிவு செய்துள்ளது. சார்வாகன் குறுநாவலிலும் இத்தகைய அவலநிலையைக் காட்சிப்படுத்தும் கதாசிரியர், அதனை எதிர்த்துக் கண்டிக்கும் நீதியின் குரலாய்,

"பாவிகளே உங்கள் அறிவின் அதிகாரத்தை ஏன் மக்களை அடக்கப் பயன்படுத்துகிறீர்கள்? ஆயுதம் ஏந்தி உயிர்பறிக்கும் அரக்கர்களுக்கு ஏன் நீங்கள் வக்காலத்து வாங்குகிறீர்கள்"? என்று சார்வாகனின் குரலைப் பதிவு செய்கின்றார்.

மேலும், மனிதர்கள் அனைவரும் சமமே என்ற கொள்கை உடையவர்கள் சாதி ஏற்றத் தாழ்வை எதிர்க்கவேசெய்வர். சாதிப் பாகுபாட்டைத் தொடர்ந்தும் நிலைநிறுத்த முனைவோர், தமது சுயலாபத்தின் பொருட்டே அதனைச் செய்கின்றனர் என்பது தெளிவு. மக்களைச் சாதியின் பெயரால் பிளவுபடுத்தி ஆதிக்கம் செய்து பயன்களைப் பெறவிழைவோரைச் சார்வாகனின் வழியே கடுமையாகச் சாடுகின்றார் கதாசிரியர்.

"யாராண்டால் என்ன? அவர்களின் பாதம் கழுவித் தம் வயிறு வளர்க்கும் இக்கூட்டத்தைப் பாருங்கள். அக்கினியை வளர்த்து ஆடுகளை அறுத்து ஆவியாக்கும் அறிஞர்களைப் பாருங்கள். தாம் படைக்கும் ஆவியைத் தேவர்கள் வந்து சாப்பிடுவார்கள் என்று கதைவிடும் கயவர்களைப் பாருங்கள். இவர்கள் கட்டிவிட்ட கதைகள் தான் நான்கு வர்ணம்." என்றும்,

"தர்மம் என்ற பெயரிலே அதர்மம் நடக்கின்றது..

வேத சூத்திரங்களின் துணையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதர்மம் தர்மமாக ஆதிக்கம் செலுத்துகின்றது.

நாலுவருண பாகுபாட்டையும் ஞாயப்படுத்துகிறது பிராமணதர்மம்.

அதற்கு எதிராக நான் குரல் தருகிறேன்." என்றும் இடம்பெறும் சார்வாகனின் கூற்றுக்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். உண்மையில், இதனை சாதிப்பாகுபாட்டுக்கு எதிரான குரலாக மட்டும் கருத முடியவில்லை. மாறாக, இன, மத, மொழி, பிரதேச பேதங்களுக்கு அப்பால் அதிகாரத்துக்குக் கூஜா தூக்கி மக்களின் நலனைவிட தமது வயிற்றுப் பிழைப்பே பிரதானம் எனக் கருதும் இடைத்தரகர்கள், புரோகிதர்கள் அனைவரையுமே சாடும் நியாயத்தின் குரலாகவே அது ஒலிக்கின்றது எனத் தோன்றுகின்றது. இதனையே பாரதி, "பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்று கூறிவைத்தான்.

இக்குறுநாவலில் ஆதிக்கமிக்க அதிகாரத் தரப்பைத் தொடர்ந்து கடும் விமர்சனத்துக்கு உள்ளாக்கும் கலகக் குரலாக ஒலிக்கும் சார்வாகனின் கூற்றாக முன்வைக்கப்படும், "அதிகாரம் சார்ந்த கருத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. உருவாக்கப்பட்ட கருத்துக்களுக்கு மக்களும் அடிமைகளாகி விடுகிறார்கள்" என்ற கருத்து பலவகையிலும் முக்கியமானது. உண்மையில், இன ரீதியாகவோ மத ரீதியாகவோ அல்லது பிராந்திய ரீதியாகவோ ஒன்றை மற்றொன்று மிகைத்து அடக்க முனையும்போது, அதனை எதிர்ப்பின்றி இயல்பான ஒன்றாக ஏற்றுக்கொள்வதற்கேற்ற பொதுசன அபிப்ராயம் திட்டமிட்ட முறையில் ஸ்திரமாகக் கட்டமைக்கப்படுகின்றது என்பதை மேற்போந்த வரிகள் துல்லியமாக எடுத்துரைக்கின்றன. மேலே எடுத்துரைத்தவாறு சினிமா, கலை, இலக்கியங்கள் மட்டுமன்றி, தலைமுறை தலைமுறையாக இத்தகைய பிரிவினைக் கருத்தியல்கள் ஊடு கடத்தப்படும் அபாயகரமான ஒரு காலகட்டத்தை வரலாறு கடந்துகொண்டிருக்கின்றது. நம் நாட்டு அரச பாடப்புத்தங்களில் வரலாறு பதியப்படும் விதத்தையும் அவை மாணாக்கரிடையே எடுத்துச் சொல்லப்படும் விதத்தையும் இதற்கு நல்லதோர் உதாரணமாகக் குறிப்பிடலாம். இதனை இன்னும் சற்று தெளிவுபடுத்துவதானால், ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பு, "ஆங்கிலேயப் படையெடுப்பு" எனவும் சோழரின் படையெடுப்பு "சோழ ஆக்கிரமிப்பு" என்பதாகவும் பதியப்படுவதன் பின்னால் உள்ள அரசியலும், இந்திய வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் "மொகாலயர் படையெடுப்பு" என்பது "இஸ்லாமியர் படை யெடுப்"பாகக் காட்டப்படுவதன் பின்னணி அரசியலும் ஆழ்ந்த கவனத்திற்குரியன. தமிழ் பேசும் மக்களை வந்தேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிகளாகவே தொடர்ந்தும் நிறுவ முனைதல், இலங்கையின் பூர்வ குடிகளாக இருந்த இயக்கரையும் நாகரையும் நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளாகக் காட்டியுள்ளமை என்பனவும் இதனோடு வைத்து எண்ணத் தக்கதே. அமெரிக்க வல்லாதிக்க அரசும் அதன் நட்புநாடுகளும் ஆப்கானியரையும் ஆபிரிக்கரையும் அரபிகளையும் இதேபோல் கட்டமைத்து தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திய, நிலைநிறுத்த முனையும் நிலையுடனும் இதனை ஒப்பிட்டு நோக்க முடியும்.

மேலும், "துரியோதனனுக்குரிய அத்தினாபுர நகரம் பாண்டவர்கள் கைகளுக்கு மாறிவிட்டது. அதிகாரத்தைக் கைப்பற்ற இரண்டு அதிகாரக் கும்பல்களுக்குமிடையே நடந்த யுத்தத்தில் நீங்கள் மந்தைகளாக யாரோ ஒருவர் பக்கம் நிற்கின்றீர்கள். வெறியுடன் ஒருவரை ஒருவர் கொன்றீர்கள். வெறியடங்கியது, பாண்டவர் வென்றார்கள், மற்றவர்கள் தோற்றார்கள், மக்களும் தோற்றார்கள்; "மக்களும் தோற்றார்கள்" என்ற வரிகளும்,

"வெற்றிக் களிப்பிலே பாண்டவர்கள் இருக்கின்றார்கள், வெற்றியா அது? சொந்த பந்தங்களின் பிணத்தின்மேல் கட்டப் பட்ட வெற்றியோர் வெற்றியா? ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட வெற்றி மகிழ்ச்சி தருமனின் முகத்திலே, அந்த யுத்தத்தை தர்ம யுத்தம் என்று ஞாயப்படுத்தும் கிருஷ்ணனின் வாதங்கள் வேறு" எனும் வரிகளும் சகோதர யுத்தத்தின் கொடூரத்தையும் கைசேதத்தையும் நம் கண்முன் நிறுத்துகின்றன. யார் யாரின் பொருட்டோ சாதாரணர்கள் எல்லாவற்றையும் இழந்து தவிக்கும் நிலையையும் மாறி மாறி ஆட்சிக்கட்டிலேறும் ஆளும் தரப்புகள் வெற்றிக் களிப்புடன் சகல சுகபோகங்களையும் துய்த்தபடி காலந்தள்ளப்போகும் யதார்த்தத்தையும் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார், கதாசிரியர். நம் நாட்டுத் தேர்தல் களங்களையும் இவ்வரிகள் நினைவூட்டத் தவறவில்லை.

இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது, அதிகார இயந்திரத்தின் கைப்பாவைகளாய் மதம், கலை, இலக்கியம், கல்வி முதலான அனைத்துத் துறைகளும் கைகட்டிச் சேவகம் செய்யும் அன்றைய நிலையைச் சார்வாகனின் ஊடாகக் கண்ணுற்றாலும், அது இன்றைய உலக அரசியல் நடைமுறைகளோடும் அச்சொட் டாகப் பொருந்திவருவதை நாம் அடையாளம் காணமுடிகின்றது.

அதிகாரத்தின் முன் உண்மை பேசுதல் என்பது மிகப் பெரிய சவால்தான். அத்தகைய மனிதர்கள் அதிகாரபீடங்களின் கொடூரக் கரங்களால் அடக்கியொடுக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டாலும், வரலாற்றில் மகத்தானவர்களாய் அவர்கள் இடம்பெற்றுவிடுகின்றனர். அதிகார வர்க்கத்தை நோக்கி மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்பாகக் கேள்வி எழுப்பி, நடந்த அநீதிகளைக் கண்டித்த சார்வாகனும் ஆளும்தரப்பினால் பழிவாங்கப்படுகிறான்; பொதுமக்களின் போர்வையில் பிரசன்னமான அதிகாரத் தரப்பின் அடியாட்களால் உயிரோடு எரியூட்டிக் குரூரமாகக் கொலை செய்யப்படுகின்றான். என்றாலும், அவனின் குரல் காலத்தை வென்றும் நிலைத்துவிட்டது. ஆம், மஹாபாரதக் கதையில் எங்கோ ஓர் ஓரத்தில் மறைந்திருந்த சார்வாகனின் கதாபாத்திரத்தின் வழியே பொதுமக்களின் சார்பான அவனது கலகக் குரலை, நீதிக்கான சாத்வீகக் குரலை மீண்டும் ஒலிக்கச் செய்த சி. மௌனகுரு நிச்சயம் பாராட்டுக்குரியவரே!

எளிய அழகிய தமிழ் நடையில், வாசிப்போரின் ஆர்வம் சற்றும் குன்றாத வகையில் கதையின் காட்சிகளை முன்னும் பின்னுமாகப் பொருத்தமாக நகர்த்தி ஒரு மேடை நாடகத்தைப் பார்ப்பதான உணர்வெழும் வண்ணம் தனது குறுநாவலை அவர் படைத்துள்ள விதம் சிறப்பானது. சமாதானத்தை விழையும் அனைத்து உள்ளங்களையும் இவ்வரிய படைப்பு தன்பால் ஈர்த்துக்கொள்ளும் என்பதோடு, இது நாடகமாக மேடையேற்றப்படுமானால் அக்குறுநாவல் சொல்லும் காத்திரமான செய்தி மக்களை மிக வேகமாகச் சென்றடையும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியையின் பிற நூல்கள்

1) எருமைமாடும் துளசிச் செடியும் (சிறுகதை)
2) வீசுக புயலே! (கவிதை)
3) தமிழ் மொழியும் இலக்கியமும்: சில சிந்தனைகள் (ஆய்வுக் கட்டுரை)
4) செ. கணேசலிங்கனின் அண்மைக்கால நாவல் களில் பெண் பாத்திரங்கள்: ஒரு பெண்ணிய நோக்கு (ஆய்வு)
5) ஒரு தீப்பிழம்பும் சில அரும்புகளும் (குறுநாவல்)
6) மௌனத்தின் ஓசைகள் (மொழியாக்கக் கவிதை)
7) வார்த்தைகளின் வலி தெரியாமல்... (குடும்பவியல் கட்டுரை)
8) பொருள் வெளி (ஆய்வுக் கட்டுரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பல்கலைக்கழக ஆசிரியன் என்ற வகையில் இந்த நூலின் வரவினை முக்கியத்துவமானதொன்றாகக் கருதுகின்றேன். ஈழத்தில் தமிழை விசேட கற்கைநெறியாகப் பயிலும் பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் தமது தேர்வுத்தேவைக்காக ஆய்வுக் கட்டுரையொன்றைச் சமர்ப்பிப்பது வழக்கமாகும். தேர்வு முடிந்தபின் ஒரு சிலரே அதனை நூலுருவில் கொண்டுவருகின்றனர். இந்நூலாசிரியையும் 'செ.கணேசலிங்கனின் அண்மைக்கால நாவல்களில் பெண்பாத்திரங்கள்: ஒரு பெண் நிலை நோக்கு' எனும் தனது இளங்கலைமாணிப்பட்ட ஆய்வினை நூலாகக் கொண்டுவந்து, பலரது பாராட்டையும் பெற்றுக்கொண்டார். இவ்வாறு தமது கன்னி ஆய்வினை நூலுருவில் வெளிக்கொணர்ந்தோர்கூட தொடர்ந்தும் வாசிப்பிலோ எழுத்து முயற்சியிலோ ஈடுபடுவது அரிதானதாகவே காணப்படுகின்றது.



இந்நிலையில், இந்நூலாசிரியை தொடர்ந்து ஆய்வு முயற்சிகளில் ஈடுபடுவதுமுதல், மொழிபெயர்ப்பு முயற்சிகள், படைப்பிலக்கிய முயற்சிகள் எனப் பல்துறை எழுத்து முயற்சிகளிலும் ஈடுபட்டு வருபவர். இவர் இதுவரை எட்டு நூல்களை வெளியிட்டிருப்பது இதற்கான சான்றாகும்.

அதுமட்டுமின்றி, இன்றைய ஈழத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் தாய்மொழி - தமிழ்மொழிப் புலமையைக்கூட போதியளவு வளர்த்துக்கொள்ளாத இன்றைய சூழலிலே இந்நூலாசிரியை தமிழில் மட்டுமின்றி ஆங்கிலப் புலமையும் சிங்களப் புலமையும் மிகுந்தவர் என்பதற்கும் அவரது எழுத்து முயற்சிகள் சான்று பகர்கின்றன.

**பேராசிரியர் செ. யோகராசா**

மணற்கேணி

விலை ரூ.80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org